ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 6 26 ஒக்டோபர் – 01 நவம்பர் 2000 முழக்கம்: 302

FORWARD CONSULTANTS
CONSULTING FOR PEOPLE
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

மற்றுமோர் யுத்தத்திற்கு மத்திய கிழக்கு தயாராகின்றதா?
– உலகக் கண் பக்கம்-11

சிறீலங்கா அரசின் கூலிக்குழுவினால் அடக்கப்பட்ட யாழ். குடாவின் குரலொன்று
பக்கம்-05

சந்திரிகாவுடன் இணைந்த ரணிலா? ரணிலுடன் இணைந்த சந்திரிகாவா ?
– பேபி பக்கம்-07

யாழ். குடாவில் சிறீலங்கா இராணுவம் செயலற்று போயுள்ளது
– பண்ணையார் பக்கம்-14

திருமலையில் கடற்படை மீது பாரிய தாக்குதல்

எம்.ஐ-24 – பீரங்கிக்கலம் – துருப்புக்காவிக் கப்பல் அழிப்பு

(23.10.00)

சிறீலங்கா அரசையும் முப்படைகளையும் மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய பாரிய தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் திருமலை துறைமுக வளாகத்தில் உள்ள சிறீலங்கா கடற்படை இறங்குதளம் மீது இன்று அதிகாலை 5.45 மணியளவில் மேற்கொண்டுள்ளனர். இத் தாக்குதலில் சிறீலங்கா கடற்படையின் பீரங்கிப்படகொன்றும், யாழ். குடாவிற்கு துருப்புக்களை காவிச் செல்லும் பாரிய கடற்கலம் ஒன்றும் சிறீலங்கா விமானப்படைக்கு சொந்தமான எம்.ஐ-24 ரக தாக்குதல் உலங்குவானூர்தி ஒன்றும் முற்றாக அழித்தொழிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் இரு கலங்கள் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

இத் தாக்குதலில் பல கடற்படையினரும் இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களுள் இராணுவ உயரதிகாரி ஒருவரும் அடங்கியுள்ளார். சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இத் தாக்குதலின் விபரம் வருமாறு...

அதி பாதுகாப்பு வலயங்களையும் கடற்கண்காணிப்பு கோபுரங்கள் பலவற்றையும் கொண்டிருக்கும் திருமலை துறைமுக வளாகத்தில் சிறீலங்கா கடற்படை இறங்குதுறை மேலும் பல பாதுகாப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. இத் தளத்திற்கு பாதுகாப்பாக கடலில் பல பீரங்கிப்படகுகள் 24 மணி நேர ரோந்து சேவையில் ஈடுபடுத்தப்படுவது வழக்கம். ஆனால், இன்று அதிகாலை 5.45 மணியளவில் சிறீலங்கா படையினரின் இந்த கடுமையான பாதுகாப்பு வேலிகளை எல்லாம் தவிடுபொடியாக்கி கடற்புலிகள் பாரிய தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)

4ம் ஆண்டு நினைவில்...

லெப். கேணல் நாதன்
கந்தையா பேரின்பநாதன்
(தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப்பொறுப்பாளர்)

கப்டன் கஜன்
கந்தையா கஜேந்திரன்
(தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகத்தின் நீண்டகால உறுப்பினர், ஈழமுரசு நிறுவக ஆசிரியர்)

இம் மாவீரர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாளான 26.10.2000 வியாழக்கிழமையன்று காலை எட்டு மணிக்கு, பாரிஸ் முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் உறவினர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, மாலை 4.30 மணிக்கு Cimetière de Pantin (M°:- Aubervilliers 4 Chemins) இல் அமைந்துள்ள இவர்களது கல்லறை மீது மலர்தூவி வணக்கம் செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

திருமலைத் தாக்குதல் யாழ். குடா இராணுவ விநியோகத்தில் நெருக்கடி

(23.10.00)

யாழ். குடாவிலுள்ள சிறீலங்கா படையினருக்கு திருமலை கடற்தளம் மற்றும் துறைமுகம் ஊடாக விநியோகங்களும் துருப்பினரின் பரிமாற்றமும் இடம்பெற்று வருவது வழமை. அத்துடன் வடக்கு - கிழக்கு கடற்பிரதேசத்தின் பாரிய கண்காணிப்பு நிலையாகவும் கடற்படையினருக்கு இக் கடற்படைத் தளம் விளங்கிவருகிறது. ஆகமொத்தம் சிறீலங்கா முப்படையினருக்கும் திருமலை இறங்குதுறை ஓர் கேந்திரமுக்கியத்துவமான மார்க்கம். இவ்வாறான நிலையில் இத்தளத்தினுள் விடுதலைப் புலிகள் நடாத்திய பாரிய தாக்குதலால் மேற்படி அனைத்து செயற்பாடுகளிலும் கேள்விக்குறி எழுந்துள்ளது. குறிப்பாக யாழ்குடா இராணுவத்திற்கான விநியோகத்தில் இத் தாக்குதல் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் ஏவுகணைத் தாக்குலில் இரு எம்.ஐ-24 வீழ்ந்தது - ஒன்று பலத்த சேதம்

(23.10.00)

விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படையணியின் ஏவுகணைத் தாக்குதலில் கடந்த நான்கு நாட்களுக்குள் சிறீலங்கா விமானப்படையின் பறக்கும் டாங்கி என வர்ணிக்கப்படும் எம்.ஐ-24 தாக்குதல் உலங்குவானூர்திகள் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டதுடன் ஒன்று பலத்த சேதமாக்கப்பட்டுள்ளது. இன்று காலை திருமலைக் கடற்பரப்பில் தாக்குதலில் ஈடுபட்ட கடற்புலிகள் மேல் தாக்குதல் நடாத்தவும், கடற்படையினருக்கு பாதுகாப்பு வழங்கவும் வந்த எம்.ஐ-24 ரக உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 19ம் திகதி வியாழக்கிழமை நாகர்கோவில் படைத்தளத்தின் முன்னணி காவலரண்களை கைப்பற்றி நிலைகொண்ட விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள்

(☞ 2ம் பக்கம்)

ஆறு கடற் கரும்புலிகள் வீரச்சாவு

(23.10.00)

இன்று காலை 5.45 மணியளவில் திருமலைக் கடற்படை துறைமுகத்தினுள் ஊடுருவி இரு கலங்களை மூழ்கடித்து, இரு கலங்களை பலத்த சேதத்திற்குள்ளாக்கிய வெற்றிகரமான தாக்குதலில், ஆறு கடற் கரும்புலிக் கொமாண்டோக்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

மாவீரர் தினத்தை (கார்த்திகை 27) முன்னிட்டு 02.12.2000 அன்று லண்டனில் நடைபெறும் மாவீரர் எழுச்சி நிகழ்வுகளை சிறப்பிக்கும் முகமாகவும், மாவீரர்களை கௌரவிக்கும் முகமாகவும் எமது நிறுவனம் முடப்பட்டிருக்கும்

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
RCS PARIS
B 399 673 110 (95B01491)
Directeur de la publication:
P. Velupillai
Redacteur: P. Sivaguru
Impression:
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 40 04 17, 40244 Langenfeld
Tel/Fax: 02102158108 / 0210228672
தர்சனன்: 01732620605
டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588
சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16
பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07801383857
பாஸ்கரன் - Tel: 07811040188
இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527
நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804
அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au
கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

தளத்தினுள் மழைபோல் எறிகணைகள் வீழ்ந்தன

(23.10.00)

திருமலை சிறீலங்கா கடற்படையின் இறங்குதுறை மீது விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் அணிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது இறங்குதுறையின் கடற்படைத் தளம்மீது புலிகள் கடுமையான எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியதாக கடற்படை வட்டாரங்கள் ஒத்துக்கொண்டுள்ளன. புலிகள் ஏவிய எறிகணைகள் மழையைப் போல தளத்தினுள் வீழ்ந்து வெடித்ததாகவும் இதனால் கடற்படையினரிடையே பெரும் பீதி ஏற்பட்டதாகவும் திருமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இறங்குதுறையில் அமைந்திருந்த பகுதிக்கு மேலான வான்பரப்பில் பாரிய வெளிச்சங்களும் தீச்சுவாலைகளும் எழுந்ததை தாம் கண்டதாக திருமலை மக்கள் தெரிவித்திருக்கின்றனர். அண்மைக்காலத்தில் திருமலை துறைமுகப் பகுதியில் இவ்வாறான வெடியோசைகளை தான் கேட்கவில்லை எனவும் திருமலை அரச உயரதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலையில்...

அதிகாலை கடற்புலிகளின் வலுவான படகு அணியொன்று கடற்படையினரின் இறங்குதுறை மீது மின்னல்வேக அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும் முகமாக உள் நுழைந்துள்ளனர். இக்கடலணியில் தற்கொடைப் போராளிகள் அடங்கிய கடற்கலங்களும் அங்கம் வகித்துள்ளன. கடற் புலிகளின் அணிகள் இறங்குதுறையினுள் பிரவேசிப்பதை கண்ட சிறீலங்கா கடற்கலங்களும் துறைமுகக் கடற்படையினரும் கடற் புலிகளின் அணிகள் மீது கடுமையான தாக்குதலை தொடுத்தபோதிலும் அத் தாக்குதல்களை எல்லாம் முறியடித்து இறங்குதுறையினுள் புகுந்த கடற்புலிகள் அங்கு தரித்து நின்ற பீரங்கிப் படகொன்றினையும் பாரிய துருப்புக்காவி கலம் ஒன்றின் மீதும் தாக்குதலை தொடுத்துள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான இவ்விரு கலங்களும் தீப்பிடித்து எரிந்து கடலில் மூழ்கியுள்ளன.

இறங்குதுறை மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்ளும் விடயம் விமானப்படையினருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்பட்டு மேலதிக உதவிகள் கடற்படையினரால் கோரப்பட்டதையடுத்து எம்ஐ-24 ரக தாக்குதல் உலங்குவானூர்தி கடற்புலிகளின் அணிகள் மேல் தாக்குதல் நடாத்தவென அப்பகுதிக்கு விரைந்துள்ளது. எனினும் தரையில் இருந்த விடுதலைப் புலிகளினால் இக்கலம் விமான எதிர்ப்பு ஏவுகணையினால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. சுட்டு வீழ்த்தப்பட்ட இக்கலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான உப்பாற்றுப் பகுதியிலேயே வீழ்ந்துள்ளது. இக்கலத்தினுள் செலுத்துநர் உட்பட மூன்று விமானப்படையினர் இருந்துள்ளனர்.

இதேவேளை, திருமலைத் துறைமுகத்திற்கு அருகே தரையிறங்கிய கடற்புலிகளின் அணிகள் மீது தாக்குதலை நடாத்தவென சிறீலங்கா இராணுவத்தினரும் மாபிள் பீச் பகுதியை நோக்கி சென்றவேளை விடுதலைப் புலிகள் அவ் இராணுவ அணிமீதும் கடுமையான தாக்குதலை தொடுத்துள்ளனர். இத் தாக்குதலில் இராணுவ உயரதிகாரி உட்பட பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். திருமலை இறங்குதுறை மீதான தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலமாக நீடித்ததாகவும், இத் தாக்குதலின் விளைவாக திருமலைக் கடற்படைத் தளத்திற்கும் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது இத் தாக்குதலின் விளைவாக இரண்டு கடற்படையினர் கொல்லப்பட்டு மேலும் 40 பேர் காயமடைந்ததாக கடற்படையினர் தெரிவித்துள்ள போதிலும் உயிரிழப்புக்கள் மிக அதிகம் என திருமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன. உயிரிழப்புக்களை படைத்தரப்பு மறைத்த போதிலும் கடற்கலங்கள், எம்.ஐ-24 அழிக்கப்பட்டதை அவை ஒத்துக்கொண்டுள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின்...

படையணி மீது தாக்குதல் நடாத்துவதற்கு வந்த உலங்குவானூர்திகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் எம்.ஐ-24 ரக உலங்குவானூர்தி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டு இன்னொன்று சேதமாக்கப்பட்டது. இதன்போது சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்குவானூர்தியில் பயணம்செய்த ஐந்து படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா வான் படையினரின் ஏழு எம்.ஐ-24 உலங்குவானூர்திகள் மூன்றாம் கட்ட ஈழப் போர் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. அத்துடன் மூன்றாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்து இத்துடன் சிறீலங்கா விமானப்படை தனது 35 வான்கலங்களை இழந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பரதநாட்டிய அரங்கேற்றம்

அன்புடையீர்,
சார்சல் தமிழ்ச்சோலை நடன ஆசிரியை
நடன மாமணி, நாட்டிய விசாரதா
திருமதி ஜீவா பிறேமதாஸ் அவர்களின் மாணவியும்
எமது புதல்வியுமான
செல்வி சொபியா அன்ரன்
அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும்
29.10.2000 ஞாயிற்றுக்கிழமை மாலை 16.30 மணிக்கு
நடைபெறவிருப்பதால், அவ் விழாவிற்கு வருகை
தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரங்கம்:
ESPACE AMORC
199bis, rue Saint Martin,
75004 Paris.
M°: Etienne Marcel
(Ligne: 4)

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி. அன்ரன்
திருமதி. ஜீவா பிறேமதாஸ்

ஆர். சகாதேவன்
அரசாங்க மொழிபெயர்ப்பாளர்
அகதிகள் கொமிசன் மொழிபெயர்ப்பாளர்

எமது மொழிபெயர்ப்புக்கள் பிரான்சில் உள்ள மேரி உட்பட்ட எல்லா அரச அலுவலகங்களாலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
புதிதாக அகதி அந்தஸ்து கேட்பவர்களுக்கு பிரான்சில் அரசியல் புகலிட வழிகாட்டி நூல் இலவசமாக வழங்கப்படும்.

மொழி பெயர்ப்பு அலுவலகம்
ஸ்ரீ பாரதி அச்சகம்
18 RUE CAIL, 75010 PARIS.
தொலைபேசி– 01 42 05 46 36 / 06 81 34 41 06

நித்தி வாகன சேவை
உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

Pub Fr

நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

à partir de

Bombay	-	3,900 Frs.
Delhi	-	3,900 Frs.
Bangkok	-	3,400 Frs.
Colombo	-	3,900 Frs.
Singapour	-	3,980 Frs.
Madras	-	4,300 Frs.
Londres	-	790 Frs.
New york	-	2,300 Frs.
Montreal	-	2,800 Frs.
Oslo	-	2,010 Frs.
Toronto	-	2,800 Frs.
Nepal	-	4,820 Frs.

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

முல்லையில் மந்த போசனை தாக்கம் அதிகரிப்பு

சிறீலங்காவின் கொடுமையான பொருளாதாரத் தடைகள் வன்னிப் பகுதிமீது தொடர்ந்து வரும் இந் நிலையில், முல்லைத்தீவுப் பிரதேசத்தில் 5 வயதிற்குட்பட்ட சுமார் 3000 சிறார்கள் போசாக்கின்மையால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். சிறீலங்காவில் கொடுமையான போர் தொடர்ந்துவரும் இந்நிலையில் மந்த போசனையின் தாக்கம் நாள்தோறும் வெகுவாக அதிகரித்துவருகின்றது. கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களிடையேயும் மந்த போசனைத் தாக்கம் அதிகரித்துள்ளதாக முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். கர்ப்பிணித் தாய்மார்களிடம் மந்தபோசனைத் தாக்கம் அதிகரித்துள்ளதால் அவர்கள் இரத்தசோகை நோய்க்கு உட்படுகின்றார்கள் எனவும், இதனால் வலுவிழந்த சிசுக்களை அவர்கள் பிரசவிக்கின்றார்கள் எனவும் தெரியவருகின்றது.

முல்லைத்தீவு வைத்திய அதிகாரியின் பிரிவில் தற்போது ஒரு வயதுக்குட்பட்ட 4401 குழந்தைகளும், 1-2 வயதிற்குட்பட்ட 693 சிறார்களும், 2-5 வயதிற்குட்பட்ட 1695 சிறார்களும் மிக மோசமான மந்த போசனைத் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. போசாக்கின்மை இந்தச் சிறார்களின் அறிவு வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கும் அதே வேளை அவர்கள், உடல் வலுவிலும் பின்தங்கியவர்களாகவே இருக்கும் அவலங்கள் உள்ளதாகவும் வைத்திய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட செய்தியாளரின் இறுதி நிகழ்வில் 4,000 பேர்

கடந்த வியாழன் 19ம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் சுமார் 4,000 மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டதாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக இவரது பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பின்னர் இரங்கல் கூட்டமொன்று நடாத்தப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

நிமலராஜனின் இல்லத்தில் நடாத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் பத்திரிகையாளர், மதகுரு உட்பட பலரும் உரையாற்றியுள்ளனர். அஞ்சலிக் கூட்டத்தையடுத்து சேமக்காலையை நோக்கி இறுதி ஊர்வலம் ஆரம்பமானது.

பின்னர் ஆயிரக் கணக்கானவர்களின் முன்னிலையில் அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

நிமலராஜனின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய சுயாதீனச் செய்தியாளர் தவச்செல்வம், யாழ்ப்பாணத்தில் தேர்தலில் போட்டியிட்டு அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட குழுவொன்று பத்திரிகையாளர்களை அராஜகத்தின் மூலம் அடிபணிய வைக்கலாமென நினைத்து இப்படுகொலையைச் செய்துள்ளதெனவும், இக்குழு இவ்வாறான வேட்டைகளை தொடர்ந்தும் நடாத்த முனையும்போது இவர்களின் மிரட்டல்களுக்கு பயந்து நாம் ஓடிஒழிக்கப்போவதில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.

தண்ணீரூற்றில் புதிய வனவிலங்குப் பூங்கா

போர்ச் சூழலால் உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளான சிறார்களின் மனமகிழ்ச்சிக்கென முல்லைத்தீவுத் தண்ணீரூற்றுப் பகுதியில் புதிய வனவிலங்குப் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவை முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி அமைத்துள்ளார். சிறார்களுக்கென இலவசமாகத் திறந்துவிடப்பட்ட இப்பூங்காவில் தமிழீழத்தின் வனவிலங்குகள் உட்பட பறவைகளும், ஊர்வன உயிரினங்கள் சிலவும் காட்சிக்காக வளர்க்கப்படுகின்றன. கரடி, மான், மரை உட்பட சில விலங்குகளும், வான்கோழி, கழுகு உட்பட பல பறவை இனங்களும் பாம்பு வகைகளும் பூங்காவில் காணப்படுவதாக முல்லைத்தீவுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பூங்காவை மேலும் விரிவாக்குவதற்காக பொதுமக்களின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது. சிறீலங்காவின் பொருளாதாரத் தடையாலும், இராணுவ நடவடிக்கைகளினாலும் இன்னலுக்குட்பட்ட சிறுவர்களின் மனமகிழ்ச்சியை காரணமாகக்கொண்டே இப்பூங்காவை அமைத்ததாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

நிமலராஜனின் இறுதிச் சடங்குகளுக்கு செய்தியாளர் செல்ல படையினர் தடை

யாழில் படுகொலை செய்யப்பட்ட செய்தியாளர் நிமலராஜனின் இறுதிக் கிரியைகளில் கொழும்புச் செய்தியாளர்கள் கலந்துகொள்வதற்கு திட்டமிட்ட போதிலும் செய்தியாளர்களின் யாழ். பயணத்திற்கு சிறீலங்கா இராணுவம் அனுமதி வழங்கவில்லை. தமக்கு அனுமதி வழங்க இராணுவம் மறுத்தது தொடர்பாக கொழும்புச் செய்தியாளர்கள் கண்டனம் தெரிவித்ததுடன், இராணுவத்தின் இந் நடவடிக்கை குறித்து தமக்கிடையே கூடி ஆராய்ந்துமுள்ளனர். இதே வேளை, இப்படுகொலை குறித்த கண்டனங்களும், சிறீலங்கா அரசே இப் படுகொலைக்குப் பொறுப்பேற்க வேண்டுமென்ற கோரிக்கைகளையும், பல்வேறு அமைப்புக்களும் வெளியிட்டு வருகின்றன.

மட்டக்களப்பில் படையினர் எறிகணைத் தாக்குதல்

மட்டக்களப்பு நகரிலுள்ள சிறீலங்காப் படையினரின் 233வது தளத்திலிருந்து கடந்த 18ம் திகதி நன்பகல் வேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கிக் கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. படையினர் ஏவிய எறிகணைகள் கண்ணன்குடா, குறிஞ்சாமுனை ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்து மக்கள் உடமைகளுக்குப் பெரும் சேதங்களை விளைவித்துள்ளன.

படையினரின் இந்த எறிகணைத் தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகளும், 233வது இராணுவத் தலைமையகத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

4ம் ஆண்டு நினைவு வணக்கம்

வீரச்சாவு: 26.10.1996



லெப். கேணல் நாதன்



கப்டன் கஜன்

ஓயாதஅலைகள்
ஒய்வில்லாப் பயணம்
விடிகாலை
வழிகாட்டும் தலைவன்

நிமிர்வின் பூபாளத்தில்
உங்கள் நினைவுகள்
உயிர்ப்பின் நாட்களிற்கான
எங்கள் தவம்

உங்களை
தாங்கி நிற்கின்றோம்!

- தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
- தமிழ்ப் பெண்கள் அமைப்பு – பிரான்ஸ்
- தமிழ் மாணவர் அமைப்பு
- தமிழர் கலை பண்பாட்டுக் கழகம்

ரெலோ முகாம்களில் படையினரின் வேட்டை

மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள ரெலோ முகாம்கள் மீது கடந்த 19ம் திகதி சிறீலங்கா இராணுவத்தினர் திடீர் தேடுதல் வேட்டைகளை நடாத்தி, அம்முகாம்களிலிருந்த ஆயுதங்களைப் பறிமுதல் செய்து கொண்டு சென்றுள்ளனர். சிறீலங்கா இராணுவத்துடன் ரெலோ இணைந்து செயற்பட்டு வந்தபோதிலும் அரசின் அவசரகாலச் சட்ட நீடிப்பிற்கு எதிராக சிறீலங்காப் பாராளுமன்றத்தில் வாக்களித்ததையடுத்தே இவ் ஆயுதக் களைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அரசின் அவசரகாலச் சட்டதை எதிர்த்து வாக்களித்த மறுநாளே இவர்களின் முகாம்கள் மீதான தேடுதல் வேட்டை இராணுவத்தால் நடாத்தப்பட்டுள்ளது.

ரெலோ முகாம்களிலிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக தற்பொழுது ரெலோவின் அரசியல் குழு ஆய்வுசெய்ததாகவும், ஆயுதக் களைவுக்குப் பின்னர் தமது உறுப்பினர்களுக்கு ஏற்படும் விபரீதங்களுக்குச் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பேற்க வேண்டுமெனவும் ரெலோ பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் வரலாற்றில் மிகப்பெரிய அமைச்சரவை

மாதாந்தச் சம்பளத்தொகை 2.3 மில்லியன்கள்

சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் மிகப் பெரியதொரு அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள இவ் அமைச்சரவையில் உலகின் பெரிய அமைச்சரவைகளில் ஒன்றெனவும் கருதப்படுகின்றது. சிறீலங்காவின் சனத்தொகை மற்றும் அதன் பரப்பளவோடு ஒப்பிடும்போது தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை மிகப்பெரியதென அரசியல் அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர். சிறீலங்கா ஒரு வறிய நாடாக இருக்கின்றபோது தற்பொழுது அமைக்கப்பட்ட அமைச்சரவையின் மாதாந்த சம்பளத் தொகைமட்டும் 2.3 மில்லியன் ரூபாய்களென தெரியவருகின்றது. இதனைவிட அமைச்சர்களுக்கான செலவினங்கள் மேலதிகமான கோடிக்கணக்கான ரூபாய்களாக இருப்பதால், புதிய அமைச்சரவை சிறீலங்காவிற்கு ஒரு பொருளாதாரச் சுமையாக மாறுமெனவும் பொருளியல் வல்லுநர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

தற்பொழுது 44 அமைச்சர்களும், மேலதிகமான 44 பிரதிய மைச்சர்களும் அமைச்சரவையில் இடம்பெறுகின்றனர். இவர்களுக்கான சம்பளத்தொகை மற்றும் வாகனங்களுக்கான எரிபொருள் செலவு, தொலைபேசிகள், கைத்தொலைபேசிகள், கணினிகள், கணினிகளுக்கான செலவுகள் உட்பட இவ் அமைச்சரவைக்கு பெருமளவான பணம் ஒதுக்கப்பட வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளது.

வவுனியா வர்த்தகர் தொடர்ந்தும் காவலில்

சிறீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்ட வவுனியா நகர வர்த்தகப் பிரமுகரான நடராசா சண்முகராசாவும், அவரது நிறுவனத்தின் காசாளரும் தொடர்ந்தும் சிறீலங்காப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுக் கடுமையான விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். கடந்த 19ம் திகதி இவரது வர்த்தக நிலையத்தை திடீரெனச் சுற்றிவளைத்த சிறீலங்காப் படையினர், அங்கு சுமார் 3 மணித்தியாலங்களாக கடுமையான சோதனைகளை நடாத்திய பின்னர் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் உட்பட அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் சிலரையும் கைதுசெய்து கொண்டுசென்றனர். இவர்களது கைதுகளுக்கு தகவல் தெரிவித்த வவுனியா இராணுவ வட்டாரங்கள், மேற்படி வர்த்தக நிலையத்தில் வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அதனை தாம் சோதனையின்போது மீட்டெடுத்ததால் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர்களைக் கைது செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளன.

தற்பொழுது மேற்படி வர்த்தக நிலையம் படையினரால் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகராக சரத் முனசிங்க

சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளராக இருந்த சரத்முனசிங்க தற்பொழுது சிறீலங்காப் பாராளுமன்றத்தில் பிரதிச் சபாநாயகராகப் பொறுப்பேற்றுள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் குருநாகல் தொகுதியில் போட்டியிட்ட சரத் முனசிங்க அங்கு வெற்றியடைந்திருந்தார். அதன்பின்னரே இவர் பிரதிச் சபாநாயகராக தெரிவு செய்யுப்பட்டுள்ளார். இவர், சிறீலங்கா இராணுவத்தின் பேச்சாளராக இருந்தபோது போர்க்கள செய்திகள் தொடர்பாக பொய்த் தகவல்களை வெளியிட்டு கடுமையான விமர்சனங்களுக்கு ஆளானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சபாநாயகராக ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரரான அநுரா பண்டாரநாயக்க (ஐ.தே.க) தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 40 வருட காலத்திற்குப் பின்னர் எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு நகரமண்டபத்தருகே குண்டு வெடிப்பு

கடந்த 19ம் திகதி காலை 10 மணியளவில் கொழும்பு நகர மண்டபம், விகாரமகாதேவி பூங்கா ஆகியவற்றிற்கருகே குண்டு வெடிப்பொன்று நிகழ்ந்துள்ளது. இக் குண்டுவெடிப்பில் மூவர் கொல்லப்பட்டும், 23 பேர் காயமடைந்துமுள்ளனர். காயமடைந்தவர்களில் மூன்று அமெரிக்கப் பெண்களும் அடங்குகின்றனர். இக்குண்டுவெடிப்பு தற்கொலை பாணியிலானதென சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்ட மூவரில் குண்டுதாரியும் அடங்குவதாகவும், சந்தேகத்திற்கிடமான குண்டுதாரியை பொலிசார் சோதனையிடமுயன்ற சமயமே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாகவும் சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். குண்டுதாரி வாகனமொன்றில் வந்தவரெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்திற்கு மேலும் 10,000 பேரைச் சேர்க்க முடிவு

சிறீலங்கா இராணுவத்திற்கு மேலும் பத்தாயிரம் பேரை அவசரமாக இணைப்பதற்கு இராணுவத் தலைமையகம் முடிவு செய்துள்ளது. தற்பொழுது கடுமையான ஆளணிப் பற்றாக்குறைக்கு உட்பட்டிருப்பதாலேயே இராணுவத் தலைமையகத்தால் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே பல தடவைகள் சிறீலங்கா இராணுவத்திற்கான ஆள் சேர்ப்புக்கள் நடைபெற்றபோதிலும், அதில் இராணுவ தலைமையகம் எதிர்பார்த்த அளவிற்கு பலன் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில் புதிய ஆட்சேர்ப்புக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. புதிய திட்டத்தின்படி 10,000 பேர் படையினருக்குத் திரட்டப்படவுள்ளதாகவும், நேர்முகத் தேர்வுகள் முடிந்ததும், உடனடியாகவே தேர்வுசெய்யப்படுபவர்கள் பயிற்சி முகாம்களுக்கு அனுப்பப்படுவார்களெனவும், பயிற்சிகள் முடிக்கப்பட்ட பின்னர் அவர்கள் இராணுவச் சேவையில் இணைக்கப்படுவார்களெனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆட்சேர்ப்பு இன்னும் ஓரிரு நாட்களில் ஆரம்பமாகலாம் எனவும் தெரியவருகின்றது.

சிறீலங்கா தகவல் துறை அமைச்சரும் கண்டிக்கின்றாராம்

யாழ். செய்தியாளர் நிமலராஜனின் படுகொலையை தானும் கண்டிப்பதாக சிறீலங்காவின் தகவல் தொடர்பு, ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன தெரிவித்திருக்கின்றார். அவர் தனது கண்டன அறிக்கையில் இதுவொரு காட்டுமிராண்டித்தனமான படுகொலையெனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

சிறீலங்காப் படையினராலேயோ அல்லது அவர்களின் ஆதரவுக் கும்பல்களாலேயோ இப்படுகொலை மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந் நிலையில், அமைச்சர் இக் கொலைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

சிறீலங்காவில் இருந்து உங்களுக்குத் தேவையான ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களைச் செய்ய, பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர...
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த / புதிதாக எடுக்க...
* உறவினர்களை அழைப்பதற்கான சிறீலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள் (இலங்கையில்)
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள்
* ஆவணங்கள் மொழிபெயர்த்தும் தரப்படும்.

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 - ராம்

திங்கள் - வெள்ளிக்கிழமை 04pm - 10pm

சனி ஞாயிறு 24 மணி நேரமும்

Pub. sw

பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு

திறந்த முறைப் பல்கலைக்கழக அமைப்பு

Open University System (OUS)

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமும், பாரிஸ் சர்வதேச உயர்கல்வி நிறுவன (International Institute of Higher Studies) திருவள்ளுவர் தமிழ் மேற்படிப்பு மையம் இணைந்து நடாத்தும் திறந்த முறை பல்கலைக்கழக (Open university System) பட்டப்படிப்பு.

தமிழ் மூலம் தமிழ் இளங்கலை - B.A 2000: 2001 ஆம் ஆண்டுக்கான சேர்க்கை அறிவிப்பு

அனுமதிக்கு முறையான கல்வித்தகுதி தேவையில்லை கல்வியை விரும்பும் எவரும் விண்ணப்பிக்கலாம்.

பாடங்கள்: தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், ஆங்கிலம், பிரெஞ்சு, மொழிப்பாடம், தமிழீழ வரலாறு.

தொடர்புகள்:
Le Directeur.
Institut International Des Etudes Supérieures
Centre d'études et d'Information
70,75 Rue Philippe de Girard. 75018 Paris.

Phone: 01 40 05 11 16.
Fax: 01 60 28 19 61
Web Site: www.iiES.FR.FM
E-Mail: Sachchithanantha@aol.com.

சிறீலங்கா அரசின் கூலிக்குழுவினால் அடக்கப்பட்ட யாழ். குடாவின் குரலொன்று

யாழ்.குடாவின் உண்மை நிலைகளை வெளியுலகிற்குக் கூறிக்கொண்டிருந்த குரல் ஒன்று சிறீலங்கா அரசின் கூலிக் குழுவினால் அடக்கப்பட்டுவிட்டது. சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள குடாநாட்டில், படையினரும் அவர்களுடன் இணைந்து இயங்கும் தமிழ்க் கூலிக்குழுக்களும் பொது மக்கள் மீது மேற்கொண்டு வந்த வன்முறைகளையும், அடாவடித்தனங்களையும் துணிவோடும், உண்மையோடும் உள்ளூர், சர்வதேச ஊடகங்களுக்கு கூறிவந்தவரும், மூன்று பிள்ளைகளின் தந்தையுமான மயில்வாகனம் நிமலராஜன்[38] என்ற பத்திரிகையாளர் சுண்டுக்குளியில் உள்ள அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 19ம் திகதி வியாழனன்று இரவு, வீட்டில் தனது அறையில் இரு-ந்து, செய்திகளை எழுதிக் கொண்டிருந்த வேளை, ஆயுதங்களுடன் உள்நுழைந்த குழுவொன்று, நிமலராஜனின் தந்தையை கத்தியால் குத்தி காயப்படுத்திவிட்டு அறையில் இருந்த நிமலராஜனை சுட்டுக்கொன்றுள்ளனர். பின்னர் கைக்குண்டு ஒன்றையும் வீட்டினுள் வீசி வெடிக்க வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். இதில் இவரது தந்தையும் தாயும், பிரசன்னா என்ற நிமலராஜனின் சகோதரியின் 11 வயது மகன் ஆகிய மூவரும் படுகாயமடைந்தனர்.

சிறீலங்கா அரச படைகளின் காவலரண் அமைந்திருக்கும் பகுதிக்கு அருகில் உள்ள வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படையினர் அமுல்ப்படுத்தியுள்ள ஊரடங்குச்சட்ட நேரத்தில், முகாமிற்கு மிக அருகில் நடைபெற்ற இப்படுகொலை படையினரிருக்கு ஆதரவானவர்களாலேயே நடாத்தப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகியுள்ளது. அத்துடன் துப்பாக்கிச் சத்தம் கேட்டாலே உடனடியாக அப்பகுதியைச் சுற்றிவளைக்கும் சிறீலங்காப் படையினர், தமது காவலரணுக்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் துப்பாக்கிசூடு நடைபெற்று கைக்குண்டு வெடிக்க வைக்கப்பட்ட பின்னரும் சுற்றிவளைக்கவோ, தேடுதல் நடத்தவோ முற்படவில்லை. வீட்டில் இருந்தவர்கள் ஓடிச்சென்று முகாமில் முறையிட்ட பின்னரும், இச்சம்பவத்தைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாது 'லான்ட் மாஸ்ரர்' வாகனம் ஒன்றை காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல கொடுத்தனுப்பியுள்ளனர். இதன் மூலம் படையினரும் இப்படுகொலைக்கு பின்னணியில் இருந்துள்ளனர் என்பது தெட்டத்தெளிவாகத் தெரியவருகின்றது.

ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்டு விட்டதாகக் கூறிக்கொ-ண்டு, ஆயுதங்களுடன் நடமாடும் இத் தமிழ்க்குழுவினர், சிறீலங்கா அரசு கடந்த 10ம் திகதி நடாத்திய பாராளுமன்றத் தேர்தலில் யாழ். குடாவில் பல்வேறு தில்லுமுல்லுகளை மேற்கொண்டு கள்ளவாக்குகளின் மூலம் தேர்தலில் வெற்றி பெற்றுக்கொண்டதாக காட்டியிருந்தனர். தீவுப்பகுதிகளில் 9ம் திகதி இரவே [வாக்களிப்பிற்கு முதல் நாள்] வாக்குப்பதிவுகளையும் இவர்கள் மேற்கொண்டு விட்டிருந்தனர் என்பது நிமலராஜன் போன்ற செய்தியாளர்கள் மூலமே வெளியுலகிற்கு தெரியவந்தது. இதனையடுத்தே இப்படுகொலை இடம்பெற்றிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படுகொலையை சர்வதேச மற்றும் உள்ளூர் செய்தி ஊடகங்களும்- பத்திரிகையாளர்களும் வன்மையாக கண்டித்துள்ளனர். யுத்தச் செய்திகளை நேரடியாகச் சென்று திரட்டி வருவதிலும், யுத்த அவலங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல்களை உலகறியச் செய்வதிலும், மனித உரிமை மீறல்களை சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்துவதிலும் துணிச்சலோடு செயற்பட்ட நிமலராஜன் ஆற்றிய பணி மறக்க முடியாதது என கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன், கண்டனப் பேரணிகளையும், அஞ்சலிக் கூட்டங்களையும் நடாத்துவதற்கு ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இதேவேளை, வன்னிப் பகுதியில் புலிகளின் குரல் வானொலி உட்பட வன்னிச் செய்தி ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என அனைத்து தரப்பினரும் வன்மையான கண்டனத்தையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துள்ளனர். யாழ். குடாநாட்டில் பத்திரிகை நிறுவனம் ஒன்றின் மீது ஈ.பி.டி.பியினர் குண்டு வீசி

தாக்கியதையடுத்து பத்திரிகை நிறுவனமொன்றை சிறீலங்காப் படையினர் மூடியதுடன், தமிழ் ஊடகவியளாளர் மீது மிரட்டல்கள் விடுக்கப்பட்ட நிலையில், பல தமிழ் ஊடகவியளார்கள் துணிச்சலான பணியிலிருந்து பின்வாங்கிக் கொண்டனர். இந்தச் சூழ்நிலையில் ஊடகத்துறைக்கு உயிர் கொடுக்கும் வகையில் நிமலராஜனே தனித்து நின்று செயற்பட்டு வந்தார். உடனுக்குடன் தகவல்களை பெற்று விரிவான முறையில் உண்மைத் தன்மையுடன் தமிழ், சிங்கள மொழிகளில் வழங்கும் ஆற்றல் அவரின் தனித்துவமாகும் என புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. ஊர்காவற்துறை தேர்தல் மோசடிகள் குறித்த செய்திகளை வெளியிட்டமைக்காகவே நிமலராஜனை ஈ.பி.டி.பி.யினர் எச்சரித்திருந்தனர் எனத் தெரிவிக்கும் ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன், ஈ.பி.டி.பி அமைச்சர் பொறுப்பு ஏற்ற அன்றே இப்படுகொலையை நடத்தியிருக்கின்றது எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை, பாரிசில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு சந்திரிகாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில், இலங்கையில் செய்தியாளர்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், 1988ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் 31 செய்தியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது. யாழ். குடாவில் இறுதியாக சுதந்திரமாகவும் துணிவோடும் செய்திகளை வழங்கி வந்த ஒருவரும் கொல்லப்பட்டுவிட்டார் என சர்வதேச ஊடகங்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க, நிமலராஜனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பலர் கலந்துகொண்டு இப்படுகொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து உரையாற்றினார்கள். யாழ். ப.நோ.கூ. சங்கத் தலைவர் கே.சிவஞானம் தனது உரையில், நிமலராஜனின் படுகொலை யாழ். மண்ணில் கார்மேகம் சூழ்ந்து வருவதன் அறிகுறியாகவே கருதவேண்டியுள்ளது. ஜனநாயக குரல்களை அழித்துவிட்டால் எத்தகைய படுபாதகச்செயல்களையும் புரியலாம் என நினைப்பவர்களே இக்கொலையைப் புரிந்திருக்கின்றனர். தேசப்பற்றும், மனிதநேயமும் மிக்க சிறந்த பத்திரிகையாளரை யாழ். மண் இழந்து நிற்கிறது எனத் தெரிவித்தார். சுயாதீன செய்தியாளர் தவச்செல்வம் தனது உரையில், யாழ்ப்பாணத்தில் ஜனநாயக வழிக்கு திரும்பியதாக கூறிக்கொண்டு தேர்தலில் போட்டியிட்டு அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட இக் குழு பத்திரிகையாளர்களை அடிபணியவைத்து தமது அராஜகத்தை நிலை நிறுத்தலாம் என நினைக்கிறது. அக்குழுவே இப்படுகொலையை புரிந்திருக்கிறது. இக்குழுவினர் நாளை என்னையும் வேட்டையாடலாம். இவர்களின் மிரட்டலுக்குப் பயந்து நாம் ஓடி ஒளிக்கப் போவதில்லை என உறுதிபடத் தெரிவித்ததுடன், நிமலராஜனை படுகொலை செய்துவிட்டு இந்தக் குழு அனுதாபம் தெரிவித்து, கண்டன அறிக்கையையும் வெளியிட்டுள்ளது. இதற்கு அரச ஊடகங்கள் அதி முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுவருகின்றன. கொலை செய்தவர்களே பத்திரிகைகளுக்கு கண்டன அறிக்கைகளை விடும் அரசியல் கலாசாரத்திற்கு முடிவு கட்டவேண்டும் எனவும் தெரிவித்தார். வணபிதா மைக்கல் அடிகளார் தமது உரையில், நிராயுதபாணியாக நின்று அல்லல்பட்டமக்களுக்காக குரல் கொடுத்து வந்த மனிதநேயனை, படுகொலை செய்தவர்கள் யார்? இவர்களின் இந்த படுகொலைக் கலாச்சாரம் இனியும் தொடருமா? மக்கள் சிந்திக்க வேண்டும். ஈவிரக்கமற்ற கொலைகாரர்களை இனங்கண்டு அவர்களுக்கு பாடம் புகட்டவேண்டும் எனத் தெரிவித்தார்.

> *நிமலராஜனின் படுகொலை யாழ். மண்ணில் கார்மேகம் சூழ்ந்து வருவதன் அறிகுறியாகவே கருதவேண்டியுள்ளது. ஜனநாயக குரல்களை அழித்துவிட்டால் எத்தகைய படுபாதகச் செயல்களையும் புரியலாம் என நினைப்பவர்களே இக்கொலையைப் புரிந்திருக்கின்றனர்.*

அஞ்சலிக் கூட்டத்தையடுத்து மாலை ஐந்து மணியளவில் யாழ். கொன்ஸ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெற்றது. இவ் இறுதி ஊர்வலத்தில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு இக் குழுக்களினதும், படையினரினதும் மறைமுக எச்சரிக்கைகளையும் முறியடித்துள்ளனர். இதேவேளை வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடிகள் பறக்க விட்டதுடன் அன்றையதினம் வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி தமது கண்டனங்களை தெரிவித்தனர். இதேவேளை, கொழும்பில் இருந்து இவரது இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதிகோரிய தமிழ், சிங்கள பத்திரிகையாளர்களின் பயணத்திற்கு சிறீலங்கா இராணுவம் அனுமதி வழங்க மறுத்துள்ளதையடுத்து அவர்களின் பயணமும் நிறுத்தப்பட்டது.

சிறீலங்கா ஆளும் அரசு; ஆட்சியில் நீடிக்க இப் படுகொலையை மேற்கொண்ட குழுவின் ஆதரவு அவசியம் என்பதால் இப்படுகொலை தொடர்பாக சிறீலங்கா அரசு எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காது என்பதுடன், இவ்வாறான படுகொலைகளை அரச ஆதரவுடன் யாழ். குடாவில் மேலும் தொடரும் எனவும் அஞ்சப்படுகிறது.

- கோபு

தலைமுடி, உதிர்கின்றதா?

கவலை வேண்டாம். தலைமுடி பாதுகாப்பு தயாரிப்பு

Naturina® நட்டுறினா

உங்கள் கவலையை போக்குகின்றது

நட்டுறினா தயாரிப்புகளான கூட்டுகுளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக உபயோகிப்பதன் மூலம் **தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம்** போன்ற குறைபாடுகளை தடுத்து நிறுத்தல்ாம். பயன் நிச்சயம்.

இத்தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு. **நட்டுறினா** இயற்கை மூலிகைகளின் கலவையில் தயாரிக்கப்பட்ட ஓர் உயிர்ப்பு கலவையாகும். இத் தயாரிப்பு எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

கடந்த இரண்டு வருடங்களாக ஆயிரக் கணக்கானவர்கள் நட்டுறினா தயாரிப்புக்களை ஜேர்மனியில் மட்டுமன்றி உலகின் மற்றும் பல நாடுகளிலும் உபயோகித்து சிறந்த பலனைப் பெறுகின்றனர்.

நட்டுறினா தயாரிப்புக்களை உபயோகிப்பதின் மூலம் தலைமுடி தொடர்பான குறைபாடுகளைத் தடுத்து நிறுத்தி தலைமுடியின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதுடன், சர்மத்தில் பளபளப்புத் தன்மையையும் பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம். **நட்டுறினா உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்.**

நீங்கள் மூன்று மாதங்களுக்குத் தேவையான நட்டுறினா தலைமுடிப் பாதுகாப்புத் தயாரிப்புகளை (3 ஷம்பு, 3 கூந்தல் தைலம், 3 கூட்டுகுளிகைப் பெட்டிகள்) ஒரே முறையில் பெறுவதற்கு விண்ணப்பித்தால் செலுத்த வேண்டிய தொகை, அனுப்பும் செலவு தனிப்பட 348,00 DM இவற்றை ஒவ்வொரு மாதமும் வாங்குவதற்கு விண்ணப்பித்தால் செலுத்த வேண்டிய தொகை அனுப்பும் செலவு தனிப்பட 419,55 DM. ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், சுவிஸ், டென்மார்க், நோர்வே, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வங்கி மூலம், வங்கி அட்டை மூலம் அல்லது அஞ்சல் அலுவலகம் ஊடாக பணம் அனுப்பும் விடயங்களுக்கும், அனுப்பும் செலவுகளுக்கும் தயவுசெய்து நேரடி தொடர்பு கொள்ளவும்.

CONTACT IN DENMARK:
Happy Enterprise, Ostervold -5 , 8900 Randers,
Phone + Fax : 086438027

மேலதிக விபரங்களுக்கு:
Intercare Handels Gmbh
Nassauer str.33-37, 59065 Hamm-Germany.
Tel: 0049 2381 915910 Fax: 0049 2381 91591-21

0049 2381 915910 - 0049 2381 9159115 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் எம்முடன் தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்.
வார நாட்களில்: 3.00 - 6.00 மணிவரை (ஜே.நேரம்)

Pub.Ger.

படையில் ஆட்பற்றாக்குறை மீண்டும் எலிவேட்டையும் ஆட்சேர்ப்பும்

(22.10.00)

சிறீலங்காப் படைக்கு ஆட்களைச் சேர்க்கும் நடவடிக்கையில் படைத்தலைமை மீண்டும் தீவிரமாக இறங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் கடந்த சில வாரங்களாக மேற்கொண்டு வரும் கடுமையான, தொடர்ச்சியான தாக்குதல்களால் பல நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டும், காயங்களுடனும் களமுனையில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர். இந் நிலையில் யாழ். குடாவை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதற்கும், புலிகளுக்கு எதிரான யுத்தத்தை அங்கு தீவிரப்படுத்துவதற்கும் உடனடியாக 10,000 படையினர் தேவையென அரசிடம் வலியுறுத்தியுள்ளது படைத்தலைமை.

நாளை திங்கள்கிழமையில் இருந்து, நவம்பர் 10ம் திகதிவரையான இருவார காலப்பகுதியில் துரிதமான ஆட்சேர்ப்பு இடம்பெறும் என சிறீலங்கா இராணுவத் தரப்பு கூறியுள்ள அதேவேளை, படையில் இருந்து தப்பியோடியவர்களை தேடிக்கண்டுபிடிக்கும் (முன்னர் எலிவேட்டை என இதற்கு பெயரிடப்பட்டிருந்தது) நடவடிக்கையில் பொலிசார் தீவிரமாக ஈடுபடவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், பொதுமக்களிடமும் தப்பி வந்துள்ள படையினர் பற்றிய தகவல்களை தந்துவுமாறு கோரிக்கையும் விடுத்துள்ளது. இதேவேளை படையில் இருந்து தப்பியோடி கைது செய்யப்பட்ட சிப்பாய் ஒருவர் கடந்தவாரம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் அப்படையினர் யாழ். குடாவில் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க சிறீலங்காவின் புதிதாக பதவியேற்றுள்ள அமைச்சர்களுக்கு விசேட பாதுகாப்புகளை வழங்க, விசேட பயிற்சிகள் பெற்ற ஆயிரக்கணக்கான படையினரும் பொலிசாரும் ஈடுபட உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த பாராளுமன்றத்தில் 31 அமைச்சர்கள் இருந்து, தற்போது அது 44 ஆக உயர்ந்துள்ளது. பிரதியமைச்சர்களையும் சேர்த்தால் 88 அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களாக உள்ளனர். அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், அவர்களிற்கு பாதுகாப்பு வழங்க, பாதுகாப்புப் பிரிவில் ஆட்கள் போதாமல் உள்ளதெனவும் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் அமைச்சர்கள் வெளியில் நடமாடுவதையும், பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதையும் தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இது குசும்புங்கோ...!

★ ஒரு மாகாணத்தைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் தேர்தல் நியாயமானதாகவும் 'அமைதியாகவும்' நடந்துள்ளது.

– சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா

☺ ☺ ☺

★ ஜனநாயக சூழலை உருவாக்க வேண்டும். கருத்துச் சுதந்திரமும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனவே பத்திரிகையாளர்களை கொலை செய்வதை கண்டிக்க மட்டுமல்ல தடுத்து நிறுத்தவும் முன்வரவேண்டும்.

– ஈ.பி.டி.பி. கூலிக்குழு, நிமலராஜன் படுகொலை தொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில்.

☺ ☺ ☺

★ போரின் மூலமே தீர்வுகாண புலிகள் விரும்புகின்றார்கள். பேச்சுவார்த்தையில் அவர்களுக்கு உடன்பாடில்லை.

– சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர்.

கொழும்பில் 47 குண்டுதாரிகள்

47 தற்கொலை குண்டுதாரிகள் கொழும்பில் தமது இலக்குகளை தேடி அலையும் செய்திகள் தமது புலனாய்வுத் துறையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். வெவ்வேறான பாணிகளில் இக்குண்டுதாரிகள் தாக்குதலை நடாத்துவார்களென தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு நகர் மண்டபத்திற்கருகே கடந்த வாரம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக சந்தேக நபர்கள் பலர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட இவ்வதிகாரி, இக்குண்டுதாரிகளுக்கான வெடிப்பொருள்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளினூடாக கொழும்பு நகருக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

தற்கொலைத் தாக்குதலை தடுக்க புதிய படையணி

(23.10.00)

கொழும்பு நகருக்குள் நடைபெறும் தற்கொலை தாக்குதல்களை முறியடிப்பதற்கு சிறீலங்கா இராணுவத் தலைமை, புதிய படையணியொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இப்புதிய படையணிக்குத் தேவையான சகல வசதிகளும் செய்யப்பட்டு வருவதுடன் விரைவில் இப்புதிய அணி இயங்கவுள்ளதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இப்புதிய அணியினர் துரிதமாக இயங்கும் வகையில், அதிவேக மோட்டார் சைக்கிள்களில் வீதிகளில் நடமாடவுள்ளதுடன் இவர்களிடம் நவீன ரக துப்பாக்கிகளும், தொலைத்தொடர்புக் கருவிகளும் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

டக்ளஸ் பீரிசுக்கு பிணை

சிறீலங்காவின் பொலிஸ் அதிகாரியான டக்ளஸ் பீரிசுக்கு கடந்த வாரம் நீர்கொழும்பு நீதிமன்றம் பிணை விடுதலையை வழங்கியுள்ளது.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் போது இப் பொலிஸ் அதிகாரி பல சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என தற்போதைய அரசினால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்.

பாரிஸ் மாநகரில்

மங்களகரமான திறப்பு விழா

அறிவாலயம் புத்தகசாலை
PARIS ARIVAALAYAM

★ இலங்கை இந்திய எழுத்தாளர்களின் அனைத்து வெளியீடுகள்
★ புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள்
★ இலங்கையில் பூபாலசிங்கம் புத்தகசாலையின் வெளியீடுகள், சென்னை தாமரைச் செல்வி, கோவை விடியல், பெங்களூர் 'கவ்லியா' வெளியீடுகள்.
★ டானியல், டொமினிக் ஜீவா, கணேசலிங்கம், யோகநாதன், செங்கை ஆழியான், ஜெயகாந்தன், கே. ராஜ்நாராயணன் போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்கள்.
★ பெண்ணியம், தலித்தியம், பின் நவீனத்துவம், தொடர்பான வெளியீடுகள்.
★ நவீன சினிமா தொடர்பான ஆய்வுகள், மேலும் உங்கள் வாசிப்பிற்கான அனைத்து வெளியீடுகளும்.
★ பாடசாலை, அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள்

காலம்: 28.10.2000

சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறும் எமது நிறுவனத்தின் திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- நிர்வாகத்தினர் -

PARIS ARIVAALAYAM (PAPETERIE)
7, RUE PERDONNET, 75010 PARIS.
TEL: 01 44 720334 / FAX: 01 44 720335
MET: LA CHAPELLE/ GARE DU NORD

சந்திரிகாவுடன் இணைந்த ரணிலா? அல்லது ரணிலுடன் இணைந்த சந்திரிகாவா?

சிறீலங்காவின் தேர்தல் நடவடிக்கைகள் பெரும் வன்முறைகளுடன் ஓய்ந்தாலும், அதன் சலசலப்புக்கள் இன்னமும் தொடர்கின்றன. இதன் ஒரு அங்கமாகக் கடந்த வாரமும் சிறீலங்காவில் சில முக்கிய நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. இரண்டுமே சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க விடயங்கள்.

1. சிறீலங்காவின் அமைச்சரவை வரலாற்றில் மிகப் பெரிய அமைச்சரவை அமைக்கப்பட்டமை.
2. சுமார் 40 வருடங்களுக்குப் பின்னர் எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பாராளுமன்றத்தில் சபாநாயகராக நியமிக்கப்பட்டமை.

மேற்கூறிய இரு விடயங்களில் முதலாவது விடயமான அமைச்சரவை அமைப்பு மிகவும் கேலிக்குரிய விடயமாக நோக்கப்படுகின்றது. 1994ம் ஆண்டில் சந்திரிகா சிறீலங்காவின் அரசியல் நீரோட்டத்தில் கலந்த வேளை, முன்னர் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரை பல விதத்தில் சாடியிருந்தார். அதில் குறிப்பிடத்தக்கவை, இரண்டு

1. ஐ.தே.க. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை.
2. ஐ.தே.க. அமைச்சரவையை அரசின் பணம் விரையமாக்கும் வகையில் அமைத்துள்ளது. என்பவையே சந்திரிகா அப்போது கடுமையாகச் சாடிய இரு விடயங்களாகும்.

ஆனால், தற்பொழுது அதே சந்திரிகா அந்த இரண்டு விடயங்களையுமே தனது தெரிவாக்கியுள்ளார். இம்முறை அமைக்கப்பட்ட 11வது பாராளுமன்றத்திற்கான அமைச்சரவையின் எண்ணிக்கை மிகப் பெரியளவாக அதாவது 88 அமைச்சர்களைக் கொண்ட சபையாக அது அமைத்திருக்கின்றது. நாட்டின் வரியிறுப்பாளர்களின் வரியினை விழுங்கிக் கொள்ளும் இந்த அமைச்சரவை சிறீலங்காவில் ஏற்கெனவே சீர்கெட்டிருக்கும் பொருளாதாரத்தைமேலும் மோசமாக்கும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை. இவ்வேளை இங்கு ஒரு கேள்வி எழும்புகின்றது. பொருளாதாரம் மோசமாக இருக்கும்வேளை சந்திரிகாவிற்கு இவ்வாறான ஒரு பெரிய அமைச்சரவையை ஏன் அமைக்கவேண்டி வந்தது? இதுதான் அக்கேள்வி.

பேம்பி

இதற்கான விடை மிகச் சுலபமானது. தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியிருந்தாலும், அவ்வெற்றி காத்திரமான பாராளுமன்றமொன்றை அமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கவில்லை. இதனால், சில பங்காளிகளின் உதவியை நாடவேண்டிய நிலமை சந்திரிகாவிற்கு ஏற்பட்டது. அந்தப் பங்காளிகளாக ஈ.பி.டி.பி.யும், முஸ்லீம் காங்கிரசின் தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியும் வந்து சேர்ந்தன. ஏற்கெனவே பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற கட்சி 7 கட்சிகளை உள்ளடக்கியுள்ள நிலையில் புதிதாய் இணைந்த பங்காளிகளுடன் சேர்ந்து மேலும் விரிவாகியது. ஆகையினால், அந்தக் கட்சிகளையெல்லாம் கைக்குள் வைத்துக் கொள்ளவேண்டுமானால் அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும், சந்திரிகாவிற்கு ஏற்பட்டது. பங்காளிகளும் சும்மாயிருக்கவில்லை. எமது கட்சிக்கு இவ்வளவு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் வேண்டுமென வெளிப்படையாகவே நெருக்கத் தொடங்க சிறீலங்காவின் வரலாற்றில் மிகப் பெரிய அமைச்சரவையொன்று அமைந்துவிட்டது. சந்திரிகாவிற்கு இதைச் செய்வதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை. இதுவொரு வேடிக்கையான அமைச்சரவை. அரசியலில் ஒருசில வார அனுபவங்களே உள்ள திருமதி.பேரியல் அஸ்ரப்பும் ஒரு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இது சிறீலங்காவின் இன்றைய அரசியல் வங்குரோத்துத் தனத்திற்கு நல்ல எடுத்துக்காட்டு.

சிறீலங்காவின் நிலப்பரப்பளவிலும், அதன் சனத்தொகையோடும் ஒப்பிடும்போது அமைக்கப்பட்டிருக்கும் அமைச்சரவை மிகப் பிரமாண்டமானது. பெரிய பெரிய நாடுகளில் கூட இவ்வாறான பெரிய அமைச்சரவை அமைவதே அபூர்வம்!

ஆகமொத்தம் அமைக்கப்பட்டுள்ள இவ் அமைச்சரவையில் எல்லாரையும் திருப்திப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே அமைந்திருக்கிறதே தவிர நாட்டின் நலனைக்கொண்டு அல்ல என்பது வெளிப்படையான விடயம். இந்த அமைச்சரவை அமைக்கப்பட்டதற்குப் பின்னர் தமது பலவீனமான நிலை என்னவென்பது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மிகத் தெளிவாகத் தெரிந்துவிட்டதால், அவர்கள் புதியதொரு வியூகத்தில் அரசியலை நகர்த்த தற்போது முனைகின்றார்கள். குறிப்பாக ஈ.பி.டி.பி. யினரும், முஸ்லீம் காங்கிரசும் தமது அமைச்சரவைக்கு எந்த நேரமும் ஒரு

அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கலாம் அல்லது போகப்போக மேலும் அதிகமான சலுகைகளை அவர்கள் கோரலாம் என்ற பயம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு அதிலும் குறிப்பாக சந்திரிகாவிற்கு தற்பொழுது எழுந்திருக்கின்றது. சிறீலங்காவின் பிரதமரான ரட்ணசிறி விக்கிரமநாயக்காவே இந்நிலைமையை தெளிவாக ஒப்புக் கொள்கின்றார். இப்படியானதொரு நிலையில் நாம் தொடர்ந்தும் செல்ல முடியாதென வெளிப்படையாகவே தெரிவித்த அவர் சந்திரிகாவின் அனுமதியோடு புதியதொரு காரியத்தை நகர்த்தியுள்ளார். ஈ.பி.டி.பி.யிடமும், முஸ்லீம்களிடமும் நாம் ஏன் கையேந்தவேண்டும், எம்மைப்போலவே பேரினவாதத்தில் ஊறித்திளைத்த ஐக்கிய தேசியக் கட்சியோடு நாம் நட்புறவு பாராட்டி, சிறீலங்காவின் பெளத்த சிங்கள நிலையை இன்னும் பெரிய விஸ்தாரம் ஆக்கினால் என்ன? என்பது இந்தப் பேரினவாதிக்கு உதித்த புதிய சிந்தனை. இதனால்தான், தற்பொழுது ஐ.தே.கட்சியுடன் உடன்படிக்கைகள், மற்றும் அவர்களுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைப்பது தொடர்பான சாத்தியக் கூறுகளைப் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆராய்கின்றது. இதன் முன்னோடியாகத் தான் ஐ.தே.கவின் அநுரா பண்டாரநாயக்காவிற்குப் பாராளுமன்ற சபாநாயகர் பதவி வழங்கப்பட்டது. தேர்தலுக்கு முன்னர் ஒருவர்மீது ஒருவர் சேற்றை வாரி இறைத்தது மட்டுமல்லாது, ஒருவரையொருவர் கொலைசெய்வதற்கும் திட்டம் தீட்டினார்களென சந்திரிகாவும், ரணிலும் மாறிமாறி பொதுக்கூட்ட மேடைகளில் தெரிவித்திருந்தபோதிலும், தற்பொழுது நெருங்கிவருவது பற்றி இவர்கள் பேசத்தொடங்கியுள்ளது சிறீலங்காவின் நெறிகெட்ட அரசியலுக்கும், அங்கு குடிகொண்டிருக்கும் மாற்ற முடியாத பேரினவாதத்திற்கும் மீண்டுமொரு எடுத்துக்காட்டாகவும் வந்துள்ளது.

ஐ.தே.க.வும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைவதுகூட தமிழ்த் தேசியத்தை அழித்தொழிப்பதென்ற அடிப்படையான தளத்திலிருந்துதான் உருவாகின்றது. நாம் ஒன்றாகச் சேர்ந்து ஏன் தமிழ்த் தேசியத்தை அல்லது தமிழர் தாயகத்தை ஒடுக்கக் கூடாது என்ற நாசகாரச் சிந்தனைகளும் தற்பொழுது இவர்களிடம் விஸ்வரூபமாகி இருக்கின்றது. என்றாலும் இந்தப் பேரினவாதப் பூதங்களின் வெறித்தனத்திற்கு தமிழர் தாயகம் தோற்றுவிடுமா? காலம் பதில்சொல்லும்.

திரைப்பட ரசிகப் பெருமக்கள் அனைவர்க்கும்
எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

29/10/00 ஞாயிறு 6.15- 9.15
01/11/00 புதன் 6.15 விடுமுறையை முன்னிட்டு

LE TRIANON
80 Bd BARBES - Metro : ANVERS

சிவா : 06 61 55 11 43
வெற்றி : 01 48 01 02 69
: 06 61 56 11 43
: 06 03 02 52 47

WWW.MURUGANMOVIES.COM
WWW.PARISTAMIL..COM/MURUGAN

டைரக்ஷன் நினைத்தேன் வந்தாய் புகழ் செல்வபாரதி
சண்டைப்பயிற்சி கனல் கண்ணன்
நடனம்: ராஜுசுந்தரம்
இசை இசை அருவி எஸ்.ஏ.ராஜ்குமார்
ஒளிப்பதிவு: ஆர். செல்வா
பாடல்கள்: வாலி, பா. விஜய்

இளைய சூப்பர் ஸ்டார் விஜய்
கனவுக்கன்னி சிம்ரன்
ராதிகாசௌத்திரி
எஸ்.பி.பாலசுப்பிரமணியம்
விவேக்
வையாபுரி
டெல்லிகணேஸ்
தலைவாசல் விஜய்
கசான்கான்
மற்றும் பலர்

வீரப்பன் கோரிய தமிழர்கள் விடுதலைக்கு நீதிமன்றம் தடை

கன்னட நடிகர் ராஜ்குமார் விடுதலைக்கு வீரப்பன் கோரிய 51 கைதிகளில் விடுதலைக்கு உச்ச நீதிமன்றம் தடைவிதிக்கலாமென நம்பப்படுகின்றது. கடந்த 16, 17,18 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் இத்தடை தொடர்பான விடயங்கள் நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இது தொடர்பாக நீதிபதி கூறுகையில்,

ராஜ்குமார் தமிழ்நாட்டு எல்லைக்குள் அமைந்துள்ள கஜனூர் பண்ணை வீட்டில் வீரப்பனால் கடத்தப்படும் அபாயம் இருந்தும், தமிழக அரசால் பாதுகாப்புத் தரப்படாததை உச்ச நீதிமன்றம் மன்னிக்க முடியாதது என்று கூறியதுடன், வழக்கு விசாரணை வரும் 30ம் தேதிக்குப் பிறகு ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தனர். 'தமிழர்களை விடுதலை செய்வது தொடர்பாக மைசூர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு பயங்கரமானது. பயத்தின் அடிப்படையில் அவசர அவசரமாக எடுக்கப்பட்ட முடிவு. குற்றம்சாட்டப்பட்டவர்களை தற்போது விடுவிக்கும் எண்ணம் உச்சநீதிமன்றத்துக்கு இல்லை'. இக் கைதிகளை விடுவித்தால் மட்டும் ராஜ்குமார் விடுதலை செய்யப்படுவார் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்றும் கேள்வி எழுப்பினார். நீதிபதி மேலும் கூறுகையில்,

வீரப்பன் பிரச்சினையில் தற்போதைய மாநில அரசுகளை நாங்கள் குறை கூறவில்லை. கடந்த 10 ஆண்டுகாலமாகச் செயல்பட்ட அரசுகளையே விமர்சிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

கர்நாடக அரசு சார்பில் வழக்கில் ஆஜரான அரசு வழக்கறிஞர் சால்வே, நடிகர் ராஜ்குமாருக்கு ஏதேனும் நேர்ந்தால் கர்நாடகத்தில் உள்ள மொழிச் சிறுபான்மையினருக்குப் பாதிப்பு ஏற்படும்' என்று கூறினார். இது குறித்து கருத்துத் தெரிவித்த நீதிபதி பரூச்சா, எந்த அரசும் வன்முறையைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூற முடியுமா? ஆம் என்றால் அந்த அரசுகள் பதவிவிலக வேண்டும்' என்று கூறினார்.

ராஜ்குமார் உயிருக்கு ஏதேனும் நேர்ந்தால் தமிழ்நாடு, கர்நாடக அரசுகளே முழுப் பொறுப்பு ஏற்கவேண்டுமென்று கூறியுள்ள உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் 2565 பேர் உயிரிழப்பு

ஜம்முஷகாஷ்மீர் மாநிலத்தில் 2000ம் ஆண்டில் நடைபெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் 2565 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 635 இந்திய இராணுவத்தினர், 1210 காஷ்மீர் விடுதலை கேட்டுப் போராடும் போராளிகள், 70 பொதுமக்கள் என காஷ்மீர் மாநில உட்துறை அமைச்சர் முஸ்தாக் சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார்.

பீகாரில் 16 பேர் படுகொலை ஐந்து பேரின் தலைகள் துண்டிக்கப்பட்டன

பீகாரில் கிராமம் ஒன்றில் நுழைந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத குழுவொன்று 11 பேரைச் சுட்டுக் கொன்றதுடன், ஐந்துபேரது தலையை துண்டித்துப் படுகொலை செய்துள்ளனர்.

பீகார் சிவன் மாவட்டத்திலுள்ள முஜாகித்பூர் கிராமத்தில் கடந்த செவ்வாயன்று நள்ளிரவுக்குப் பின்னர் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்டவர்களில் 11 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு சமூகங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக, இரு பகுதியினரும் மாறி மாறி படுகொலைகள் நடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரவு நேரங்களில் திடீர் திடீர் என குழுக்களாக ஆயுதங்களுடன் கிராமங்களுக்குள் நுழையும் இவர்கள் வீட்டினுள் இருப்பவர்களை வெளியே இழுத்து வந்து வெட்டியும், சுட்டும் படுகொலை செய்துவிட்டு, தப்பியோடிவிடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்தவாரம் தலைதுண்டித்துக் கொல்லப்பட்ட ஐவரில், மூவர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்தார் சரோவர் அணைகட்டும் திட்டத்திற்கு நீதிமன்றம் அனுமதி

சர்ச்சைக்குரிய நர்மதை ஆற்றின் குறுக்கேயுள்ள சர்தார் சரோவர் அணைகட்டும் திட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. சுமார் 18 ஆயிரம் கோடி ரூபா செலவில் திட்டமிடப்பட்ட இவ் அணைகட்டும் வேலைகள், அணைகட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் ஒன்றினால் தொடரப்பட்ட வழக்குக் காரணமாக தடைசெய்யப்பட்டிருந்தன. தற்போது நீதிமன்றம் 135 அடி உயரம் வரையும் இவ் அணையை கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இவ் அணை கட்டப்பட்டால் குஜராத், மாராட்டியம், மத்திய பிரதேசம் ஆகிய மூன்று மாநில மக்கள் பெரும் பயன் அடைவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ் அணை கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இயக்கத்தில் உள்ள எழுத்தாளர் அருந்ததி ராய் உட்பட பலர் இத் தீர்ப்பின் மூலம் ஜனநாயகம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்றும், அணை கட்டுவதற்கான எதிர்ப்புப் போராட்டம் வெற்றிபெறும் வரை தொடரும் எனவும் அறிவித்துள்ளனர்.

இந்தியச் செய்திகள்



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் இருக்கும் முருகன், தனது ஓய்வு நேரத்தில் வரைந்த அவரது குடும்பப்படம் இது. வேலூர் பெண்கள் சிறையில் இருக்கும் தனது மனைவி நளினி, இலங்கையில் இருக்கும் தனது மகள் ஸ்ரீஹரி ஆகியோருடன் தான் ஒன்றாக இருப்பதுபோன்று கற்பனையில் வரைந்துள்ள படம். இவர் தனது ஓய்வு நேரங்களில் ஏராளமான அரசியல் மற்றும் விடுதலைத் தலைவர்களின் படங்களையும் வரைந்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மீது வழக்குத் தாக்கல்

முன்னாள் பிரதமர் சந்திரசேகர், தான் பதவியில் இருந்த காலத்தில் தனது சொந்தத் தேவைகளுக்காக இந்திய விமானப்படையின் விமானங்களைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மத்திய அரசு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில், விமானப் படையின் விமானத்தைப் பயன்படுத்தியமைக்காக 5.91 கோடி ரூபா அரசுக்கு செலுத்த வேண்டுமென மனுவில் கோரியுள்ளது.

அத்துடன் முன்னாள் பிரதமர்கள் நரசிம்மராவ், தேவ கௌடா, சந்திரசேகர் ஆகிய மூன்று பேர் அரசுக்கு கட்ட வேண்டிய 11,55 கோடி ரூபாவைப் பாக்கியாக வைத்துள்ளனர் எனவும், அதனை வசூலித்துத் தரும்படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

மரண அறிவித்தல்

திருமதி கனகேஸ்வரி மருதலிங்கம்

பிறப்பு: 10-02-1938 இறப்பு: 17-10-2000

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும், முன்னாள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியையுமாகிய திருமதி. கனகேஸ்வரி மருதலிங்கம் 17-10-2000 அன்று லண்டனில் சிவ்பதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி. கணபதிப்பிள்ளை பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி. சுப்பையா தங்கம்மாவின் அன்பு மருமகளும், திரு. சுப்பையா மருதலிங்கத்தின் (மகாலிங்கம்) அன்பு மனைவியும், திருமதி. சு.துஸ்யந்தினி (லண்டன்), செல்வன் உமாபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. தனபாலசிங்கம் சுதர்சனின் அன்பு மாமியாரும், செல்வன் சுதர்சன் மதுரனின் பேத்தியாரும், காலஞ்சென்ற திருமதி. நாகம்மா, காலஞ்சென்ற திரு. பாலசிங்கம், திரு.கந்தசாமி, திருமதி.தங்கம்மா, காலஞ்சென்ற திரு.முருகேசு, திரு.நடராஜா (இளைப்பாறிய ஆசிரியர் - புதிய கலைவாணி புத்தக நிலையம், கண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி. க. நல்லம்மா (கொழும்பு) இளைப்பாறிய ஆசிரியை திருமதி. மதியாபரணம் இராசம்மா, திருமதி.நடராசா யோகம்மா, இளைப்பாறிய ஆசிரியைகள் திருமதி. பசுபதிப்பிள்ளை புவனேஸ்வரி (அவுஸ்திரேலியா), திருமதி. மகாலிங்கசிவம் மகாலட்சுமி (டென்மார்க்) இளைப்பாறிய ஆசிரியர் திரு. சு. இரட்ணவேல் (Y.M.C.A பண்டத்தரிப்பு ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 21-10-2000 அன்று லண்டனில் நடைபெற்றன. ஈமைக் கிரிகைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் பரிமாறிக்கொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

T.P. London - 02085608718
France - 01 43 088481 / Canada - (416) 746-8569

இங்ஙனம்,
கணவன், பிள்ளைகள்.

Pub.Fr.

சோனியாவின் குற்றச்சாட்டுக்கு கருணாநிதி மறுப்பு

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனை ராஜ்குமார் மீட்பு தூதர் குழுவில் அனுப்பியது, தமிழ்நாடு அரசின் தன்னிச்சையான முடிவு என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான பழ.நெடுமாறனை அனுப்பியது கண்டனத்துக்குரியது என்றும் காங்கிரஸ் தலைவர் சோனியா கூறிய கருத்துக்கு தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி மறுப்புத் தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் கருணாநிதி, 'வீரப்பனிடமிருந்து தகவல் கிடைத்ததும் நெடுமாறன், கல்யாணி, சுகுமாரன் ஆகியோரை அனுப்புவது குறித்து கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவுடன் ஆலோசனை நடத்த நக்கீரன் இணை ஆசிரியர்

காமராஜ் அனுப்பி வைக்கப்பட்டார். அதன் பின்னர் கிருஷ்ணாவும் நெடுமாறனும் பேசினர். இதையடுத்தே நெடுமாறன் காட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

ராஜ்குமார் விடுதலைதான் தற்போது முக்கியம் என்பதால், விரிவான விளக்கம் அளிக்கவில்லை என்றும் முதல்வர் கருணாநிதி கூறினார்.

'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்துக்கு சான்றிதழ் மறுப்பு கலைஞர்கள் உண்ணாவிரதம்!

'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்துக்குச் சான்றிதழ் வழங்காமல் இழுத்தடிப்பதாகக் கண்டனம் தெரிவித்து, அந்தப் படத்தில் நடிக்கும் நடிகர் நடிகைகளும், அதில் பணியாற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களும் வருகிற 23ம் தேதி அடையாள உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளனர். இதுதொடர்பாக, படத்தின் தயாரிப்பாளர் த.வெள்ளையனும், இயக்குநர் புகழேந்தியும் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தனர். தாய் மூவி மேக்கர்ஸ் சார்பில் த.வெள்ளையன் தயாரிக்கும் படம் 'காற்றுக்கென்ன வேலி' இளையராஜா இசை அமைப்பில் புகழேந்தி இயக்கியுள்ள படம்.

இராணுவச் சீருடையில் பலத்த காயங்களுடன் தமிழீழத்தில் இருந்து 18 வயதுப் பெண் ஒருவர் சிகிச்சைக்காக தமிழ்நாட்டுக்கு வருகிறார். நாகைக்கு வந்துசேரும் அவருக்குச் சிகிச்சை அளிக்க மறுக்கும் மருத்துவர், கடைசியில் உயிருக்குப் போராடும் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற சிகிச்சை அளிக்கின்றார். அதனால், சிகிச்சை அளிக்கும் மருத்துவர் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுகின்றார். இதனால், மனம் நொந்துபோன அந்தப் பெண், மருத்துவருக்கு நேர்ந்த கொடுமைகளை எண்ணி தாயகம் திரும்ப நினைக்கிறார். இந்த மனிதநேய உணர்வுகளைத்தான் 'காற்றுக்கென்ன வேலி'யில் இடம்பெற்றுள்ளன. இதனால் இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான படம் என்றும், இந்திய சிறீலங்கா உறவைப் பாதிக்கும் என்றும் காரணம் கூறி சான்றிதழ் வழங்க மறுக்கப்பட்டுள்ளதென தயாரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இந்தத் திரைப்படத்தில் பணிபுரிந்த கலைஞர்கள் அனைவரும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடாத்த இருக்கிறார்கள். சென்னையில் உள்ள சினிமா வர்த்தக சபை வளாகத்தில் 23ம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இப்படத்தில் கதாநாயகியாக சுஜிதா அறிமுகமாகின்றார். மற்றும் குஷ்பூ, சந்திரசேகர், அருண்பாண்டியன் ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இன்டர்நெட் மூலம் கைதிகளிடம் விசாரணை

சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றங்களுக்கு கைதிகளை அழைத்துச் செல்லும்போது ஏற்படும் சிரமங்களை தவிர்ப்பதற்காக, இன்டர்நெட் மூலம் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுடன் நேரடியாக நீதிமன்றம் உரையாடக்கூடிய ஏற்பாடு ஒன்று ஆந்திர மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறையில் இருந்து கைதிகளை நீதிமன்றம் அழைத்து வரும்போது அவர்கள் தப்பியோடுவது தவிர்க்கப்படுவதுடன், வாகனப் போக்குவரத்துச் செலவுகள், பாதுகாப்புச் செலவுகள் இவ் இன்டர்நெட் மூலமான விசாரணைகளினால் குறைக்கப்படும் எனவும், நீதிமன்ற வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இப்புதிய திட்டத்திற்கு மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு அங்கீகாரம் அளித்துள்ளார். இன்டர்நெட் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளும் முதலாவது மாநிலம் என்ற பெருமையும் இதன் மூலம் ஆந்திர மாநிலத்திற்குக் கிடைத்துள்ளது.

இவ்வாரச் செய்திகள்

★ நாகலாந்து மோகோசங் சிறையை உடைத்து அங்கிருந்து 15 கைதிகள் தப்பியோடியுள்ளனர். சிறையின் கழிவறை ஒன்றினை இவர்கள் திட்டமிட்டு உடைத்து தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ குஜ்ராத்தில் 20ம் திகதி வெள்ளியன்று, இருபடகுகளில் இந்தியாவிற்குள் நுழைந்துகொண்டிருந்த 34 பாகிஸ்தான் நாட்டவர்கள் கடலோரக் காவல்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

★ ம.தி.மு.க. கட்சியின் உட்கட்சி தேர்தலின்போது ஏற்பட்ட மோதலில் பொலிசார் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் காயமடைந்தனர். கடலூர் மாவட்ட விருத்தாச்சலத்தில் உள்ள மங்கலம் பேட்டையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

★ மத்தியபிரதேசம் ஜபல்பூர் நகரில் செவ்வாயன்று பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. சுமார் 10 நிமிடங்கள் அதிர்ச்சி நீடித்ததாகவும், இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ நடிகர் ராஜ்குமாரின் இரு மகன்களும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனைச் சந்தித்து தமது தந்தையை மீட்பதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

★ ஒரிசாவில் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் மாணவிகள் மீது பாலியல் பலாத்காரங்களை நடாத்திவந்த கல்லூரியின் தலைமை ஆசிரியர் கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட மாணவி ஒருவர் பொலிசில் புகார் செய்ததையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

★ அருணாச்சலம் பிரதேசத்தில் விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியது. இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் நால்வர் காயமடைந்தனர், சீன எல்லைக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தவேளை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

★ நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகள் சரியாக உள்ளதென தமிழ்நாடு பா.ஜ.க. கூறியுள்ளது.

★ வீரப்பனை சந்தித்துப் பேச்சுக்களை முடித்த தூதர்குழு தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து, பேச்சுவார்த்தை தொடர்பான விளக்கங்களை அளித்தனர். அதன் பின்னர், இத் தூதுக்குழுவினர் வீரப்பனுடன் பேச்சுக்களை 'நடாத்த மீண்டும் காட்டுக்குச் செல்வார்கள் என கருணாநிதி தெரிவித்தார்.

★ நடிகர் ராஜ்குமாரை மீட்பதற்கு வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற பழ.நெடுமாறன் அவர்களை கன்னட எழுத்தாளர்கள், திரைப்படத்துறையினர் நேரில் சென்று தமது நன்றியை தெரிவித்தனர்.

செங்கல்பட்டு அகதிமுகாமில் ஈழத் தமிழர்கள் உண்ணாவிரதம்

செங்கல்பட்டிலுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள 8 பேர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் ஆறுபேர் உடல் நலம் பாதிக்கப்பட்டதையடுத்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈழத்தில் இருந்து தமிழகம் வந்த பலர் பிரிக்கப்பட்டுப் பல்வேறு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வைக்கப்பட்டவர்களில், செங்கல்பட்டு முகாமில் உள்ள ராஜமாணிக்கம் என்பவர், வேறொரு முகாமில் வைக்கப்பட்டுள்ள தனது மனைவி தன்னுடன் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் அல்லது தங்கள் இரண்டு பேரையும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டும் எனக் கோரி கடந்த 12ம் திகதிமுதல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இதனையடுத்து, இவருக்கு ஆதரவாகவும், தங்களது உறவினர்களுடன் இணைந்து வாழ தங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் எனக்கோரி கடந்த 15ம் திகதியில் மேலும் ஏழு பேர் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்களில் ஆறுபேர் கடந்த புதனன்று உடல்நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.



NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER

* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)

★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

★ NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark

★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42



NÆRKØB பேருந்துசேவை	ஒருவழி	இருவழி
Danmark _London	540 Kr	890 Kr
Danmark _Paris	540 Kr	865 Kr
Danmark _Hombrg	205 Kr	327 Kr

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

பாலஸ்தீன நகர் இஸ்ரேல் இராணுவத்தால் சுற்றிவளைப்பு

(23.10.00)

இஸ்ரேலிய இராணுவத்தின் டாங்கிகளும் கவச வாகனங்களும் இன்று ஜெரூசலேமுக்கு அண்மையில் உள்ள பெய்ட்ஜாலா நகரை சுற்றிவளைத்தன. இங்கிருந்து பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேலிய பொலிசாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாயும், சில பொலிசார் மற்றும் யூத குடியேற்றவாசிகள் சிலரும் காயமடைந்தனர் எனக் கூறிய இராணுவத் தலைமை, அப்பகுதியை சுற்றி வளைத்து தாக்குதல் நடாத்தியது. மக்களை வீடுகளில் இருந்து வெளியே வரும்படி கூறிய இராணுவம் குடியிருப்புக்களை நோக்கி கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் அப்பகுதியில் உள்ள ஒரு தொழிற்சாலை முற்றாக தரைமட்டமாகியது. நூற்றுக்கணக்கான மக்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறி ஐடா அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதவேளை, மேற்குக்கரை மற்றும் காஜா பகுதிகளில் பாலஸ்தீன இளைஞர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே கலவரங்கள் தொடர்ந்தும் நடைபெற்ற வண்ணம் உள்ளன. இன்றைய மோதல்களில் நான்கு பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரை நடந்த மோதல்களில் இறந்தோரின் தொகை 123 ஆக அதிகரித்துள்ளது. இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்ட பெய்ட்ஜாலா நகரப்பகுதியில் இருந்து கடந்த ஞாயிறு இரவு பாலஸ்தீன இளைஞர்கள் அருகிலுள்ள ஜீலோ எனும் யூதக் குடியிருப்பு மீது தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் இதனால் 16 வீடுகள் பலத்த சேதமடைந்தன என்றும் இஸ்ரேலிய தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஹெவ்ரோன் நகரப் பகுதியில் இஸ்ரேலிய நிலைகள் மீது பாலஸ்தினியர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். இத் தாக்குதல்கள் மிகக்கடுமையாக இருந்தன என இஸ்ரேலிய தரப்பில் கூறப்பட்டுள்ளது.

தேசிய அரசு அமைப்பதில் இழுபறி நிலை

(23.10.00)

இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் பாலஸ்தீன பிரச்சனைகள் மேலும் மோசமாகிவரும் நிலையில் இதுவரை கடைப்பிடித்து வந்த பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாட்டை சிலகாலத்திற்கு கைவிடப்போவதாக கூறியுள்ளார். அதேவேளை, நாட்டில் அவசரகால தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கும் அவர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். எகிப்தில் கடந்தவாரம் நடந்துமுடிந்த அரபு உச்சிமாநாட்டில் இஸ்ரேலுக்கு எதிராக கூட்டான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில், நாட்டின் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து பலமான பாதுகாப்பை ஏற்படுத்துவது அவசியம் எனக்கூறிய இஸ்ரேலியப் பிரதமர், தனது அரசில் தீவிர வலதுசாரி, மதவாத கட்சிகள் சோவியத் யூதர்களின் அமைப்புகள் போன்றவற்றை இணைத்து புதிய அரசு ஒன்றினை அமைக்க விரும்புவதாகக் கூறினார். இதற்காக இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு காரண கர்த்தாவான ஆரியல் சரோண் உட்பட வலதுசாரித் தலைவர்களை சந்தித்து பேசி வருகிறார். ஆனால், புதிய அமைச்சரவையில் தான் இணைந்துகொள்ள விரும்பவில்லை என ஆரியல் சரோண் நேற்று பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார். தான் அரசில் இணைவதற்கும் நாட்டின் பாதுகாப்பிற்கும் சம்பந்தம் இல்லை என கூறிய அவர், தான் இணைய வேண்டுமானால் இஸ்ரேலியர்களின் பாதுகாப்பு மற்றும் தேசத்தின் பாதுகாப்பு பற்றி உறுதியான நிலைப்பாடுகள் வெளியிடப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ரஷ்யப் பிரதமர் துருக்கியில்

(23.10.00)

ரஷ்ய பிரதமர் மிக்கைல் கசியானோவ் தற்போது துருக்கியில் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அங்கு துருக்கி அதிபர் புலேன் எசேவித் உடன் நடந்த பேச்சுக்களை அடுத்து செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு இறுக்கமடைவதற்கு தொழிற்துறை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட இருப்பதாயும் துருக்கிக்கான எரிவாயு விநியோகவழி அமைக்கப்பட்டு அடுத்தவருட இறுதிக்குள் செயற்படத் தொடங்கும் என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் இரு நாடுகளிலும் இடம்பெற்று வரும் அரச எதிர்ப்பு போராட்டங்களுக்கு எதிராக ஒன்றிணைந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்றும் இராணுவ பாதுகாப்பு தொடர்புகள் அதிகரிக்கப்பட உள்ளதாயும் கூறினார். ரஷ்யாவிடம் இருந்து துருக்கி இராணுவ உலங்குவானூர்திகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவிலும் நெருக்கம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் செச்சினியப் போராளிகளுக்கு துருக்கி ஆயுத உதவிகளை செய்வதாக குற்றம் சாட்டப்பட்டது. அதேவேளை, குர்திஸ் போராளிகளுக்கு ரஷ்யா ஆயுத உதவி செய்ததாக துருக்கி குற்றம்சாட்டி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

கொங்கோட் விபத்து பற்றி புதிய தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

(23.10.00)

அமெரிக்க கொன்டினென்டல் விமான நிறுவனத்தின் பயணிகள் விமானம் சரியான முறையில் பழுதுபார்க்கப்படவில்லை என்றும் அதன் காரணமாகவே கொங்கோட் விபத்து ஏற்பட்டதென்றும் விபத்துக்கான காரணங்களை ஆராய்ந்துவரும் அதிகாரிகள் கூறியுள்ளார்கள். இது பற்றி சர்வதேச விமானத்துறை ஏடொன்று செய்தி வெளியிடுகையில் கொங்கோட் சென்ற பாதையில் சற்று முன் புறப்பட்டுச் சென்ற மற்றுமோர் ஜெட் விமானத்தின் ரிட்டானியத்திலான தகடு ஒன்று கழன்று வீழ்ந்திருந்ததென்றும் இது இலகுவான தகடு அல்ல என்றும் மிகக்கடுமையானது என்பதால் மேற்கண்ட விபத்து தவிர்க்க முடியாததாகியது என்றும் கூறியுள்ளது. மேலும் அவ் ஏட்டில் மேற்கண்ட தகடு எண்ணைய்தாங்கிப் பகுதியில் பொருத்தப்பட்ட ஒன்று என்றும், அது எவ்வாறு கழன்று வீழ்ந்தது என்பது மர்மாக உள்ளதாகவும் கூறியுள்ளது.

இதற்கிடையே பிரித்தானிய விமானசேவை நிறுவனம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் மீண்டும் கொங்கோட் விமானங்களை சேவையில் ஈடுபடுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. இதற்காக இவ் விமானத்தின் தயாரிப்பாளர்களை இவ்வருட இறுதிக்குள் புதிய மாற்றீடுகளை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க வெளியுறவுச் செயலரின் வடகொரிய வரலாற்று விஜயம்

(23.10.00)

அமெரிக்க வெளியுறவுச் செயலர் திருமதி மடெலின் அல்பிரைட் எதிர்பாராத வகையில் வடகொரியா நோக்கி சென்றுள்ளார். அங்கு ஜனாதிபதி கிம் ஜொங் இல் ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். அமெரிக்காவின் ஜனாதிபதி பில் கிளின்டன் வடகொரியாவிற்கு பயணம் செய்யவுள்ள நிலையில் அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவே அமெரிக்க வெளியுறவுச் செயலரின் பயணம் அமைந்துள்ளது.

வடகொரியா தனது ஏவுகணைத் தொழில் நுட்பத்தை கைவிடவேண்டும் எனவும், அமெரிக்கா அந் நாட்டிற்கு தேவையான மின்சார உலைகளை ஏற்படுத்திக்கொடுக்கும் என்றும் ஏற்கனவே கூறப்பட்டிருந்தது. அத்துடன் வடகொரியாவின் ஏவுகணைத் தொழில்நுட்பமானது ஈரான், சிரியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளை சென்றடைவது விரும்பத்தகாத ஒன்று என்றும் அமெரிக்க தரப்பில் கூறப்பட்டிருந்தது. தற்போது வடக்கு, தெற்கு கொரியாக்களுக்கு இடையே நல்லுறவுகள் வளர்ந்துள்ள நிலையில் அமெரிக்க வெளியுறவு செயலரின் விஜயம் குறிப்பிட்டு கூறக்கூடிய ஒன்று என்றும், ஜனாதிபதி கிளின்டனின் விஜயத்தின்போது புதிய பல ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கிடையே கைச்சாத்திடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு – சீன அதிபர்கள் சந்திப்பு

(23.10.00)

பிரெஞ்சு அதிபர் ஜக் சிராக் அவர்கள் ஞாயிறன்று சீன அதிபர் ஜியான் செமினை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். சீனாவின் இறுக்கமான செய்திக்கட்டுப்பாட்டால் பேச்சுவார்த்தை தகவல்கள் பெரிதாக வெளியாகாத போதிலும் சீனாவின் உலக வர்த்தக அமைப்பு அங்கத்துவம் மற்றும் மனித உரிமைகள், வர்த்தக ரீதியிலான பேச்சுக்களை இருவரும் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான நீண்டகால பாரம்பரிய உறவுகளின் அடிப்படையில் பேச்சுக்கள் இடம்பெற்றதாக சீன அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வார இறுதியில் பிரெஞ்சு அதிபர், தென்கொரியாவில் இடம்பெற்ற ஆசிய — ஐரோப்பிய தலைவர்கள் அடங்கிய மாநாட்டில் கலந்துகொண்டார். இங்கு சீனப் பிரதமர் சூ றொன் ஜியை சந்தித்து பேசியிருந்தார். தற்போது மத்திய சீனாவில் பயணம் செய்யும் பிரெஞ்சு அதிபர், பெய்ஜிங்கிற்கு அடுத்ததாக விஜயம் செய்யவுள்ளார். தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை ஏற்றுள்ள பிரான்ஸ், சீனா தனது மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தினால் உலக வர்த்தக அமைப்பில் அது இணைந்துகொள்ளும் வழிவகைகள் அதிகரிக்கும் எனக் கூறியுள்ளது.

கெய்ரோ உச்சி மாநாட்டில் இஸ்ரேல் மீது கடுமையான கண்டனம்

(23.10.00)

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் வார இறுதியில் நடந்து முடிந்த அரபுத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இஸ்ரேல் பாலஸ்தீன மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இராணுவ அடக்குமுறை வன்மையாக கண்டனத்துக்கு உள்ளானது. பல நாடுகள் இஸ்ரேலுடனான இராஜதந்திர உதவிகளை அரபுநாடுகள் தண்டிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தன. சில நாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட உறவு தொடர வேண்டும் என வலியுறுத்தியபோது, லிபிய தூதுக்குழு அதனை எதிர்த்து மாநாட்டில் இருந்து வெளியேறியது. அங்கு கூடிய தலைவர்கள் பாலஸ்தீன பிராந்தியத்தில் இடம்பெறும் இராணுவ அடக்குமுறையை விசாரிக்க சர்வதேச நீதி அமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் சர்வதேச தலையீடு உடனடியாக இங்கு தேவை எனவும் வற்புறுத்தினர்.

இதற்கிடையே பாலஸ்தீன குழுக்கள் மற்றும் யாசிர் அரபாத்தின் பத்தா அமைப்பு போன்றவை அரபுநாடுகள் பொருளாதார அரசியல் ரீதியலான தொடர்புகளை எதிரியுடன் வைத்திருப்பது அவசியம் இல்லை. அரபுநாடுகள் தங்கள் தொடர்புகளை உடனடியாக துண்டித்துக் கொள்ள வேண்டும் என துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலம் கோரியுள்ளனர். நடந்துவரும் கலவரங்களுக்கு பாலஸ்தீனர்களும் யாசிர் அரபாத்தும் தான் காரணம் என எகுட் பராக் குற்றம் சுமத்தியுள்ளார். இதனை முற்றாக மறுத்த யாசிர் அரபாத், இஸ்ரேலிய இராணுவமும் அதன் அரசும்தான் அப்பாவி பாலஸ்தீனியர்களின் மரணத்திற்கு காரணம் எனக் கூறியவர், பாலஸ்தீன அரசின் தலைநகர் ஜெரூசலேமை நோக்கி எமது மக்கள் தொடர்ந்தும் முன்னேறுவார்கள் எனக் கூறியுள்ளார்.

மற்றுமோர் யுத்தத்திற்கு மத்திய கிழக்கு தயாராகின்றதா?

பாலஸ்தீனத்தின் அப்பாவி மனித உயிரிழப்புக்கள் தினமும் அதிகரித்துக்கொண்டு போகின்றது. கல் வீச்சில் ஆரம்பமான எழுச்சி, இப்போது துப்பாக்கிச் சமரில் தொடர்கின்றது. இதற்கிடையே இரு தலைவர்களையும் இணைத்து மாநாடொன்றும் கூட்டப்பட்டது. உலகத் தலைவர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள், கலவரம் 48 மணிநேரத்திற்குள் நிறுத்தப்பட வேண்டும் என காலக்கெடுவும் விதித்தனர். அக்காலக்கெடு காணாமல் போய்விட்ட பின்பும், எல்லாப் பகுதிகளிலும் சண்டைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இதுவரை 120 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதுவும் செப்டெம்பர் 28 முதல் அக்டோபர் 20 வரைதான் இக் கணக்கு. இறந்தவர்களில் அனேகமானோர் பாலஸ்தீனர்கள் தான். இதுவரை சுமார் 115 பாலஸ்தீனர்களும், பலஸ்தீன அரபுக்களும், ஐந்து இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். கடந்தவாரம் எகிப்தில் நடந்த மாநாட்டில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி தீர்மானிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்த வெள்ளியன்று மாத்திரம் ஒன்பது பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இரு தரப்பினரும் இப்போது மற்றவர்கள் கலவரங்களுக்கான பொறுப்பை சுமத்துகின்றனர். என்னதான் ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதிலும், இடம்பெற்றுவரும் அதிகரித்த உயிரிழப்புக்கள் பிராந்திய ரீதியில்

உலகக் கண்

தொடர்ந்தும் பதட்ட நிலைமையைத்தான் ஏற்படுத்தியுள்ளன. இந்நிலை இப்படியே தொடருமானால் மத்திய கிழக்கு மற்றுமோர் யுத்த களமாக மாறும் சாத்தியக் கூறும் இல்லாமல் இல்லை.

இஸ்ரேலிய தலைவர்களும் - பாலஸ்தீன அதிகார சபையினரும் கடந்த சில வருடங்களாகவே சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஜெருசலேம் கட்டுப்பாடு யாருக்கு என்பதில் தோன்றிய பிரச்சினையால் சமாதான முன்னெடுப்புக்கள் சற்று பின்னடைந்த நிலையில், இக்கலவரம் பிராந்தியத்தின் பல பகுதிகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி தொடர்வதன் காரணம் என்ன? இடையே என்ன ஏற்பட்டது? கலவரத்திற்கான அடிப்

படைக் காரணம் என்ன? இவர்களுக்கு பின்னணியில் நின்று ஆதரவு கொடுக்கும் கரங்கள் எவை?

ஜெருசலேம் கிழக்குப் பகுதி 67ம் ஆண்டு ஆறுநாள் யுத்தத்தின் பின் இஸ்ரேலியப் படைகளால் கைப்பற்றப்பட்டது. அத்துடன் அதுவரை காலமும் பிரிந்துபோயிருந்த ஜெருசலேம் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்த ஜெருசலேம் தான் பாலஸ்தீனத்தின் தலைநகர் என்றும் அதனை விட்டுக்கொடுக்க தாம் தயாராக இல்லை என்றும் பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் யாசீர் அரபாத் உறுதியாக கூறியிருந்தார். மறுபுத்திலும் இதே நிலைதான். யூதர்களின் பாரம்பரிய பிரதேசம் ஜெருசலேம், அதை பிரித்துக்கொடுக்க ஒருபோதும் முடியாது என்று இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கும் உறுதியாகவே கூறிவிட்டார். ஜெருசலேம் உரிமையில் இடைத்தரகுகள் எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதில் இருவருமே விடாப்பிடியாக இருந்த நிலையில், கடந்த மாதம் 28ம் திகதி அங்கு அமைந்திருந்த அல் அக்ஸ்சா எனும் பள்ளிவாசல் பகுதிக்கு இஸ்ரேலின் தீவிர வலதுசாரித் தலைவர் ஆரியல் சரோன் திடீரென சென்றதையடுத்து அரபுக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு தோன்றியது. இதனையடுத்து கல் வீச்சில், இஸ்ரேலிய படைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது.

பாலஸ்தீன இளைஞர்கள், இஸ்ரேலிய அடக்குமுறைக்கு எதிராக பல வருட காலமாக 'இன்டிபாடா' எனும் எழுச்சி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வந்தனர். இப்போது மீண்டுமோர் இன்டிபாடா ஆரம்பமாகியுள்ளது. இப்போது இதற்கு அல் அக்ஸ்சா இன்டிபாடா என பெயரிட்டுள்ளார்கள். அதாவது, தங்களது உரிமைப்பகுதியான ஜெருசலேமை நோக்கி சுதந்திரமாக சென்றுவரும் வரை, பாலஸ்தீனத்தின் தலைநகராக அதனை மாற்றும் வரை இவ் இன்டிபாடா தொடரும் என பாலஸ்தீன தலைவர்கள் கூறியுள்ளார்கள். இந்த எழுச்சிக்காக பிரிவுபட்டுள்ள பாலஸ்தீன அமைப்புக்களிடையே மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாலஸ்தீன விடுதலை அமைப்பின் பிரதான அங்கமான பட்டாஹ் [FATAH] அமைப்பினர் சகல இஸ்லாமிய அமைப்புக்களையும் ஒருங்கிணைத்து இஸ்ரேலிய அடக்குமுறைக்கெதிரான யுத்தத்தை தொடரவேண்டும் எனக் கூறியுள்ளார்கள். இதற்கிடையே எகிப்திய தலைநகர் கெய்ரோவில் அரபு உச்சி மாநாடு ஒன்று. 21ம், 22ம் திகதிகளில் நடைபெற்றுள்ளது. இதன் ஆரம்ப மாநாட்டில் சகல அரபுநாடுகளும் இஸ்ரேலுடன் தொடர்புகளை முறித்துக்கொள்ள வேண்டும் என்றும் பாலஸ்தீன உரிமைக்காக ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. களத்திலும் இஸ்ரேலுக்கு எதிரான செயற்பாடுகளில் ஒற்றுமைகள் ஏற்பட்டுள்ளன. இதில் அங்கு செயற்படும் பல குழுக்களின் ஒருங்கிணைப்பு குறிப்பிடக்கூடிய ஒன்று. அதே வேளை, பாலஸ்தீனத்தில் இயங்கிவரும் மற்றுமோர் அமைப்பான ஹமாஸின் சிறையில் இருந்த அங்கத்தவர்கள் ஏராளமானோர் பாலஸ்தீன பொலிசாரால் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடக் கூடியவையாகும்.

இன்று இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக கலவரங்களில் ஈடுபட்டு வருவோர் பத்து வருடங்களுக்கு முன் கல்வீச்சுக்களுடன் இன்டிபாடாவில் ஈடுபட்டவர்கள் தான். அன்று சிறுவர்களாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டவர்கள் இன்று, இளைஞர்களாக மீண்டும் அதனை தொடங்கியுள்ளார்கள். இஸ்ரேலிய சிறைகளுக்குள்ளும் பாலஸ்தீன அகதி முகாம்களுக்குள்ளும் எதிர்ப்

புக்களுடன் வளர்ந்த அவர்களது போராட்ட செயற்பாடுகள் இன்று பாலஸ்தீன தலைமையின் முடிவுகளுக்கு எதிராகக் திரும்பக் கூடிய தன்மையைக் கொண்டுள்ளன.

அண்மையில் பாலஸ்தீன பகுதிகளில் கலவரங்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு அரபாத் செல்லவேண்டும் என விடப்பட்ட கோரிக்கைளுக்கு பாலஸ்தீன அமைப்புக்கள் பல எதிர்ப்புத் தெரிவித்தன. அரபாத்தின் முடிவுகள் திடமானதாக இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரானவைகளாக உறுதியுடன் இருக்க வேண்டும் என பாலஸ்தீன அமைப்புகள் அறிவித்தன. இந்நிலையில் தான் யூதர்களின் புனிதமான 'ஜோசெப் சமாதி'பகுதியில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் விலகிக் கொண்டது. உடனடியாக அங்கு சென்ற பாலஸ்தீன இளைஞர்களால் அந்த புராதன சின்னம் நொருக்கப்பட்டது. அடுத்து சில தினங்களில் பின் லெபனான் எல்லைப் பகுதியில் வைத்து ஹிஸ்புல்லா அமைப்பினால் மூன்று இஸ்ரேலியர்கள் பிடித்துச் செல்லப்பட்டனர். கலவரம் தொடர்ந்து நடந்த நிலையில், மேற்குகரை நகரமான ரமன்லாவிற்குள் தவறிச் சென்ற இரண்டு இஸ்ரேலிய படை வீரர்கள், பாலஸ்தீன குழுவினரால் படுபயங்கரமான முறையில் கொல்லப்பட்டனர். இந்த ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் இஸ்ரேலினுடைய எதிர் நடவடிக்கை மிக்கடுமையானவையாக இருந்தன. ஒவ்வொரு தாக்குதல்களிலும் பலர் கொல்லப்பட்டும் காயமும் அடைந்தனர். ஆனால் எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாக - மேற்குக்கரை, காஸா போன்ற பகுதிகளில் இஸ்ரேலிய எதிர்ப்பு நடவடிக்கைகள் குறையவேயில்லை. சுமார் 40,000 வரையிலான பாலஸ்தீன ஆயுதம்தாங்கிய பொலிசார் சற்று அமைதியாக இஸ்ரேலினது தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால், ஹமாஸ் மற்றும் வேறு சில அமைப்புகள் இஸ்ரேலிய குடியிருப்புகள் மீதும், படைநிலைகள் மீதும் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

என்னதான் ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதிலும், இடம்பெற்றுவரும் அதிகரித்த உயிரிழப்புக்கள் பிராந்திய ரீதியில் தொடர்ந்தும் பதட்ட நிலைமையைத்தான் ஏற்படுத்தியுள்ளன.

அரசிற்கு எதிரான அமைப்புக்களை பாலஸ்தீன பொலிசார் சுயமாக உலவவிட்டுள்ளனர் என்றும், சிறைகளில் இருந்த ஹமாஸ் கைதிகளை விடுவித்தது பாரதூரமான விடயம் என்றும் இஸ்ரேல் குற்றம் சாட்டிவரும் அதேவேளை, முற்றாக முகத்தை மூடி, புதிய ஆயுதங்களைத் தாங்கிய இளைஞர்களது அணிவகுப்பு பாலஸ்தீன கட்டுப்பாட்டுப் பகுதியில் இப்போது அதிகரித்து வருகின்றது. இவை எதைக்காட்டி நிற்கின்றன என்றால் அரபாத் தலைமையிலான பாலஸ்தீன அதிகாரசபை தனது அதிகாரத்தை பாதுகாப்பாக வைத்துக்கொண்டு வேறு அமைப்புக்களை இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக முன்னணிக்கு அனுப்பியுள்ளதும், அடுத்த நிலையில் இஸ்ரேலினது படைத்தரப்பிற்கு எதிரான நடவடிக்கைகளுக்காக பாலஸ்தீனப் பொலிசார் தயார்படுத்தப்பட்டு வருவதையுமே மறைமுகமாக காட்டுகின்றன. இங்கு நாம் பாலஸ்தீன பொலிசார் எனக் குறிப்பிடுவது, முன்னாள் பாலஸ்தீனப் போராளிகளைத்தான். இவர்கள் பொலிசார் என பதவி மாற்றம் பெற்றாலும் கூட, தாய்நிலத்திற்கான யுத்தத்தில் போராளியான நிலைப்பாட்டையே எடுத்துக்கொள்வார்கள் என்பது தான் உண்மை.

தற்போது பாலஸ்தீனத்தில் இடம்பெற்றுவரும் கலவரங்கள் முடிவுக்கு வரவேண்டும் என பல நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால் இஸ்ரேலினது நடவடிக்கைகளை அவர்களால் கடுமையாக கண்டிக்க முடியவில்லை. பாலஸ்தீனர்கள் மேல் இஸ்ரேல் பாவிக்கும் வன்முறை அதிகமாக உள்ளது என மட்டுமே இவர்க

ளால் இன்றுவரை கூறிக்கொள்ள முடிகிறது. யூத தேசத்தின் பாதுகாப்பை உலக வல்லரசு எனக் கூறிக்கொள்ளும் நாடுகளின் அனேகமானவை முன்னிலைப்படுத்தும் அதேவேளை, பாலஸ்தீன மக்களின் இழப்புக்களையோ அதனை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு பாதுகாப்பான, நிரந்தரமான தேச அமைப்பை ஏற்படுத்துவதற்கு உண்மையான உதவிகளை மேற்கொள்ளவும் முடியவில்லை. ஆனால் இதுவரை காலமும் செயலற்ற நிலையில் இருந்த அரபு உலகம் இப்போது விழித்துக்கொள்ள ஆரம்பித்துள்ளதுபோல் தெரிகின்றது. இப்போது நடைபெறும் அரபு மாநாடு காட்டமான முடிவுகளை எடுக்கும் என அனேகர் நம்புகின்றனர். பாலஸ்தீன மக்களின் விடிவிற்காக மற்றுமோர் யுத்த நகர்வு மத்திய கிழக்கில் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படுகின்றன என்றே தோன்றுகின்றது. ஆனால் அப்படியொன்று தோன்றும் பட்சத்தில் இன்று பாலஸ்தீனர்களுக்காக குரல்கொடுக்கும் சில மேற்கு சக்திகள் இஸ்ரேலின் பின்னால் திரளக் கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(அவைபற்றி அடுத்தவாரமும் பார்ப்போம்)

- உதயன்

ஆறே மாதங்களில்
கணிணியை சரளமாக கையாள
Senith Computer Institute
★ சுவிற்சர்லாந்தில் கணிணி கல்விநிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
★ கணிணி அறிமுக வகுப்புக்கள் கட்டணமின்றி அமர்வுகளுடன் ஆரம்பமாகி 8 மாதகாலம் தொடர்ந்து நடைபெறும்.
★ மத்தியதர, உயர்தர [9–16 வயது] வகுப்புக்கள்
தொடர்புகளுக்கு: Senith Computer Institute
Militar str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60 Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

Palm Beach
RESTAURANT
10%OFF ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
Finest South Indian & Sri Lankan Cuisine
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

ARCHIE'S
Audios - Videos - CD's
Whole Salers & Retailers
205 Edgware Road,
Colindale,
London NW9 6LY
T.P: 0181-205 3652

உங்களுக்குத் தேவையான
மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள்,
சஞ்சிகைகளுக்கு
KANNA Euro Enterprises
198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate,
N6 5BB, London.
T. Phone- 0181-3483356

ஈழமுரசு
Eelamurasu Weekly

பிரித்தானியாவிற்கான சந்தாக் கட்டணத்தினை
(வருடம் ஒன்றிற்கு £60,
6 மாதங்களுக்கு £32)
செலுத்துவதன் மூலம் ஈழமுரசு உங்கள் வாசல் தேடி வருவதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பிரித்தானிய வணிகம்

பிரித்தானியா நாட்டிற்கான விளம்பரங்களை ஒரே பக்கத்தில் பிரித்தானியப் பதிப்பில் 'பிரித்தானிய வணிகம்' என்ற பகுதியில் இடம் பெறுவதற்கான விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. குறைந்த கட்டணத்துடன் விளம்பரப்படுத்த இப்பகுதி உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றது.

உங்கள் விளம்பரம் தொடர்பான தேவைகளுக்கு நாடுங்கள்
EELAMURASU (அஞ்சல் வழி)
5, Saxony Parade, Hayes,
UB3 2TQ
Fax/Tel: 0181-56 16 877

சிறிய வரி விளம்பரங்களுக்கு £5 மட்டுமே!

ஜெயந்தன் Tel: 0956908145
ஹரி Tel: 07887874177
பாஸ்கரன் Tel: 07811040188

ASIAN FUNERAL DIRECTORS

24 மணிநேரச் சேவை
அமரத்துவம் அடைந்தவர்களது இல்லங்களுக்கான பிரத்தியேக விஜயங்கள், அமரர்களைக் குளிப்பாட்டுதல் - ஆடை அணிவித்தல் - அஞ்சலிக்கு வைத்தல், வார இறுதி ஈமக்கிரியைகளுக்கான ஒழுங்குகள், மலர் வளையங்களுக்கான ஒழுங்குகள், மதச் சடங்குகளுக்கான ஒழுங்குகள் ஆகியவற்றுடன் அமரர்களின் பேழைகளைச் சர்வதேச ரீதியில் காவிச்செல்லும் பணி.
LONDON 0800 026 2335
MIDLANDS **0800 026 2334**
F·O·S
Part of the SCI Group of Funeral Directors
Member of the Funeral Ombudsman Scheme and the Funeral Standards Council
Pub.Lon

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட
ஐரோப்பா புகழ்
ஈழநிலா
தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ்.
தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

SHASME Super Store
இலங்கை இந்திய மளிகைச் சாமான்கள் வீடியோ, ஓடியோ, CD, சஞ்சிகைகள், பத்திரிகைகள், மரக்கறி வகைகள், கடல் உணவுப்பொருட்கள் Gnanam Phone Card அனைத்தையும் பெற்றுக்கொள்ள Birmingham த்தில் ஒரே தமிழ்க்கடை
211, Lady Pool Road,Balsall Heath,
Birmingham B 12, 8 LG
Tel No: 0121-4465896

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

பேரினவாதிகள் 'கூட்டு'

'போரை நிறுத்தி சமாதானத்தை மலரச்செய்வேன்', 'நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து ஜனநாயகத்தை தளைக்கச் செய்வேன்', 'அரசின் செலவீனங்களைக் கட்டுப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவேன்' போன்ற உறுதிமொழிகள் உட்பட பல உறுதிமொழிகளை தனது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் 1994ம் ஆண்டு அடிக்கடி முழங்கிய சந்திரிகா இன்று தான் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தையும் தனது காலடியில் போட்டு நசித்து, கொலை யுகமான ஆட்சிக்காலமொன்றை நடாத்திவருவது சிந்திக்கத் தெரிந்த எவருக்குமே புரியாத விடயமல்ல. தனது தொங்கு பாராளுமன்றத்தை காப்பாற்றிக்கொள்வதற்காக முண்டுகொடுக்கும் அனைவருக்குமே அமைச்சர் பதவிகளை அள்ளிக்கொடுத்து, தனது நாட்டின் அரசியல் கலாச்சாரத்தையே மேலும் சந்தி சிரிக்கவைத்துள்ளார். 80ற்கு மேற்பட்ட அமைச்சர்களும், அதுவும் ஒரு சின்னஞ்சிறிய நாட்டிற்கு, நாட்டின் பொருளாதாரம் எக்கேடுகெட்டாலென்ன தான் ஆட்சிக் கதிரையை தக்கவைத்துக் கொள்ளவேண்டுமென்ற நினைப்பில் அரசியலில் ஓரிருவார அனுபவமும் உள்ளவருக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டு, தனது அரசியல் கீர்த்தியை சந்திரிகா மேலும் 'ஒருபடி' உயர்த்தியுள்ளார். கொடூர யுத்தத்திற்குத் தங்களது வரிப்பணத்தை வாரிக்கொடுக்கும் சிங்கள மக்களுக்கு சிறீலங்காவின் புதிய பிரமாண்டமான அமைச்சரவைக்கும் வாரிக்கொடுக்கவேண்டிய நிலை தோன்றியிருக்கின்றது. ஆனாலும், தமது தேசத்தின் நிலைகுறித்தோ அல்லது தாம் ஒரு அநியாயமான யுத்தத்தை தமிழர் தாயகதின் மீது நடாத்திக் கொண்டிருக்கும் நிலை குறித்தோ இன்னும் அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. உணர்ந்துகொள்வதற்கு சிறீலங்காவில் குடிகொண்டிருக்கும் பேரினவாதமும் விட்டுக்கொடுக்கமாட்டாத நியதி.

இந் நிலையில், தேர்தலுக்கு முன்னர் ஒருவர்மீதொருவர் குற்றச்சாட்டுக்களை மாறிமாறிச் சுமத்திய சந்திரிகாவும், ரணிலும் இப்போது நெருங்கிவருவதுபோன்ற ஒருதோற்றம் சிறீலங்காவில் தென்படுகின்றது. இந்த நிலையை உன்னிப்பாகக் கவனித்தால் அதற்குக் காரணம் அவர்களின் பௌத்த பேரினவாதமென்பது தெளிவாகும். புதிய பாராளுமன்றத்தில் பௌத்த சிங்களவர்கள் அல்லாதவர்களின் தயவோடு ஆட்சியை தொடரப்போவது சந்திரிகா தலைமையிலான பேரினவாதிகளுக்கு மனப்புளுக்கத்தைக் கொடுப்பதால், ஐக்கிய தேசியக் கட்சி தனது அரசியல் எதிரியாகவிருந்தாலும், அவர்களிடமிருக்கும் பௌத்த பேரினவாதத்தைக் கணிப்பீடு செய்து தமிழர் தாயகத்தை நசுக்குவதற்கு அதனோடு கூட்டுச்சேர துடிக்கின்றார்கள்.

ஐ.தே.கட்சியும் இதற்கு செவிசாய்ப்பதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்விரு பேரினவாதச் சக்திகளும் இணைந்தால் என்ன நடக்கப்போகின்றதென்பது சொல்லித் தான் தெரியவேண்டிய அவசியமில்லை. சர்வதேசத்திற்கு வேண்டுமானால் தேசிய அரசு, சபாநாயகர் பதவியில் எதிர்க்கட்சி உறுப்பினர் போன்ற கௌரவ மாயைகளை இவ்விரு சக்திகளும் தோற்றுவிக்க முனைந்தாலும், இவர்கள் கைகுலுக்க முனைவது தமிழ்த் தேசியத்தை நசுக்குவதற்காக என்பதை தமிழர் தாயகம் மிகத் தெளிவாகவே உணர்ந்துள்ளது.

செய்தி: யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் நிமலராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பார்வை

சிலிங்கோ கவுசும் நியூஸ்வீக் சஞ்சிகையும்

பிரபல கொழும்பு வணிகரான லலித் கொத்தலாவல, 'நியூஸ்வீக்' செய்தியாளர்களுக்கு கூறிய உதாரணம் விசித்திரமானதாக இருந்தது. தனது சிலிங்கோ கவுஸ் தாக்குதலுக்குப் பின் பிரபாகரனை வேட்டையாட வேண்டும் எனத் தான் வெறிகொண்டலைந்ததாக அவ்'வணிகர்' கூறுகின்றார். ஆனால் பின்னர் தனது மத நம்பிக்கை காரணமாக மனம்மாறி புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வர முயல்வதாகவும் அவர் நியூஸ்வீக் சஞ்சிகைக்குக் கூறியுள்ளார்.

சந்திரிகாவின் அரசமைப்பை ரணில் ஆதரித்தால் தமிழர்களுக்கு உள்விவகார அதிகாரங்களை வழங்கி இனச்சிக்கலை தீர்த்துவிடலாம் என இவ் வணிகர் நம்புவதை நியூஸ்வீக் செய்தியாளார் கோடிட்டுக் காட்டியுள்ளார். சிலிங்கோ கவுஸ் நடாத்திய கருத்துக் கணிப்பில் 90வீதமான மக்கள், அனைத்து மக்களுக்கும் சமஉரிமை இருக்க வேண்டும் என்று கருதுவதாகவும் சிங்களவர்களின் சமரச மனோபாவம் 'மூச்சை உள் இழுப்பது' போன்றது எனவும் அச் சிங்கள வணிகர் கூறுகின்றார்.

உலகின் முன்னணிச் சஞ்சிகை நிருபர் ஒருவருக்கு எவ்வாறு இலங்கைத் தீவின் இனச் சிக்கல் புரிய வைக்கப்பட்டுள்ளது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

சிங்களவர்களின் பார்வையில், 'இலங்கைத் தீவில் தமிழர்கள் சிறுபான்மையினரும், வெறுமனே உள்ளூராட்சி அமைப்புக்காக பல்லாயிரம் உயிர்களை ஈகம் செய்து போராடியவர்களுமாவார் - அவர்களுக்கு ஒரு உள்நாட்டு அதிகாரத்தை சந்திரிகா மூலமோ அல்லது ரணில் மூலமோ வழங்கிவிட்டால் இனச்சிக்கல் தீர்ந்துவிடும் - மறுபுறம் தமிழர்களின் போராட்டம் ஒரு பயங்கரவாத நடவடிக்கை - சிங்கள பௌத்தர்கள் அமைதியானவர்கள் - சிங்கள அரசியல் தலைமை தமிழர்களுக்கு எதிரானதல்ல - தமக்குள் போட்டி போடுவதால் தான் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க மறுக்கின்றன - பௌத்த பீடங்களில் 'சிலரும்', பத்திரிகைகளுமே(!) இனச் சிக்கலை பெரிதாகக் காட்டுகின்றனர்.

இதனை சந்திரிகா தனது வார்த்தைகளில் சொல்லுவார். லலித் கொத்தலாவல போன்ற வணிகர்கள் இதனையே தமது வார்த்தைகளில் சொல்லுவார்கள். ஆனால் அனைவரும் தமிழர்களின் அடிப்படை நிலைப்பாடான 1977 தேர்தல் முடிவுகள், 1985 திம்பு கோரிக்கை மற்றும் புலிகளின் தொடர்ச்சியான அரசியல் நிலைப்பாடு பற்றி மூச்சே விடமாட்டார்கள். கொழும்பில் இருந்து சிங்களப் பரப்புரைக்காக சமாதானம் பேசுவோருக்கு புலிகள் எழுப்பும் அரசியல் விவாதம் அசௌகரியமானது. லலித் போன்ற சிங்கள வணிகர்களுக்கு அக் கேள்விகள் புரியாதவை!

★★★

தமிழீழம் மீது கதிர் நிபந்தனை

மீண்டும் நோர்வே பற்றிய குழப்பத்தில் உலகை ஆழ்த்தியுள்ளது சிறீலங்கா. நோர்வேயுடன் இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 50 வருடங்கள் ஆவதை கொண்டாட நோர்வேக்குச் சென்ற சந்திரிகாவின் தூதுவர் கதிர்காமர், அங்கு நோர்வேயை பேச்சுக்களில் ஈடுபடுமாறு சந்திரிகா கோருவதாகக் கூறினார். பின்னர் செய்தியாளர்களை அங்கும் இங்கும் சந்தித்து புலிகள் பேச்சுக்களுக்கு தயாரில்லை என்ற பொய்யை அவிழ்த்துவிட்டவாறு பேச்சு முயற்சிகளுக்கு ஆப்பு வைக்க முயல்கின்றார்.

நோர்வேயிலிருந்து திரும்பி, கொழும்புக்கு வந்த பின்னர் நோர்வே வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில் புலிகள் மீது பழிபோடும் பரப்புரையில் ஈடுபட்டார். புலிகள் பேச்சுக்களுக்குத் தயாரில்லை எனவும் தாம் இராணுவ ரீதியாக வெல்லலாம் எனப் புலிகள் கருதுவதாகவும் அவர் பேட்டியளித்துள்ளார். நோர்வேயும், புலிகளும் தமக்கென தகுதி வாய்ந்த பேச்சாளர்களை வைத்திருக்கையில் தன்னை கூலிக்கு அமர்த்திய சிங்களத்திற்காக பேச வேண்டியவர், 'புலிகளும், நோர்வேயும் சொல்லவேண்டியதை சொல்வது' வேடிக்கையானது.

புலிகள் தமிழீழம் கேட்க மாட்டோம் எனச் சொன்னால் மட்டுமே பேச்சுக்கள் வெற்றிபெறும் எனக் கூறும் கதிர்காமர், யாழ்ப்பாணத்தை புலிகள் விடுவித்தால் என்ன நடக்கும் என்ற நோர்வே நிருபரின் கேள்விக்கு பதிலளிக்கையில், 'அது நடக்காது' என இராணுவ தொனியிலான பதிலை வழங்கியுள்ளார். மீண்டும் புதிய அரசில் பதவி பெற்ற மகிழ்வில் சந்திரிகாவுக்கும், பௌத்த பீடங்களுக்கும் 'மகிழ்வு தரும் பேச்சுக்களில்' கதிர் ஈடுபட்டுள்ளார். அவரது அமைச்சரவை சகாவாக பதவி ஏற்றுள்ள டக்ளஸ் தேவானந்தாவை விட ஒருபடி மேலே நின்று சிங்களவர்களின் நன்றியைப் பெற 'கதிர் முயல்வதாக' கொழும்பில் பேசப்படுகின்றது.

★★★

அமைச்சரவையும் தேசிய அரசும்

சந்திரிகாவின் அமைச்சரவை விசித்திரமானதாக உருவாக்கப்பட்டுள்ளது. சிங்கள பேரினவாதி தினேஸ் குணவர்த்தனவுக்கும் அமைச்சர் பதவி; அரச கூலிப்படை பொறுப்பாளன் டக்ளஸிற்கும் அமைச்சர் பதவி என்ற 'கலவை' பலருக்கு எரிச்சலை ஊட்டியுள்ளது. 1994ல் புதிய காற்றை கொண்டு வருவோம் எனக் கூறி பதவிக்கு வந்த சந்திரிகா, மோசமான சகல தரப்பினருக்கும் அமைச்சர் பதவி வழங்கியதை, பல தரப்பினரும் விமர்சித்துள்ளனர்.

ஆனாலும் சந்திரிகாவின் இனவாத மூளை தெளிவாகவே பணியாற்றியுள்ளது. டக்ளஸின் பணி 'தமது அரசுக்கு வடக்கு மாகாணத்திற்குள் மட்டுமே தேவை எனக் கருதி' அவனை வடக்குக்கான அமைச்சர் என்ற புதிய அமைச்சராக உருமாற்றியுள்ளது. கிழக்கை படிப்படியாக சிங்கள - முஸ்லீம் மக்களின் பூமி என நிரூபிக்க முயலும் சந்திரிகா, டக்ளஸிற்கு கிழக்கில் வேலை இல்லை என அறிவித்துவிட்டது. மறுபுறம் வளம் மிக்க போக்குவரத்து அமைச்சை தினேஸ் குணவர்த்தன என்ற பேரினவாதிக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது.

முஸ்லீம் காங்கிரஸ் தனது பலத்தை பாவித்து சில முக்கிய அமைச்சுக்களைப் பெற்றுள்ளது. ஆயினும் சிங்கள நலன்களுக்கு முரண் ஏற்படுத்த முடியாத துறைகளே அதற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் சிங்கள பேரினவாதிகள் தேசிய அரசு தேவை என்கின்றனர். தமிழ் – முஸ்லீம்களின் கால்களில் சிறீலங்கா அரசு நிற்கக் கூடாது என்பதற்காக ஒரு தேசிய அரசு உருவாக வேண்டும் என்ற 'அவா' அவர்களுக்கு எழுந்துள்ளது. ஆளும் கட்சியுடன் ஐ.தே.க.வை இணைத்து சிங்களவர்களை மட்டும் நம்பும் சிங்கள அரசை உருவாக்கி அதற்கு தேசிய கட்சி எனப் பெயரிட பௌத்த பீடங்கள் விரும்புகின்றன. தேசிய அரசு தமிழ் மக்களுக்கு தீர்வு தரும் எனக் கூறி 'வணிகர்கள் மற்றும் அமைதி போதிக்கும்(?) சிங்களவர்களும்' கூறுகின்றனர். சிங்கள இராணுவமும் தேசிய அரசை வரவேற்கும் எனக் கூறப்படுகின்றது. பிர்தமர் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என அறிவிக்கப்படுகின்றது.

ஆனால் உண்மையில் தேசிய அரசு என்பது தமிழர்களுக்கு எதிரான பொது சிங்கள அரசை உருவாக்கும் முயற்சியாகும். பொருளாதார பலவீனம், இராணுவ குழப்பம் என்பனவற்றை தீர்த்து தமிழர்களை சிறுபான்மையினத்தினர் என்று நிரூபிக்கும் முயற்சியே தேசிய அரசு முயற்சியாகும். தேசிய அரசு மூலம் உலக நாடுகளின் ஆதரவைப் பெறலாம் என்ற அனுகூலம் இருப்பதாக ஊகிக்கப்படுகின்றது. தமிழ் சிறுபான்மைக்கு ஒரு பிராந்திய சபையைக் கொடுத்துவிட்டு போர் மூலம் தமிழர்களை அழிப்பதே தேசிய அரசின் பொது செயற்பாடாக அமையும்.

- ராஜா

யாழ். குடாவில் சிறீலங்கா இராணுவம் செயலற்று போயுள்ளது!

பரபரப்பின்றித் தொடரும் ஓயாத அலைகள் - 4

திலீபனின் நினைவு நாளில் யாழ் மீட்பிற்கான ஓயாத அலைகள் நான்கு ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால், அங்கொரு யுத்த நகர்வு நடக்கின்றதா என்றுகூட அறியாமல் பல விடயங்கள் இடம்பெறுகின்றன. யுத்தச் செய்திகள் இராணுவத்தால் இருட்டடிப்புச் செய்யப்படுவது வழக்கமானது. ஆனால் இம்முறை ஓயாத அலைகள் நான்கின் செய்திகள் விடுதலைப் புலிகளால் கூட இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. சில செய்திகள் வெளியாகின்றன, பின்னர் அவை வந்த சுவடே தெரியாமல் மறைந்து போகின்றன. சில நாட்களில் மற்றுமோர் செய்தி வெளியாகின்றது. அதற்கும் அந்த நிலைதான். ஓய்யாத அலைகளின் செய்திகள் மறைக்கப்படுவதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் புரிகின்றது. பரபரப்பற்ற வெற்றி ஒன்றுக்கான பெரு நகர்வு ஒன்று நடக்கின்றது என்பதுதான் அது. ஓயாத அலைகள் மூன்றின் மூலம் யாழ்குடா வாசல் வரை நகர்ந்துகொண்ட விடுதலைப் புலிகள் அதன்பின் மிக உறுதியான யுத்த நகர்விற்கான திட்டங்களை செயற்படுத்த ஆரம்பித்தனர். ஓயாத அலைகள் மூன்றின் இறுதிப்பகுதியில் நாகர்கோவில் படைத்தளம், கிளாலிப் படைத்தளம் போன்றவைகள் மிகப் பெரும் நெருக்குதலுக்கு உள்ளாகின.

இப்போது ஓயாத அலைகள் - 4 இல் இவ்விரு படைத்தளங்களும் கடுமையான முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இடையே கிளாலித்தளம் பற்றிய செய்தியொன்று கடந்த வாரம் வெளியாகியது. ஆனால், அதன் இறுதி முடிவுகள் இன்றுவரை தெரியவில்லை. ஓயாத அலைகள் - 4ல் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளின் தாக்குதல் திட்டங்களுக்கிடையே ஒருவகையில் செயலற்று போயுள்ளது என்றுதான் கூறவேண்டும். ஓயாத அலைகள் -3ன் மூலம் விடுதலைப் புலிகளின் வேகமான நகர்வு யாழ்.குடா நோக்கி இருக்கையில் தம்மிடம் கனரக ஆயுத தளவாடங்கள் இல்லாததால் தான் அவர்களை தடுத்து நிறுத்த முடியவில்லை எனக்கூறி அவசர அவசரமாக நவீன ரக கனரக ஆயுதங்களையும் விமானங்களையும் உலங்குவானூர்திகளையும் வாங்கிக் குவித்தது. இவற்றை செலுத்தவதற்கு கூலிக்கு வெளியாட்களும் வரவழைக்கப்பட்டனர். ஆனால் இன்று என்ன நடக்கின்றது. சிறீலங்கா அரசு கொள்வனவு செய்த உலங்குவானூர்திகள் ஒன்றின் பின் ஒன்றாக வானிலே காணாமல் போகின்றன. கடந்த நான்கு நாட்களுக்கு மாத்திரம் இரண்டு உக்கிரேனியத் தயாரிப்பு மிதக்கும் டாங்கி எனப்படும் எம்.ஐ.-24 தாக்குதல் கலங்கள் வானிலே சிதறடிக்கப்பட்டன. ஒன்று சேதமடைந்து தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

ஓயாத அலைகள் மூன்றின் இறுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து ஒரு சில பகுதிகளை மீண்டும் கைப்பற்ற சிறீலங்கா இராணுவம் தனது அதிவேக குண்டு வீச்சு விமானங்களையும் பல்குழல் எறிகணைச் செலுத்திகளையும் தாராளமாக பயன்படுத்தியது. யாழ்.நகர்ப்புற யுத்தம் இரு நாடுகளுக்கு இடையேயான மிகப்பெரும் சமர்போன்று இருந்ததாக மக்கள் தெரிவித்தனர். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இந்த கொழும்புத்துறை யுத்தமானது நகர்ப்புற யுத்தத்தின் ஒத்திகை என்றே கூறப்பட்டது. பல்குழல் எறிகணைச் செலுத்திகளின் கடுமையான வீச்சுக்களுக்கு மத்தியில், குண்டுவீச்சு விமானங்களின் தாராளமான குண்டுமழையின் மத்தியில் புலிகளின் அணிகள் எதிரிக்கெதிரான யுத்தத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து சாவகச்சேரியைக் குறிப்பிடலாம். அங்கும் மிகக்கடுமையான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டு புலிகளின் அணிகள் இல்லாதவேளையில் பார்த்து நகருக்குள் புகுந்து கொண்டது சிங்கள இராணுவம். இத்துடன் அவர்களது நீண்டதூர எறிகணைச் செலுத்திகளுக்கும் குண்டு வீச்சு விமானங்களுக்கும் ஓய்வுகொடுக்கப்பட்டது. இது விடுதலைப் புலிகளால் கொடுக்கப்பட்ட ஓய்வு. சிறீலங்கா அரசிற்கு மிகவும் நெருக்கடியை தோற்றுவித்த ஒரு நிகழ்வு இதுவென குறிப்பிடலாம்.

நீண்டதூர எறிகணை வீச்சின் இலக்கிற்கு உள்ளே இப்போது விடுதலைப் புலிகளின் அணிகள் நிற்கின்றன. இப்போது நீண்டதூர எறிகணைகளை இயக்கினால் அவைகளால் தாக்கப்படுவது ஒன்றில் சிறீலங்கா இராணுவமாக இருக்கலாம் அல்லது வெறும் நிலப்பகுதியில் குண்டுகள் வீழ்ந்து வெடிக்கலாம். விடுதலைப் புலிகளுக்கு நீண்டதூர எறிகணைகளால் சேதத்தை ஏற்படுத்த தற்போதைய நிலையில் முடியாது. இதே நிலைதான் விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்களுக்கும். மிக உயரத்தில் அதாவது 15,000 அடிக்கு மேல் பறந்த நிலையில் வீசும் குண்டுகள் சாதாரணமாகவே விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கு மேல் விழுவதில்லை. அதிலும் இப்போது புலிகளின் அணிகள் இராணுவ நிலைகளுக்கு மிக அண்மித்து நிற்கையில் குண்டுவீச்சு விமானங்கள் நேராக இராணுவ முகாம்கள் மீதே குண்டு போட்டுவிடலாம். அண்மைக்காலத்தில் இவ் விமானங்கள் மிகவும் குறைவான உயரத்தில் பறந்து குண்டுவீச்சுக்களை மேறகொண்டன. ஆனால் இப்போது அது முடியாத காரியமாகியுள்ளது. சிறீலங்கா விமானப்படை அண்மையில் கொள்வனவு செய்த உலங்குவானூர்திகளும் விமானங்களும் தன்னியக்க ஏவுகணை எதிர்ப்பு வசதிகளை கொண்டிருக்கின்றன. ஏவுகணை ஒன்று அதனை நோக்கி ஏவப்படுகையில் விமானத்தின் தன்னியக்கச் செயற்பாடுகள் அவ் ஏவுகணைக்கு எதிரான முறையில் விமானத்தை செயற்படுத்த துணைபுரியும் ஆனால் கடந்தமாத இறுதியில் விடுதலைப் புலிகள் புதிய விமான எதிர்ப்பு படையணி ஒன்றினை களத்தில் இறக்கியுள்ளனர். இவர்கள் புதிய ரடார் கண்காணிப்புடன் கூடிய விமான எதிர்ப்பு பீரங்கிகளை பாவிக்கின்றனர் என நம்பப்படுகிறது. கடந்த வாரம் நாகர்கோவிலில் சுட்டு வீழ்த்தப்பட்ட எம்.ஐ.-24 உலங்குவானூர்தியில் மூன்று காயங்கள் ஏற்பட்டதாயும், அவைகள் எவ்வித ஆயுதத்தால் ஏற்படுத்தப்பட்டவை என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை என்பதையும் விமானப்படை அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்நிலையில்தான் கொழும்பின் இராணுவ ஆய்வாளர் ஒருவர் தனது கட்டுரையில், விடுதலைப் புலிகள் கடந்த மாத இறுதியில் இனந்தெரியாத வகையை சேர்ந்த புதியரக அதிநவீன ஆயுத தொகுதிகளை கொள்வனவு செய்துள்ளனர் என்றும், இவைகளாலேயே அண்மையில் ஓர் மிக் விமானம் தாக்குதலுக்கு உள்ளானதாயும் தற்போது உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்படதாயும் கூறியவர், இவற்றைக்கண்டறியும் முயற்சியில் சிறீலங்காவின் உளவுத்துறை இறங்கியுள்ளது என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் இவ்வகையிலான புதிய ரக ஆயுதங்களை பயன்படுத்துவது விமானப்படைக்கு மிகவும் அச்சுறுத்தலான ஒன்று என்றும் கூறினார். இவரது கட்டுரை வெளியாகிய மறுநாள் திருகோணமலையில் வைத்து மற்றுமோர் உலங்குவானூர்தி நடுவானில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இனிமேல் யாழ். இராணுவ நகர்வில் குண்டுவீச்சு விமானங்கள் தாழ்வான உயரத்தில் பறப்பதும் இதன்மூலம் தடை செய்யப்பட்டுள்ளது. விமான உதவிகள் பெரிதளவில் இல்லாத நிலையில் உலங்குவானூர்திகள் பறக்கமுடியாத நிலையில், இராணுவத்தின் நீண்டதூர எறிகணைகள் செயலற்று போயுள்ள நிலையில் யாழ். குடா இராணுவம் மிகவும் இக் கட்டான ஓர் நிலைக்கு இப்போது வந்துள்ளதென கூறப்படுகிறது. தனது கையிருப்பில் உள்ள ஆயுத தளவாடங்களையும் ஆள்வலுவையும் மட்டுமே இப்போது அது நம்பவேண்டிய ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

யாழ். குடாவில் வடமராட்சி கிழக்கில் உள்ள ஒரே பெரும் படைத்தளமான நாகர்கோவில் மேல் விடுதலைப் புலிகள் இப்போது முற்றுகைத் தாக்குதலை நடாத்தி வருகின்றார்கள். இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கையில் அப்படைத்தளதிற்கான விநியோகங்கள் பெருமளவில் தடை செய்யப்பட்டுள்ளன. பிரதான விநியோகப்பாதையான பருத்தித்துறை - ஆழியவளை வீதி விடுதலைப் புலிகளின் விசேட அணிகளால் துண்டிக்கப்பட்டு, குறிப்பிடத்தக்க ஓர் பிராந்தியம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதே வேளை படகுகள் மூலம் தரையிறங்கிய வேறு சில விசேட படையணிகள் நாகர்கோவில் படைத்தளத்தின் மிக அண்மித்த பகுதிகளில் தற்போது நிலைகொண்டுள்ளன. படைத்தளத்தின் மீது மிகக்கடுமையான நீண்டதூர எறிகணை வீச்சுக்கள் நடந்து வருகின்றன. இவ் எறிகணைகள் ஆனையிறவுப் பகுதியில் இருந்தோ, அல்லது வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்தோ வருவதாக இராணுவம் கூறுகின்றது. விடுதலைப் புலிகளிடம் இப்போது தேவைக்கு போதுமான அளவில் எறிகணைச் செலுத்திகள் உள்ளன என்றும், சிறீலங்கா இராணுவத்திடம் இல்லாத 130 மி.மீ நீண்டதூர எறிகணைச் செலுத்திகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றும் படையதிகாரிகள் கூறுகின்றனர். அண்மையில் பலாலித்தளம் மீது நடாத்தப்பட்ட எறிகணை விச்சில் இந்த 130 மி.மீ செலுத்திகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. வடமராட்சியில் படைத்தளங்கள் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் தற்போது அங்கு மாரிகாலம் ஆரம்பமாகியுள்ளது. இராணுவத்தின் கவச வாகனங்கள் அனேகமான பாதைகளால் நகரமுடியாது நிலை தோன்றியுள்ளது. இப்படியான ஓர் சந்தர்ப்பத்திற்காகவே விடுதலைப் புலிகள் மிக மெதுவாக தமது படை நடவடிக்கையை நகர்த்துகின்றார்கள் என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யாழ்.குடா யுத்த நிலை இப்படியிருக்க, கடந்தவாரம் வவுனியாவில் இரண்டு மினிமுகாம்கள் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, சிறீலங்காவின் மிகப் பலம்பொருந்திய திருகோணமலை கடற்படைத் தளத்தின் மேல் மீண்டும் ஓர் துல்லியமான தாக்குதலை கடற்புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

94ம் ஆண்டு ஈழப்போர் மூன்றின் ஆரம்பம் இதே திருகோணமலைக் கடற்படைத் தளத்தில்தான் தொடங்கியது. அப்போது இரண்டு கலங்கள் அழிக்கப்பட்டன. இப்போதைய தாக்குதலிலும் ஓர் துருப்புக்காவும் கலமும், ஓர் தாக்குதற் கலமும் அழிக்கப்பட இரண்டு போக்குவரத்துக் கலங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. இப் போக்குவரத்துக் கலங்களும் இராணுவத்தினருக்காகவே பெருமளவில் பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஓயாத அலைகள்-4 பரபரப்பின்றி ஒருபுறம் நகர உலகின் கவனத்தை மறுபுறம் திருப்ப தாக்குதல் நடவடிக்கைகள் தற்போது பலமுனைகளிலும் இடம்பெறத் தொடங்கியுள்ளன. அடுத்துவரும் வாரங்கள் சிறீலங்காவிற்கு மிக கடுமையாக சோதனைக்காலமாக அமையப்போகின்றது என்பதை தற்போதைய நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

> *விமான உதவிகள் பெரிதளவில் இல்லாத நிலையில் உலங்குவானூர்திகள் பறக்கமுடியாத நிலையில், இராணுவத்தின் நீண்டதூர எறிகணைகள் செயலற்று போயுள்ள நிலையில் யாழ். குடா இராணுவம் மிகவும் இக் கட்டான ஓர் நிலைக்கு இப்போது வந்துள்ளதென கூறப்படுகிறது.*

தமிழர் வித்தியாலயம்

75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16

Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 60, 65

டியூசன் கல்வி Soutien Scolaire

* École: CP.CE1. CE2. CM1. CM2
  Collège: 6e. 5e. 4e. 3e
  Lycée: 2nd, BEP, 1ère, la Terminale
* பல்கலைக்கழகப் பட்டம் பெற்று, தமிழும் தெரிந்து, கற்பிப்பதில் ஈடுபாடுடைய 25 பிரெஞ்சு ஆசிரியர்கள் தனிக்கவனத்துடன் கற்பிக்கிறார்கள்.
* Français Math. SVT. Biologie. Physique. Chimie. Histoire Géographie. Anglais. Allemand. Espagnol. Philosophie. உடன் Tamoul (Bac) என 13 பாடங்கள்.
* சனி, புதன் 14 மணி - 19 மணிவரை. ஞாயிறு : 10 மணி - 17 வரை
* வார நாட்களில் 17h15 - 19h15 ⇨ CE, CM, Collège
* 6h30 - 7h30 ⇨ 1ère, Terminale

வீணை, சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கள், வயலின்

யோகாசனம், கராட்டி, ஓர்கன்

பிரெஞ்சு வகுப்புக்கள் Le cours de français

* வாரநாட்கள்: காலை—மாலை வகுப்புக்கள் ➲❸ மாத கற்கை நெறி
* சனி—ஞாயிறு: பகல் —மாலை வகுப்புக்கள் ➲❻ மாத கற்கை நெறி

நல்ல ஆங்கிலம் Good English

TOEFL பரீட்சைக்குத் தயார்செய்யும் வகுப்பும் தொடங்குகிறது.
சிறுவர்களுக்கு என தனியான வகுப்பும் ஆரம்பிக்கப்படுகிறது.

கம்பியூட்டர் பயிற்சி நெறிகள்:

Windows 95, 98, NT. C.C+ +Visual Basic Internet. HTML. Javascript. Flash 4.E -mail Free Phone.

இங்கு தரப்படும் டியூஷன் கல்வியினால், படிப்பில் பின்தங்கி உள்ள மாணவர்கள் முன்னேற்றம் அடைகிறார்கள். விவேகமான மாணவர்கள் வகுப்பேற்றப்படுகிறார்கள். தேர்ச்சி அறிக்கையில் பாடங்களுக்கு Progrès, Encouragements, Excellent, Félicitations போன்ற குறிப்புக்கள் இருக்கின்றன. மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் மாணவர் மையக்கல்வி.
ஒப்பனை, தையல், அலங்கார, ஐசிங் கேக் வகுப்புக்கள்

நல்ல தமிழ்
தமிழ், பிரெஞ்சு மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகிறது.

பிரெஞ்சு - வகுப்பு:
வார நாட்கள்: 11h.30 - 13h.30. 14h00 - 16h.00. 16h.00-18h.00 18h.00-20h.00
சனி — ஞாயிறு: 11h.00 - 12h.30. 12h.30 -14h.00. 15h.00-16h.30. 17h.15. -18h.45. 18h.45 -20h.15

ச.சச்சிதானந்தம் M.A. D.S. Ph.D (10 பிரெஞ்சு. ஆங்கில நூல்களின் ஆசிரியர்)

Pub

எங்கே போனீர்கள் எமக்கொன்றும் சொல்லாமல்..?

நண்பர்களே... எம்மையெல்லாம் மறந்து எங்கே போனீர்கள்... எமக்கெதுவும் சொல்லவில்லையே... நீங்கள் போய் நான்கு வருடங்கள் சென்றுவிட்டதாம் ! இங்குள்ளவர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள். எனக்கப்படி தோன்றவேயில்லை. ஆனால், அதுதான் உண்மை. உங்களை மறக்காமலே நான்கு வருடங்கள் கழிந்துவிட்டன என்பதுதான் உண்மை. நீங்கள் சென்று மறைந்த அந்த மாலை வேளையையும், அடுத்து வந்த நாட்களையும் எப்படி மறக்க முடியும்...? ஆனால் நீங்கள் காணாமல் போன அந்த வீதியை நான் அன்றே மறந்துவிட்டேன். என் கால்கள் அந்த வீதிக்குள் நுழைய தானாகவே மறுக்கின்றன. என் நண்பர்கள் ஏதேதோ கதைகள் சொன்னபோதும், நான் எப்போதும் அந்த வீதியை தவிர்த்துத்தான் பயணம் செய்கிறேன்.

ஒருநாள் மாலையில்... அலுவலகத்தில் கஜனை நான் சந்தித்தபோது... என்னைப் பார்த்தவர் இனிக் கொஞ்ச நாளைக்குப் பிறகு இங்கே நான் நிற்க மாட்டேன் என்றார். நான் ஏன் ஏதாவது விசேடமாக வேலைகள் இருக்கின்றனவா என்று கேட்டபோது... எனக்கு வெளிவேலைகள் நிறைய வருகின்றன. ஆகையால், நீங்கள் தான் நடத்தவேண்டும், என்று சாதாரணமாகக் கூறியவர், பத்திரிகையை நான் எங்கையாவது இருந்து பார்த்துக்கொள்வேன் என்றார். இன்று பத்திரிகையின் வளர்ச்சியை எங்கோ இருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றாய் என் நண்பனே... அன்று நீ சாதாரணமாகச் சொன்னதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லையே? புரிந்திருந்தால் பயணத்தை தடுத்திருக்கத்தான் முடியுமா? உங்கள் பயணம் சாதாரண பயணமா...? எத்தனையோ சாதனைகளுக்கு அடித்தளமான பயணங்கள் அல்லவா..!

ஈழமுரசைத் தொடங்க சில நாட்களுக்கு முன் ஓர் மூத்த பத்திரிகையின் நிர்வாக நண்பனிடம் ஆலோசனை கேட்போம் வா என என்னையும் அழைத்துக் கொண்டு கஜன் சென்றபோது, அந்த அலுவலக முன் வாசலில் அமர்ந்து தீவிரமாக ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்த அந்த நண்பர், நல்ல சூடான வார்த்தைகளால் அவமதிக்கத் தொடங்கினார். பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் வெளியேற முயன்ற என்னைத் தடுத்து, பொறு.. பொறு.. என்று கூறி மிக அமைதியாக அங்கிருந்து வெளியேறி சற்று தூரம் வந்தபின் என்னிடம், அம்மான்... எங்களுக்கென்று ஒன்று தேவை.´ இவங்கள் எல்லாம் ஒரு காலம் வரும்போது எல்லாத்தையும் உதறித் தள்ளிவிட்டு போய்விடுவார்கள். நாங்கள்தான் எங்கட சனத்துக்கு உண்மையை எப்பொதும் கொடுக்க வேண்டும் என்று ஆறுதல் சொன்னார். இப்போது எங்கள் பத்திரிகை உங்கள் ஆதங்கத்திற்கு ஏற்றபடி நிமிர்ந்து நிற்கின்றது. எப்போதும் உண்மை சொல்ல.

கஜன் நீங்கள் விட்டுச் சென்ற இடம் இன்றும் காலியாகத்தான் இருக்கின்றது. எப்போது வருவீர்கள் ஆசைத்தம்பியாய்...? இன்னும் கூட வாசகர்கள் கேட்கிறார்கள். ஆனால், உங்களுக்குத்தான் ஏராளமான கடமைகள் கவனிக்கிறதுக்கு இருக்கின்றனவே...... தம்பிகள், நண்பர்கள் கவனித்தக் கொள்வார்கள் என்ற எண்ணமோ...?

நாதன்... நான் மன்னிக்க முடியாத ஒருவர். எனக்காக, என் எழுத்துக்களுக்கான காட்டமான ஒரு விமர்சகர். இப்போதெல்லாம் அவர் விமர்சிப்பதில்லை. அப்படியானவரை எப்படி நான் மன்னிக்க முடியும். என்னை எழுதுவதற்காக தூண்டிய முதலாவது ஆத்மா... அலுவகத்தில் ஓர் கலந்துரையாடலின் போது இனிமேல் எரிமலையில் நீயும் எழுதவேண்டும் என உரிமையோடு கூறியவர். ஆனால், என் எழுத்தில் எனக்கே நம்பிக்கை இருக்கவில்லை. சில வருடங்களின் பின் ஈழமுரசில் எழுத ஆரம்பித்தபோது எனது ஆக்கங்களை ஆழமாக விமர்சித்தவர். ஏன் வெருட்டியவர் என்று கூடச் சொல்லலாம். ஆம்... நாதன் பார்ப்பான் என்றதற்காக நான் சற்று கவனமாகத்தான் எழுதினேன். இப்போதும் அப்படித்தான் எழுதுகிறேன். நீங்கள் பகிரங்கமாக விமர்சிக்காது விட்டாலும் கூட என் மனதில் எப்போதும் உங்கள் விமர்சனம் விழுந்துகொண்டுதான் இருக்கின்றது. உங்களால் வளர்க்கப்பட்ட ஏராளமான தம்பிகள் இன்று, எங்கெங்கோ பல துறைகளில் நாட்டிற்கான செயற்பாடுகளில் முத்திரைபதித்து வருகின்றார்கள். எல்லாம் உங்கள் வளர்ப்பின் உறுதிதான். உங்களை பின்பற்றி உங்கள் வழிசெல்லும் அவர்கள் எப்படி உங்களை மறக்க முடியும்...?

அண்மையில் ஒருவர் சொன்னார்... எனக்கு கஜனின் எழுத்தில் அவ்வளவு அக்கறையிருந்ததில்லை. ஆனால் அவர்போய் நான்கு வருடங்களின் பின்தான் அதன் தாக்கம் எனக்கு புரிகின்றது. வெளிநாடு ஒன்றில் நடந்த மாநாட்டில் பேசிய பெரும்பான்மையானோர் கஜனின் எழுத்து ஊக்கத்தைப் பற்றியே பேசினார்கள். அவர்களது எழுத்துருவாக்கத்தின் தூண்டுகோலாக கஜன் நின்றிருக்கின்றார். இப்படி இன்னும் எத்தனையோ பேர்.... அதுபோல்த்தான் நாதனும்... போராட்ட எண்ணமே இல்லாத எத்தனையோ இளைஞர்களை போராட்டத்தின்பால் இழுத்தவர். தாயகத்தின் தேவையின் அவசியமற்று திரிந்தவர்களை தாயகம் நோக்கி திரும்ப வைத்தவர். உங்களை எப்படி மறக்க முடியும்..?

நான் கேட்க மாட்டேன்... எமக்கு சொல்லாமல் எங்கே போனீர்கள் என்று. ஏனென்றால் நான் நினைக்கிறன் நீங்கள் எம்முடன்தான் ஆத்மார்த்தமாக நின்றுகொண்டிருக்கின்றீர்கள்.

- பண்ணையார்

யாழ். குடாவை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்த 1995 டிசெம்பர் மாதம் கப்டன் கஜன் அவர்களால் எழுதப்பட்டது, இவ் ஆக்கம். 'யாழ் மண்ணில் இருந்து சிங்கள இராணுவம் தலைதெறிக்க ஓடும்' என்ற கஜனின் கனவு இன்று நனவாகி வரும் வேளையில், அதனை இங்கு மீள் பிரசுரம் செய்கின்றோம்...

“யாழ்ப்பாணத்தில ஆமி அடிக்கிற ஷெல்லைவிட - சிலர் ரெலிபோனில அடிக்கிற ஷெல்தான் பெரிசுங்கோ...!”

ஆருக்கு சொல்லி அழ?

யாழ்ப்பாணத்தைப் பிடிக்கப் போறம் எண்டு ரத்வத்தை மாத்தையாவின்ரை தலைமையில ஆமிக்காரர் வெளிக்கிட்டாலும் வெளிக்கிட்டிச்சினம். இப்ப அவையள் காட்டுற வாண வேடிக்கையள் காதுகொண்டு கேக்க முடியாத அளவுக்கு பூதாகாரமாக இருக்குது.

அங்கை உள்ள சனங்கள் விவேகமான சனங்கள். ஆமிக்காரர் இந்தாபிடி எண்டு ஆள் அம்புகளோடை வெளிக்கிட, சனமெல்லாம் ஒரே நாளிலை வலிகாமத்தை காலிசெய்துபோட்டு தென்மராட்சிக்கும், வன்னிக்கும் இடம்பெயர்ந்திட்டுதுகள். இப்ப சனசஞ்சாரமில்லாத யாழ்ப்பாணத்திலை ஒரே ஷெல்லடி, குண்டுவீச்சு. அதுக்குள்ள இருந்து வந்த ஒருத்தர் சொன்னமாதிரி 'எறிகணை வீச்சில்லை, எறிகணை மழைதான் அங்கை பொழியுது.'

ஆனால், யாழ்ப்பாணத்தை இந்தா பிடிக்கிறம் அந்தா பிடிக்கிறம் எண்டு கவுண்மேந்தும் ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டுதான் இருக்குது. இதுவரைக்கும் முழுமையா பிடிச்சதா தெரியேல்லை. நாளைக்கு கொடியேத்திறம், நாளையிண்டைக்குக் கொடியேத்திறம் எண்டு ஏதோ கலியாணத்துக்கு ஐயர் நாள் குறிச்ச கணக்கா ரத்வத்தையும், சரத்முனசிங்காவும் நாள் குறிக்கினம். பிறகு என்னெண்டால் ராகுகாலம் பாக்கினம்போல கிடக்குது. அவையள் இரண்டு பேரின்ரை கதையளைக் கேட்டால் ஏதோ கோயிலிலை திருவிழாவுக்குக் கொடியேத்திறதுக்கு நாள் வைக்கிறது மாதிரித்தான் கதைச்சுக் கொண்டிருக்கினம்.

முந்தி அத்துலத் முதலி, பிறகு ரஞ்சன் விஜயரத்தினா, டி.பி.விஜயதுங்கா இப்ப அந்த வரிசையில சரத் முனசிங்க... எண்டு புழுகுணிக்கூட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்குது. பொழுது போகாதவை, பொழுதுபோக வேணும் எண்டு நினைச்சால் சரத்முனசிங்கா கொழும்பில இருந்து விடுகிற அறிக்கைகளைப் பார்த்தால் “பம்பலாய்ப்“ பொழுது போகுமுங்கோ!

அவர் கவுண்மேந்தின்ரை ஆள். அதிகாரக் கதிரையில கொஞ்சநாள் தன்னும் குந்தியிருந்து ஆயுதம் அது இது எண்டு பெரிசு சிறிசா ஒண்டிரண்டு ஊழலைச் செய்து கொஞ்சக் காசையெண்டாலும் பார்க்க ஆசைப்படுகிற மனுசன், இப்பிடித்தான், திடீர்திடீர் எண்டு ஏதாவது அதிரடியா அறிக்கையள் விடுவார். ஆனால் இஞ்சை உள்ள சில சனம் அதைக் காவிக்கொண்டு கொண்டோடித் திரியினமெல்லே!.

ஆமிக்காரன் யாழ்ப்பாணத்தில அடிக்கிற ஷெல்லை விட, எங்கடை சனம் இஞ்சை ரெலிபோனுக்குள்ளால அடிக்கிற ஷெல்தான் தாங்க முடியாத ரோதனையாயிருக்கிறது. வதந்தியோ.. வதந்... தீ.... ஒண்டுமில்லாமல் ஆரும் ஒருத்தர் வெறுவாய் சப்பினால் காணும், உடனே அதுக்கு காது, கண், மூக்கு வைச்சு 'கிறியேற் பண்ண கன ஆக்கள் தயாரா' இருக்கீனம். பிறகென்ன கேக்கவே வேணும்!. ஆனால், உந்த வதந்தியளாலை, பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன் போற கதையா சனமெல்லாம் அந்தரிச்சுப் பதகளிக்கிறதையும் சம்பந்தப்பட்டவை கொஞ்சம் விளங்கிக்கொண்டால் நல்லதுங்கோ!.

விஞ்ஞானம் முன்னேறி உலகம் இப்ப கையளவுக்கை சுருங்கிப்போச்சு. ஓம், சற்றலைற் கொம்யூனிக்கேசனிலை வீட்டுக்கை இருந்துகொண்டே உலகத்தில் நடக்கிற அத்தனை நடப்பையும் பார்க்கலாம். அதிலையும் இப்ப கேபிள், சற்றலைற் எல்லா இடமும் வெகுத்து மலிஞ்சுபோய் கிடக்குது. பிறகென்ன எல்லா வீட்டிலயும் சி.என்.என், பி.பி.சி, ஏ.பி.சி எண்டு ஒரே உலக உலாத்தான். இதுகளின்ர உதவியால ஊர்உலகத்து நடப்புக்களை உடனுக்குடன் அறிஞ்சு கொள்ளுறதும் அதிலை ஆர்வத்தோட அக்கறைப்படுகிறதும் ஆரோக்கியமான விஷயம்தான். ஆனால், செய்தியிலை சொல்லாததையும் சொன்னதாக எல்லே சிலபேர் அவிழ்த்து விட்டுவிடுவினம்.

உதாரணத்துக்கு, 'கோண்டாவிலில நஞ்சுவாயு அடிச்சு எக்கச்சக்கமான ஆமி செத்துப் போச்சுதாம், கொழும்பில குண்டு வெடிச்சதால 500 பொதுசனம் செத்துப்போச்சுதாம், சாவகச்சேரியில பொம்பர் குண்டு போட்டதிலை ஆயிரம் பேருக்கு மேல பொதுச்சனம் குளோஸ், கனடாவில புலியள் இயக்கத்துக்குத் தடை, சிறீலங்கா அரசுக்கு உதவியாக பலாலியில இந்தியன் ஆமி வந்து நிக்குது. சாவகச்சேரியில புலியளின்ர குண்டு வெடிச்சதில 500 பொதுச்சனம் செத்துப்போச்சு. ரஜனிகாந்தை புலியள் சுட்டுப் போட்டினம். இதெல்லாம் போனகிழமை பாரிஸ் லாசப்பலில் நேரத்துக்கு நேரம் அடிபட்ட சில கதையள். இதில ஏதாவது உண்மை இருந்ததோ இல்லையோ எண்டதை உங்களிட்டையே விட்டுவிடுகிறன்.

இந்த சீறுவாணங்களில் சிலது சரத்முனசிங்கா மாத்தையாவால பத்தவைக்கப்பட்டது. சிலது எங்கட கொண்டோடியளின்ரை உபயம். அதிலையும் முக்கியமானது, ஒரு எப்பன் நுணுகிப் பார்த்தால் ஒரு விஷயம் நல்லா விளங்கும். அதாவது அங்கை சனம் செத்தது, இஞ்சை சனம் அழிஞ்சுது எண்டு இவை அவிட்டு விடுகிறது, இஞ்சை இருக்கிற “எங்களுக்கு வயித்தில புளியைக் கரைக்குது.“ சும்மா சனங்கள் செத்துமடிய போராடுறவை என்ன செய்யினம் எண்டு சிலபேருக்கு வெறுப்பும் விரக்தியும் வரப்பாக்குது. அதிலையும் சனம் அள்ளு கொள்ளையா ஐந்நூறு, ஆயிரம் எண்டு புலியளால சாகினம் எண்டால் எரிச்சல்தானே வரும்?. எப்பன் எப்பனா போராட்டத்தில நம்பிக்கை குறையும், இந்தக் கதையளைக் கேட்டால் இதுதான் நடக்கும். பிறகென்ன, 'அச்சா... அச்சா... சோக்கெல்லோ... சோக்கு' எண்டு சிறீலங்கா கவுண்மேந்துக்கு எக்கச் சக்கமான புழுகம்தான். பின்னையென்ன கவுண்மேந்தின்ர நோக்கமே அதுதானே! வெளியில உண்மைச் செய்தியளை விடாமல், சனத்தை அப்சற் ஆக்கி, போராட்டத்தில் விரக்தி வாறமாதிரி, புலியளிலை வெறுப்பு ஏற்படுத்துறதுதான் நோக்கம். இதை நாங்கள் சிலபேர் விளங்கியோ விளங்காமலோ அவங்கள் சொன்னதை, அதிலையும் ஈரைப் பேனாக்கி பேனை பெருமாளாக்கிக்கொண்டு திரியிறம். அதிலையும் சங்கையீனமான விசயம் என்னெண்டால், சிறீலங்கா பற்றி, செய்தி சொல்லேக்குள்ளேயே இது கவுண்மேந்து தந்த செய்திதான், பெரிசா உண்மை இருக்காது எண்டுதான் பி.பி.சிக் காரரே சொல்லுகினம். உந்த லட்சணத்தில அதை நாங்கள் கொண்டோடித் திரியிறதும் ஒண்டுமில்லாததை ஊதிப் பெருக்க வைக்கிறதும் எந்த வகையில ஞாயமுங்கோ? தெரிஞ்சோ தெரியாமலோ உப்படியான செய்தியளை நாங்கள் பரப்புறதை நிற்பாட்டாமல் இருந்தம் எண்டால் கவுண்மேந்துக்குத்தான் லாபம். அதைவிட கவுண்மேந்தோட போராடுகிறது எண்டது சும்மா அழிவுக்குத்தான், எல்லாத்தையும் விட்டுவிட்டு சந்திரிகா அரசோட சமாதானமா போறதுதான் நல்லதெண்டு சில பழம்பெரும் யூரோப் சிற்றிசன்காரர் சொல்லிக்கொண்டு வெளிக்கிடுகினம் எண்டும் ஒரு கேள்வி.

> “யாழ்ப்பாணத்தில ஆமி நிக்கும் வரைக்கும் பேச்சுவார்த்தை எண்ட கதைக்கே இடமில்லை“ எண்டு தலைவர் சொல்லிப் போட்டார். இது ஒரு தற்காலிக பின்னடைவே தவிர தோல்வியில்லை எண்டும், உந்த ஆமிக்காரராலை கனநாளைக்கு நிண்டுபிடிக்க ஏலாது எண்டும் சொல்லியிருக்கிறார்.

இது இப்படியிருக்க, கதையோட கதையாய் இதையும் சொல்ல வேணும். வெளிநாடுகளில புலிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்யிறதுக்கு தாங்கள் ஒழுங்குகள் செய்திருக்கிறதாக கிட்டடிலதான் சந்திரிகா அமையார் சொல்லியிருக்கிறா. நீங்களும் கேள்விப்பட்டிருப்பியள்தானே. அப்ப உந்த வதந்தீ... கொண்டு திரியிறவை பற்றியும், போராட்டம் இனிச்சரி.. எழும்பேலாது எண்டிறவை பற்றியும் நீங்கள் ஒரு சொட்டெண்டாலும் கவனமாயிருக்க வேணுமெல்லோ!

“யாழ்ப்பாணத்தில ஆமி நிக்கும் வரைக்கும் பேச்சுவார்த்தை எண்ட கதைக்கே இடமில்லை” எண்டு தலைவர் சொல்லிப் போட்டார். இது ஒரு தற்காலிக பின்னடைவே தவிர தோல்வியில்லை எண்டும், உந்த ஆமிக்காரராலை கனநாளைக்கு நிண்டுபிடிக்க ஏலாது எண்டும் சொல்லியிருக்கிறார். அப்ப இனி வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி அவல் கடலை சுண்டலோடை சமாதான் நடக்கப்போகுது. ஆமி தலைதெறிக்க ஓடத்தான் போகுது.

அதுக்கு வெளிநாட்டில இருக்கிற எங்கடை பங்கும் வேணும்தானே. போராட்டத்தில பங்காளியாக இணையவேணும் எண்டதுக்காக, நாங்கள் எல்லாரும் துவக்குத் தூக்கிக்கொண்டு எண்ட அர்த்தத்தில இல்லை. அதைவிட நாங்கள் செய்யவேண்டியது- மனம் வைச்சால் எங்களாலை செய்யக்கூடியது எத்தினையோ விஷயங்கள் இருக்குது. உங்களுக்குத் தெரியாததையே நான் சொல்லப்போறன்?

- ஆசைத்தம்பி

முதற்கண் எமது இதழின் நிறுவனரும், இதழாளனுமான கப்டன் கஜனின் நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆர்வத்துடன் பங்கெடுத்த படைப்பாளிகள் அனைவருக்கும் ஈழமுரசு குடும்பத்தினர் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள். எமக்கு வந்து சேர்ந்த படைப்புக்களில் பல வளர்ச்சிப் பரிமாணங்களும் செறிந்திருந்தன. முகைவெடித்த நாற்றுக்களின் சிலிர்ப்பில் சில படைப்புகள், சிறுகதை அனுபவ தாக்கச் செறிவுடன் சில படைப்புக்கள் என அவை இருந்தன.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், எம்மில் வளரத்துடிக்கும் புதிய சிறுகதை எழுத்தாளர்கள் இன்னும் தமது தேடல்களை விரிவாக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது புகலிட இலக்கியத்தின் செழுமை இன்னும் ஓங்கும். ஏன் நாம் இதையிங்கு குறிப்பிடுகிறோம் என்றால், வந்திருந்த சில படைப்புக்களில் அவசர ஓட்டங்களும், வசன அமைப்புக்களில் முரண்பாடுகளும், ஏன் எழுத்துப் பிழைகளும் கூட இடம்பெற்றிருந்தன. இந்த புகலிடச் சூழ்நிலையில் வேலைப்பளுக்களுக்கிடையே ஒரு சிறுகதையை படைப்பாளன் ஆக்குவதென்பது இலேசான வேலையல்ல என்பதை நாம் அறிவோம். ஆனால் எமது ஆர்வம் எப்போதும் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தில் தான், இவற்றை இங்கு நாம் சகோதர வாஞ்சையுடன் எடுத்து வைக்கின்றோம். உங்களின் ஆர்வத்திற்கு ஈழமுரசு வழமைபோலவே என்றும் களம் அமைத்துத்தரும்.

கப்டன் கஜனின் நான்காவது ஆண்டு நினைவுச் சிறுகதைப் போட்டியில் 20 வரையான படைப்பாளிகளின் 25ற்கு மேற்பட்ட சிறுகதைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் நான்கு சிறுகதைகள் ஆசிரியர் குழுவினால் பரிசுக்குரியனவாக தேர்ந்தெடுக்கப்பட்டன. போட்டியில் 3வது பரிசினைப்பெறும் சிறுகதை இவ்வாரம் பிரசுரமாகின்றது.

3ஆம் பரிசு பெற்ற சிறுகதை

மரணத்துள் வாழ்வு

இதுவரை இரண்டு கோப்பைகளை உடைத்தாகிவிட்டது. பக்கத்தில் நின்று வேலை செய்தவன் மூர்த்தியை அனுதாபத்துடன் ஒருமாதிரிப் பார்த்தான். முதலாளி இன்னும் வரவில்லை.

மூர்த்திக்கு மன உழைச்சலுடன் வேலை செய்வது கஷ்ரமாக இருந்தது. உடம்பு முடியாவிட்டால், 'சுகயீனம்' என்று லீவு எடுக்கலாம். மன உழைச்சலுக்கு எந்த வைத்தியரும் இங்கு 'சுகயீனக்கடிதம்' நிச்சயம் தரமாட்டார்கள். மகளின் திடீர் வருத்தத்தைக் கேள்விப்பட்டது தொடக்கம் நிலையில்லாது தவித்துக்கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் நாலைந்து மாதங்களாக, எந்தப் பிரச்சினையுமின்றி இருந்தது அவன் குடும்பம். உதவிக்கு சுற்றிவர உறவினர்களும் இருப்பதால், பெரிதாக யோசித்து இவன் கவலைப்படவுமில்லை.

போனகிழமைதான், மனைவிமகளின் கடிதங்கள் வந்திருந்தன. அதில்கூட வெய்யில்வெக்கைக்கு எல்லோருக்கும் மாறிமாறி சாதாரண காய்ச்சல் வருவதாகத்தான் எழுதப்பட்டிருந்தது. 'மூத்தவளுக்கு காய்ச்சல்கூடி மூளைக் காய்ச்சலாக மாறிவிட்டது. நிலைமையைப் பார்த்து கொழும்புக்குக் கொண்டுபோகப் போவதாக' தகவல் வர இவன் ஒரேயடியாகப் பதறிப் போய்விட்டான்.

இரவு முழுக்க ரெலிபோனுக்குப் பக்கத்திலேயே பழியாகக் கிடந்தான். எந்தத் தகவலும் வரவில்லை. கடைசியில் விடிய நான்கு மணியளவில் 'எந்த முன்னேற்றமும் இல்லை' கொழும்புக்குக் கொண்டுபோய் விட்டதாக தகவல் வந்தது.

அதற்குப்பிறகு நித்திரை எங்கேயோ பறிபோய்விட்டது. அழுதழுது வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டி, எப்படியோ மனதை திடப்படுத்திக் கொண்டு தான் அவன் வேலைக்கு வந்தவன்.

ஆனால் பரிதவிப்பில் கைகால்கள் இயங்க மறுத்தன. ஒருவிதமாக வேலைமுடிந்து, ஓட்டமும் நடையுமாக பஸ்சைப் பிடிக்க வந்தான். கொட்டும் பனிமழையை கையில் ஏந்தி எறிந்தபடி மாணவர்கூட்டம் ஒன்று ஆரவாரத்துடன் பஸ்சில் ஏறியது. அவர்களைப் பார்க்க, அவனுக்கு மகளின் நினைவுகள் விம்மி வெடித்துச் சிதறின.

மூன்று நாலு வயதிலேயே பள்ளிக்கூடம் போகவேண்டுமென்று அடம்பிடிக்கத் தொடங்கிவிட்டவள், வீட்டுக்குப் பக்கத்திலேயே பள்ளிக்கூடமும் இருந்தபடியால் அவளின் நினைவெல்லாம் எப்பவும் அங்குதான் இருக்கும். பள்ளிக்கூடம் போகத்தொடங்க, வீட்டில் 'பெரியமனிசி' போன்ற நடை உடைபாவனைதான்.

இரவில் தகப்பன் படுக்கைக்கு வரும்வரை காத்திருந்து தகப்பனின் நெஞ்சில்தான் படுப்பாள். அவளுக்குப் பிறகு பிறந்த தம்பிமாருக்கும், அந்த உரிமையை ஒரு நாளும் அவள் விட்டுக்கொடுக்கவில்லை. அப்படியொரு ஒட்டுதல் தகப்பனுடன்.

பிள்ளை அருமையைத் தீர்த்தவள் என்று மூர்த்திக்கும் அவளில் ஒரு 'தனி வாரப்பாடும் பட்சமும்தான்.' கடைசியாக அவளை விட்டுப்பிரிந்த அந்த உறக்கமில்லாத இரவு நெஞ்சில் அப்படியே உறைந்து போயிருக்கின்றது.

தகப்பன் அடுத்தநாள் கொழும்புக்குப் போய்விடுவார் என்று அறிந்தவள், நித்திரை கொள்ளாமல் தகப்பனின் முகத்தையே பார்த்தபடி இருந்தாள். சமாதானப்படுத்தி உறங்க வைத்தாலும் அடிக்கடி முழித்து 'என்னையும் கூட்டிக்கொண்டு போங்கோ' என்று கேட்டபடியே விடிய நல்ல நித்திரையாகிப் போனாள்.

எழும்பினால் இனிப் பிரச்சினை என்று கனத்த மனத்துடன் விட்டுவிட்டுவந்து விட்டான். 'எழும்பி எப்பிடித் துடித்து அழுதாளோ? என்று இடை வழியெல்லாம் மாதக் கணக்கில் நின்று வரும்போது, நினைத்துக் கதறிக்கதறித் தனக்குள் அழுதது, இப்போது நினைக்க நெஞ்சைப் பிளந்து கண்ணீராக ஊற்றெடுத்தது.

பனிக்குளிருக்கு மூக்கடைத்துவிட்டது போன்ற பாவனையில், யாருக்கும் தெரியாமல் வழியும் கண்ணீரைத் துடைத்தான்.

வீட்டுக்குள் நுழைந்தவன், மனதில் நம்பிக்கையை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டு, ரெலிபோன் நம்பர்களை அழுத்தினான்.

மனைவியின் குரலைக்கேட்க, காய்ந்துபோன நெஞ்சுக் குழியில், ஒருதுளிநீர் பட்ட உணர்வில் 'எப்பிடியப்பா இருக்கு இப்ப எங்கடை பிள்ளைக்கு? என்று கேட்டான்.

மறுமுனையில் வெறும் அழுகைதான் சில நிமிடங்களுக்கு நீடித்தது. கொந்தளிக்கும் அலைகடலில் தன்படகின் இருப்பை காப்பாற்றும் ஆதங்கம் ஒவ்வொரு விசும்பலிலும் வெளிப்பட்டது.

'எப்பிடியப்பா இருக்கு?' மீண்டும் அதேகேள்வி, இம்முறை குரல் ஆட்டம் கண்டது.

'அப்பிடியேதான் இருக்கு! இன்னும் கண்முழிச்சுப் பாக்கிறாளில்லை. மூண்டு நாளாச்சு நினைவு தப்பி, டாக்குத்தர்மாரும் ஒண்டும் வடிவாகச் சொல்ல மாட்டினமாம், காய்ச்சல் கொஞ்சமும் குறையாதாம்! நாங்கள் என்ன பாவம் செய்தம்? எங்கடை செல்லத்திற்கு ஏனிப்பிடி?' அதற்குமேல் முடியாமல் அவள் விம்மினாள்.

'அழாதையுமப்பா... எல்லாம் சுகம் வரும்! ஏன் முதலே கொழும்புக்குக் கொண்டு வந்திருக்கலாம்தானே? ஏன் காய்ச்சல் கூடுமட்டும் வைச்சிருந்தனீங்கள்?'

'காய்ச்சல் இருந்தாப்போலத்தான் கூடினது. கூடின உடனே கொழும்புக்குக் கொண்டுபோகக் கேட்டனாங்கள். ஆனால் பாத்துக் கொண்டுபோகலாம் எண்டு மறிச்சுப்போட்டினம். இனி ரவுணைத்தாண்டி வாறதெண்டால் ஆமியின்ரை அவசர பாஸ்.... போக்குவரத்து வசதி எல்லாம்... இழுத்தடிச்சுத்தான் தந்தவங்கள்! மாதக்கணக்கா வெறும் தண்ணிச்சாப்பாடுதான் பிள்ளைக்கு... ஒரே அப்பா.... அப்பா எண்டு கேட்டுக்கொண்டு மயங்கிப்போட்டாள். நீங்கள் கெதியாவாங்கோ....!'

இம்முனையில் இவனின் அழுகைச் சத்தம் பீறிட்டு வெளிப்பட்டது. உயிர்ப்பறவையின் கழுத்தில் கத்தி பாய்ச்சிய வேதனையில் பொங்கப் பொங்க விம்மினான்.

'அழாதையுங்கோப்பா...! கடவுள் கைவிடமாட்டார். நீங்கள் அங்கை தனிய இருந்து.... இப்பிடி அழுகிறது கூடாதப்பா!'

இருவரும் தங்களின் வேதனைகளை மறைத்து ஆறுதல் சொன்னாலும், ஆறுதலேயற்ற நெஞ்சைப்பிழியும் அவலவேதனை இருவரையும் ஆட்டிப்பிடித்து சித்திரவதை செய்தது.

கடைசிக் கடிதத்துடன் வந்த போட்டோக்களை மீண்டுமொருமுறை பார்க்கவேண்டும் போலிருந்தது. தான் படிக்கும் பள்ளிக்கூடத்தில் வில்லுப்பாட்டுக்குழுவில் தலை ஆளாகநின்று செய்த நிகழ்ச்சிப் போட்டோக்கள் அவை.

சரியாக ஆறு வயதில் விட்டிட்டு வந்தது. இப்ப ஐந்து வருடத்தில் வித்தியாசமான வளர்த்தி. பட்டுப் பாவாடை சட்டைக்கு இன்னும் நல்ல நெடுவலாகத் தெரிந்தாள்.

'ஆற்றை கண்பட்டுதோ... இப்பிடி வந்திட்டுது' பொட்டுப் பொட்டாக கண்ணீர் போட்டோக்களை நனைத்தது.

தாய் எழுதும் கடிதங்களில் தானும் ஒரு கடிதம் வைத்து எப்பொழுதும் மறக்காமல் அனுப்புவாள்.

'எங்களைப்பற்றி யோசிக்கவேண்டாம்... நீங்கள் உடம்பைக் கவனியுங்கோ! எங்களுக்கு ஒரு குறையும் இல்லை' எல்லாக் கடிதத்திலும் இந்தவரிகள் தவறாமல் இருக்கும்.

திரும்பும் பக்கமெல்லாம் கழுத்தை நெரித்துப்போடும் தனிமை, குளிர், வேலை என்று குற்றுயிராகத் தவிக்கும் வேளைகளில் உயிர் கொடுத்து மீட்பது அகதித் தமிழனுக்கு இந்தக் கடிதங்கள்தான். இவனுக்கு கொஞ்சம் கடிதம் பிந்தினாலும், விசர் பிடித்தமாதிரி ஆகிவிடுவான்.

'ஊரிலை உள்ள கோயிலுக்கெல்லாம் சும்மா கண்டதுக்கும் நேத்தி வைப்பினம்...! செய்து முடிச்சினமோ தெரியேல்லை...! எந்தப் பாவம் என்ரை பிள்ளையை பிடிச்சுதோ?' பிள்ளைப்பாசத்தில் மனம் மீண்டும் கண்டதையும் நினைத்து அரற்றியது.

வெளியே மரங்களில் பனி திட்டுத் திட்டாக உறையத் தொடங்கியிருந்தது. நாளை கொஞ்சம் வெயில்பட்டாலும், பனி காணாமல் கரைந்து போய்விடும். இல்லாவிட்டால், பளிங்குக்கற்கள் போல் இறுகி உறைந்துவிடும்.

இவனின் மனஓலங்கள் கரைய வழியின்றி உறைந்துபோய், கல்லாக நெஞ்சை அழுத்திப் பிடித்தது.

'எப்பிடியும் எழுதிக்குடுத்திட்டு கெதியா என்ரைபிள்ளைக்கு பக்கத்திலை போயிருக்கோணும்.... இனியும் இஞ்சை உழைச்சு என்னத்தைக் காணப்போறன்? அங்கை எல்லாரும் ஒண்டாயிருந்து சாகலாம்!'

மனதில் எடுத்த முடிவில் உறுதியுடன் போவதற்கான அலுவல்களைப் பார்த்தான். அவனின் அவசரத்துக்கு ஒன்றுமே சரிப்பட்டுவரவில்லை. அவசர பாஸ்போட் எடுக்கவே கொஞ்ச நாட்களை இழுத்தடித்தார்கள்.

அகதிகளை எல்லாவிதத்திலும்தான் புறக்கணித்தார்கள். 'அகதிக்கு' மனித உணர்வுகள் அப்பாற்பட்டவை எனக் கணித்தன இந்த மேற்குலக நாடுகள்.

மகளின் நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டே போவதை அறிந்து துடியாகத் துடித்து, இந்த நாட்டுக்கு தஞ்சம் கேட்டுவந்தபோது, கெஞ்சியதைவிட நாட்டைவிட்டுப் போவதற்கு அதிகப்படியாகவே கெஞ்சினான்.

எல்லாம் ஒரு மாதிரி சரிவந்து, இன்னும் ஒரு கிழமையில் பயணம் என்று முடிவானது.

'என்ரை பிள்ளையை இனி கெதியாப்பாக்கலாம்.' இந்த நிம்மதியுடனேயே நீண்ட நாட்களின்பின், அன்று அடித்துப் போட்டாற்போல அவனுக்கு நல்ல நித்திரை வந்தது.

சம்மந்த சம்மந்தமில்லாத கனவுகள் ஒரே அலைக்கழித்தன. வீட்டின் பின்பக்கமாக உள்ள ஆழ்கிணறு மாரிமழைக்கு நிரம்பிவழிந்து கொண்டிருந்தது. ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருந்த மகள், கிணற்றுக்குள் தவறி விழப்போக இவன் கையைப்பிடித்து இழுத்துவிட்டான். பிறகு வீடெல்லாம் சோடிக்கப்பட்டிருந்தது. ஒரே கலகலவென்று சொந்தக்காரர்கள் கூட்டம். மகளை பெரிய பொம்பிளைபோல் அலங்கரித்து இருத்தி வைத்திருக்கின்றார்கள். ஆரத்தி எடுத்து, மேளக்கச்சேரி நடக்கின்றது. இவனும் ஆசையுடன் வீட்டுக்குள் போகின்றான்.

அதற்கிடையில் கனவு கலைந்து கண்முழித்துவிட்டான். இரவும் விடிந்துவிட்டது. 'விடியப்புறம் கண்டகனவு பலிக்கும்' என்று தனக்குள்ளே எண்ணியபடி, மனைவியுடன் கதைக்க முயற்சி செய்தான்.

யாருமே ரெலிபோனை எடுக்கவில்லை. கொஞ்சம் பிந்தி எடுத்துப்பார்க்கலாம் என முயற்சியைக் கைவிட்டான்.

வெளியே சிறுவர்கள், உறைந்துபோய்க் கிடந்த பனிக்கட்டிகளை எடுத்து, ஒருவருக்கொருவர் எறிந்து விளையாடிக் கொண்டிருந்தனர். சில்லிப்பு தாங்காமல் ஆனந்தமாகக் கூக்குரலிட்டனர். இவற்றை வெறித்துப் பார்த்தவன், தாளமுடியாமல், நொந்த நெஞ்சைத் தடவிவிட்டான்.

கீழே பெல் அடிக்கும் சத்தம்கேட்டு, பார்வையைத் திருப்பியவன், தனது ஊரவர்கள் மூவர் இந்த நேரத்தில் வந்திருப்பதைக் கண்டு அதிசயப்பட்டான்.

ஒருவரது முகங்களும் சரியில்லை.

கொடூரமௌனம் அங்கே இருப்பாகியது.

அந்த மௌனத்தின் முட்கள் அவனின் நெஞ்சைக் குத்திக் கிழித்தன. உதடுகள் ஏதோ கேட்கத்துடித்து முடியாமல் அடங்கின.

வந்திருந்தவர்களில் உறவில் நெருக்கமானவன் அவனை 'றூமுக்குள்' அழைத்துப்போனான்.

'எங்கடை கையிலை என்ன இருக்கு? எல்லாம் முடிஞ்சு போச்சு! ராத்திரிதான் கடைசியா கண்முழிச்சுப் பாத்திட்டு மூச்சு நிண்டுபோச்சாம்! போன பிள்ளையை நினைச்சு அழுது என்ன பிரயோசனம்? உங்களை நம்பியிருக்கிற மற்றைப் பிள்ளையள், மனிசிக்காக மனதை தைரியமா வைச்சிருங்கோ'... அதற்குமேல் எதுவுமே அவனின் காதில் விழவில்லை.

தான் வைத்திருந்த மனம் கொள்ளா நம்பிக்கைகளும், கனவுகளும் சிதைந்துபோன வேதனையில் குலுங்கிக்குலுங்கி அழுதான்.

கைகட்டி, வாய்பொத்தி தன்னால் எதுவுமே செய்யமுடியாமல் மகளின் மரணவேதனையைத் தொலைதேசத்தில் நின்று அனுபவிக்கும் கொடுமையை எண்ணிக் கதறினான்.

வெறிபிடித்தவன்போல, மகளின் போட்டோக்களை முகத்தில் அடித்துக் கத்தினான்.

'என்ரை பிள்ளை அப்பா வருவார், வருவார் எண்டு பாத்துக்கொண்டுதான் செத்துப்போயிருப்பாள். இனி அங்கை போய் ஆரைப் பாக்கப்போறன்? இல்லை.... இப்பத்தான் என்ரை பிள்ளையைக் கண்டனான். என்னைப்... பாத்துக்கொண்டிருப்பாள்.'

அவனின் நினைவுகளும், நிஜங்களும் தடம்மாறி, குழம்பி, மனவெளியில் பேரிரைச்சலோடு வெடித்துக்கிளம்பி, அதிர்வுகள் தாங்கமுடியாமல் கொஞ்சம் கொஞ்சமாக மடியத்தொடங்கின.

இப்பொழுது அவன், அந்த மாநிலத்தின் 'மனநல மருத்துவமனை' யில், மகளின் போட்டோக்களை இறுகக் கட்டிப்பிடித்தபடி தனக்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

அவனுக்கென்று மருத்துவமனையில் நியமித்த மொழிபெயர்ப்பாளர், அவனின் சிதறிப்போன அவல உணர்வுகளுக்கு 'மொழிதெரியாமல்' திண்டாடிக் கொண்டிருக்கின்றார்.

லதா உதயன்-சுவிஸ்

சுதந்திர தேவி நின்னை தொழுதிடல் மறக்கிலோமே

1996ம் ஆண்டு இலையுதிர் கால முற்பகுதியில் பாரிஸ் மண்ணில் விதைக்கப்பட்ட எமது நண்பர்களின் நினைவுத் துளிகள் இவை. வரலாற்றுப்பெருமைமிக்க உலகின் முதலாவது மக்கள் புரட்சியும், தொழிலாளர் புரட்சியும் கருக்கொண்ட பாரிஸ் மண்ணிலே நாதன், கஜன் என்ற அந்த இனிய நண்பர்கள் இன்று உறங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களை மீண்டும் இனிநாம் பார்க்கமுடியாது விடினும், அவர்களின் இலட்சியம் அவர்களின் ஒரே சிந்தனை, தாயக விடுதலையின் நேசிப்பு ஆகியவை எம்முன்னே பரந்துவிரிந்து கிடப்பதால், அவற்றினுள்ளே இந்த இனியவர்களின் உயிர்த்துடிப்பு எமக்குத் தெரிகின்றது. புரட்சியாளர்களின் கல்லறைகள் எப்போதும் மக்களுக்கொரு பாடப்புத்தகமாகவிருப்பதால், இந்தப் புரட்சியாளர்களும் எமது மக்களுக்கொரு உத்வேகம் கொடுக்கும் புத்தகங்களாகவே எம்முன் விரிந்துகிடக்கின்றார்கள். இவ்விரு வரலாற்றுப் புத்தகங்களிலும் நான் அதிகம் புரட்டியது கஜன் என்ற புத்தகத்தைத்தான். ஈழமுரசுக் குடும்பத்தில் நான் இணைந்துகொண்டபோது அந்தப் புத்தகம் என்முன்னால் விரிந்துகிடந்தது. அதற்காக இப்போது ஒரு புத்தகம் மூடிக்கிடக்கின்றது என்பது அர்த்தமல்ல. இப்போதும், கஜனது நினைவுகள் எம் குடும்பத்தில் ஒரு உத்வேகத்தைதான் கொடுக்கின்றது.

புரட்சியாளன் கார்ல்ஸ் மார்க்ஸிடம் ஒருவர் ஒரு தடவை உங்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயம் என்னவென்பதை ஒரு வினாவாகத் தொடுத்தார், கார்ல்ஸ்மார்க்ஸ் அதற்கு ஒரு விடையாக 'போராட்டம்தான் எனக்கு மகிழ்ச்சி தரும் விடயம்' என்றார். அந்தப் புரட்சியாளன் மறைந்து வெகுகாலமாகிவிட்டது.

ஆனால் இன்று எமது தாயகத்தில்கூட இந்தப் பதில்தான் பலரிடமிருந்தும் விடையாக வருகிறது. ஏனெனில் போராட்டம் இன்று எமது வாழ்வியலில் ஒரு அங்கமாகிவிட்டது.

இலட்சியவாதம், மானிடப்பற்று, செந்நிறைவு காணும் துடிப்பு இன்று தமிழர் தாயகத்திற்கு பெரும் சொத்தாகி வளர்ந்திருக்கின்றது. இந்த வகையில் அந்தப் பெரிய குடும்பத்தில் இரு உறுப்பினர்களாக எனது நண்பர்களும் இருக்கின்றார்கள்.

நண்பன் கஜன், எழுதவேண்டுமென்பதற்காக எழுதிக்குவித்த வகையினன் அல்ல. எமது சமுதாயம் குறித்த வாஞ்சைகள் அவன் மனதைக் குடைந்து எழுப்பிய கேள்விகளின் பதில்களாக அவன் எழுத்துக்கள் தெறித்தன. வித்தாக விழும்வரை இந்தத் துடிப்பு அவனிடம் அலைமோதிக் கொண்டேயிருந்தது. புகலிடத்தில் அவன் வாழ்ந்த காலத்தில், எப்படி வாழ்வது? எந்தத் தொழிலை தேர்ந்தெடுப்பது? என்ற கேள்விகளுக்கு அவனது வயதை ஒத்தவர்கள் மனதை அலட்டிக்கொண்டபோது, வருங்காலத் தொழில் குறித்து மனக்கோட்டைகளை எழுப்பாமல் தற்பெருமை பாராட்டாமல் அவன் தூயதொரு பணியை தேர்ந்தெடுத்தான். அவனைப்போலவே தூயபணியினை தேர்ந்தெடுத்த இன்னொருவன்தான் நாதன். இவ்விருவரும் தம்மினத்தின் நல்வாழ்விற்காக உழைப்பதன் மூலம், தம்மை முழுமையாக்கி செந்நிறைவு கண்டவர்கள். எனினும், அந்தச் செந்நிறைவு எமக்கு மேலும் கிடைக்காமல் சிங்களப் பேரினவாதத்தால் முறிக்கப்பட்டவர்கள்.

ஒருமனிதன் தனது சுயலாபத்திற்காக உழைத்து, தன்னலமான வழியில் நடந்தாலும்கூட அவன் ஒருவேளை அறிஞனாகலாம், ஞானியாகலாம், இல்லை கவிஞனாகலாம். ஆனால், அவனொருபோதும் மகத்தான மனிதனாகிவிட முடியாது. வாழ்க்கையில் நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் பாதை எனது இனத்திற்கு, எமது மொழிக்கு, எமது தேசத்திற்கு, எமது மனித குலத்திற்கு மிக அதிகமாக உழைக்கும் வாய்ப்பைத் தருவதாக இருக்குமானால் எவ்வளவு கொடிய இன்னல் வந்தாலும், எமது தலைகளைத் தாழ்த்திவிட முடியாது. ஏனெனில், எமது பாதை எமக்காக இல்லாமல், எம்மைச் சார்ந்திருப்போருக்கான தியாகப் பாதையாக அது இருப்பதே காரணமாகும். இந்தப் பாதையில் தான் ஆயிரமாயிரம் எம் தேசப் புதல்வர்கள் அணிவகுத்துச் செல்கின்றனர். இந்தத் தியாகப் பாதையை அவர்கள் மகிழ்வோடுதான் தேர்ந்தெடுத்தார்கள். தாம் செய்யும் தியாகம் எமது இனத்திற்கு மகிழ்வினைக் கொடுக்குமென்ற நினைப்பே அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. அவர்கள் மௌனமாய் வாழ்ந்துகொண்டிருந்தாலும், அவர்களின் தியாகம் எமக்கு நிரந்தரமான மகிழ்வைக்கொடுக்கும். இதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதி அன்று அருமையாகப் பாடிவைத்தார்.

“இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத்து இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தென அழித்திட்டாலும்
சுதந்திரத் தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!

சுதந்திரத் தேவியை மட்டுமல்ல எம் நண்பர்களே உம்மையும் என்றும் மறக்கமுடியாது.

- பேபி

பலம் தந்தெழுந்தவர்கள்

ஆண்டுகளை விட்டுத் துரத்தியவாறு நினைவுநாட்கள் முன்னே நிற்கின்றன.

சாவு பிரித்துவிட்ட சரித்திரம் காலத்தின் பக்கங்கள் தோறும் நிரம்பிக் கிடக்கின்றது.

அவை வாழ்வுக்கு முழு அர்த்தம் கொடுத்த சரித்திரங்கள். நாதன் என்ற வரலாறும், கஜன் என்ற வரலாறும் புகலிடத் தமிழர் வரலாற்றில் மூச்சுநிரப்பும் அசைவைக் காட்டுவன.

★ ★ ★

எதிரியின் பூதாகாரமான பலத்தின் முன்னே குருவிகள் போன்று அமர்ந்திருந்தோம். வெட்டுண்டோம். கட்டுண்டோம்.

ஆனாலும் போர்வாளை இறுகப்பற்றியிருந்தோம். இயங்க வழியில்லை என்றபோதும் இயங்குவோம் என்ற நம்பிக்கையுடன் எமது போர்வாள் எமக்குள் கூர் தீட்டப்பட்டு வந்தது.

அந்தப் பூதம் அசைந்து, கால்விரித்து, அலங்கோலமாக எமது கூட்டின் உயிர்நாடியில் கைவைத்த போது எமது போர்வாள் சுழன்றடித்தது.

ஓயாதஅலைகள் என்ற மந்திரச் சொற்களின் வித்தை மேகத்தை உலுக்கியது. இடிமுழக்கத்துடன் பொழிந்தது. உப்பளவெளியில் ஒரு பூகம்பமே நடந்தது. புதுவிதியின் வரவை உலகுக்கு ஓயாதஅலைகள் வழிகாட்டி, எடுத்துரைத்தது.

இந்த குருவிகளின் மந்திரச் சொற்களும், போர்வாளும் காலத்தின் பக்கங்கள் எங்கும் பதிந்து கிடக்கும் மீளப்பிறக்கும் மனிதர்களின் சாவுச் சரித்திரத்தால் அசைந்தவை.

பலம் இன்று எமக்குள் பெருமிதத்தைத் தருகின்றது. நாங்கள் பலம் உள்ளவர்கள் என உணரப்படுகின்றோம். வென்றுவிடுவோம் என்ற பெருநம்பிக்கை கூட, 'பெரும் பலத்தை' தமிழர்களின் மூச்சுக்குக் கொடுத்துவிட்டது. எமது புலன்கள் பலம் பற்றிய உணர்வை உள்வாங்குகின்றன.

இந்தப் பலம் என்ற விந்தையை எமக்குள் விதைத்தவர் யார்?
தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன்.
தலைவர் கட்டி எழுப்பிய விடுதலை இயக்கம்.
அந்த விடுதலைப் போர் உருவாக்கிய பண்பாடு.
போராடும் மக்கள்.
மாவீரர்கள்.

பலத்தை பிரசவிப்பதற்கான உழைப்பில் ஒரு தலைமுறையே ஈடுபட்டுள்ளது. தமது சாவால் அதற்கு உயிர் கொடுத்தவர்கள் - தமது உழைப்பால் அதற்கு வடிவம் கொடுத்தவர்கள் - தனது தலைமையால் அதற்கு முகம் கொடுத்தவர் என ஒரு தலைமுறை உழைப்பே அதற்குள் கட்டுண்டு கிடக்கின்றது. கூனல் நிமிர்த்தி - இயங்கப் பழக்கிய 'தேசிய உழைப்பு' இது.

இந்த உழைப்புக்கு புகலிட மண்ணில் நாதனும், கஜனும் கனவும் - நனவும் கொடுத்தவர்கள்! 1995ல் சிங்களத்தின் 'ரிவிரச' இருளையும் - மிரட்சியையும் கொடுத்த போது அவர்கள் தலைவனின் வியூகத்தில் பங்கேற்றார்கள். இருளகற்றும் பாதை அமைக்க தலைவர் ஆதாரம் கேட்டார். புகலிடங்களின் மாயைச் சுழியில் சிக்குண்டு எம்மக்கள் சிதையுண்டு அழிவுறுவார் என்று எதிரி கணக்குப் போட்டபோது, கட்டுடைத்துப் பாயும் வெள்ளம் செய்யும் வீச்சை கனவு கண்ட தோழர்கள் அவர்கள்! 1996ல் ஓயாதஅலைகள் 1 தன் கரையுடைத்தபோது அங்கு நம்பிக்கை என்ற பலத்தை சுமந்து நாதனும், கஜனும் புகலிடங்கள் எங்கும் சுழன்று ஆற்றிய பணியிருந்தது. இன்று ஓயாதஅலைகள் 4 முரசறையும்போது அந்த நண்பர்களின் நான்காவது ஆண்டு நினைவு வணக்கம் கண்களை பனிக்க வைக்கின்றது. அந்த நண்பர்களின் சாவுக்கு பிந்திய வாழ்வு எவ்வளவு பலத்தை எமக்கு ஆசீர்வதித்தது என்று கணிப்பிட்டுக் கொள்வதற்கு ஓயாதஅலைகளின் பரிணாமம் ஒன்றே போதும். அவர்கள் உயிர் கொடுத்து வளர்த்தெடுத்த புகலிடத் தமிழர்களின் உணர்வுகள், இன்றைய பரிணாமத்தின் சூட்சுமத்துள் சுழல்கின்றன.

நாதனும் கஜனும் எமது தேசம் சுமக்கின்ற இரு ஒளிக்கீற்றுக்கள். புகலிடங்களில் வாழும் எம்மக்களுக்கு விழியாகி வழிகாட்டும் பணியை ஏற்றுக் கொண்டவர்கள். நாங்கள் சுமக்கும் போர்வாளின் கூர்மையில் நாதனும் - கஜனும் உயிர்ப்போடு வாழ்கின்றனர்.

- நடராஜா

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் சிவசோதிநாதன் பிரகலன், செல்வி வாசுகி கெந்தேஸ்வரன், செல்வன் சிவநாதன் உமாஷங்கர் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

உங்கள் கைவண்ணம்

வேந்துஷா வைகுந்தவாசன்

வயது: 07 (24.07.1993)
இடம்: பொபினி, பிரான்ஸ்.
பாடசாலை: ஒபவில்லியே, தமிழ்ச்சோலை
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்
உறுப்பினர் எண்: F112

ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்களில் நவராத்திரி விழா எனக்கு மிகவும் விருப்பமானதும் இவ்விழாவினையும் சூரன் போரினையும் நான் தமிழீழம் சென்ற போது பார்த்து மகிழ்ந்தேன். நவராத்திரி விழாவின் கதையை சரஸ்வதி சபதம் படம் பார்த்து இரசிப்பேன்.

யோ.அரவிந்தன்

வயது: 09
இடம்: சுவிஸ்.
பொழுதுபோக்கு: படம் வரைதல், பந்து அடித்தல்.
உறுப்பினர் எண்: S102

கவிதை முற்றம்

கடலின் மேலே நிலவு
கண்ணுக்கு அழகாய்க் குலவும்!
உடலின் மேலே குளிர்ச்சி
உதவும் நிலவின் வளர்ச்சி!

வில்லைப் போலப் பிறையும்
விரைந்து வளர்ந்து நிறையும்
நல்ல முழுமை பெறுமே
நாம் கண்டிடவே வருமே!

வெள்ளைப் புறாப்போல் கடல்மேல்
வீசும் குளுமை உடல்மேல்!
துள்ளி வருமே அலைமேல்
தோன்றும் தூர மலைமேல்!

நட்சத்திரமாங் கூட்டம்
நல்ல பூவின் தோட்டம்!
மெச்சும் அழகு நிலாவே
வெளியே வருமாம் உலாவே!

நிலவில் கூட இறங்கி
நின்றார் மனிதர் ஒருநாள்
பலரும் கேள்விப்பட்டு
பாராட்டியதே திருநாள்!

நிலவில் மனிதர்

கதை முற்றம்

திகில் நிறைந்த கடற் பயணம் 12

றொபின்சன் குருசோ

இவ்வாறாக சில வருடங்கள் கரைந்தோடின கடற்கரையில் அடிக்கடி உலாவி ஏதாவது கப்பல்கள் கடலில் தென்படுகின்றனவா என அவதானிப்பது எனது அன்றாட வாழ்வின் ஒரு நிகழ்வாகி இருந்தது. இவ்வாறாக ஒரு நாள் கடற்கரையில் நான் உலாவிக் கொண்டிருக்கும்போது, திடீரென எனது கவனம் தரைமீது சென்றது. நான் அருகே சென்றேன். மிகவும் அவதானமாக உற்று நோக்கினேன் எனது உடல் சற்று நேரம் அப்படியே உறைந்துபோனது. ஆம் தரையிலே காணப்பட்டது மனிதனின் கால் தடங்கள். செய்வதறியாது திகைத்துப்போனேன். இது யாராக இருக்கக்கூடும், பயம் என்னைத் தொற்றிக் கொண்டது. சுற்றும்முற்றும் பார்த்தேன், யாரையும் காணவில்லை. எனது செவிகளை கூர்மையாக்கி ஏதாவது சத்தங்கள் வருகின்றனவா எனப்பார்த்தேன். எதுவும் இல்லை. ஓடோடிச்சென்று பற்றையின் பின்னால் ஒளித்துக்கொண்டு சிறிது நேரம் காவல் இருந்தேன். சில வேளைகளில் இக் கால் தடங்கள் மனிதரை வேட்டையாடி புசிக்கும் காட்டு மனிதரின் கால் தடங்களாக இருக்கக்கூடுமோ? என்னும் பல வகையான எண்ணங்களும் கற்பனைகளும் தோன்றி மறைந்தன. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். எவரையும் காணவில்லை. அந்த மயான அமைதி எனக்கு மேலும் பயத்தைத் தூண்டியது. நான் எதற்காக வெளியே புறப்பட்டேன் என்பதை மறந்து உடனே வீடு திரும்பினேன். யாரோ ஒருவரோ, ஒரு சிலரோ இத்தீவில் வாழ்கிறார்கள் என்பதை எனது மனம் உறுதிசெய்து கொண்டது. சில வேளைகளில் அந்த மனிதனுக்கு என்னைத் தெரிந்திருக்கலாம். தற்போதுகூட நான் மறைந்திருக்கும்போது அந்த மனிதனும் என்னை மறைந்திருந்து பார்க்கிறானோ? சில வேளைகளில் என்னை கொன்று புசிப்பதற்கான சரியான தருணத்திற்காக என்பின் காத்து நிற்கிறானோ? என்று பல்லாயிரம் கேள்விகள் என்னுள்ளே தோன்றி மறைந்தன. ஒரு வாறாக வீடுவந்து சேர்ந்தேன். அன்று இரவு எனக்குத் தூக்கம் வரவேயில்லை. மறுநாள் அதிகாலையே எழுந்து எனது துப்பாக்கிகள் அனைத்தையும் சரிபார்த்து தயார் நிலையில் வைத்தேன். மேலும் சில மரங்களை வெட்டி எனது வேலியை பலப்படுத்தினேன். இலைகுழைகளால் எனது வீட்டை உருமறைப்புச் செய்து கொண்டேன். தற்போது எவருமே என்னைக் கண்டுகொள்ள முடியாது என்பதை உறுதிசெய்து கொண்டேன். நான் பதினைந்து வருடங்கள் இத்தீவில் வாழ்ந்துவிட்டேன். இதைப்போல் ஒரு நாள்கூட நான் பயந்தது கிடையாது. கிட்டத்தட்ட மூன்று நாட்களாக நான் குகையைவிட்டு வெளியே வரவில்லை.

மனிதனின் கால்தடம்

இறுதியில் பயம் ஓரளவு தணியவே மெதுவாகச் சென்று ஆடுகளில் பால் பெற்று வீடு திரும்பினேன். நான் மிருகங்கள் எதனையும் வேட்டையாட விரும்பவில்லை. காரணம் எனது துப்பாக்கியின் சத்தம் சில வேளைகளில் என்னை காட்டிக்கொடுத்துவிடுமோ என்பதால் நான் பார்த்த மனித தடங்கள் எப்போதுமே என் கண்முன் நின்று கொண்டிருந்தது. எனினும், எந்தவித சத்தங்களோ, வேறு தடயங்களோ எனக்கு தென்படாததால் எனது பயம் பெருமளவு குறைந்தது.

பயணம் தொடரும்...

வினா-விடை முற்றம்

கடந்தவார விடை:

1) 7/10 பங்கு நீர்.
2. குடிக்கும் நீர் வழியாகவும், உணவுகள் வழியாகவும்.
3. தெற்கு ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் 12 அல்லது 15 செ. மீற்றர் நீளமுள்ள ஒருவகை மீன் உண்டு. இது தண்ணீருக்கு வெளியிலும் மூச்சுவிடும். இது தனது செதில், வால், சிறகுகளின் உதவியைக் கொண்டு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நடந்து செல்லும்.
4. தேனின் (Thenine), கபேயின் (Caffeine)
5. 206
6. இவை இரத்தத்துள் புகும் நோய் கிருமிகளையும், அழுக்குகளையும் அழித்துவிடுகின்றன.

வினா-விடை முற்றம்

1. நீராடுதல் ஏன் அவசியம்?
2. விரலை நீரில் நனைத்தால் புத்தகத்தின் ஏடுகளை விரைவாக புரட்டமுடிகிறது ஏன்?
3. குளிர்ந்த இரத்தமுள்ள உயிர்கள் எவை? வெப்ப இரத்தமுள்ள உயிர்கள் எவை?
4. சந்திரனைச் சுற்றி சில சமயம் வட்டமான ஒளி தெரிவது ஏன்?
5. அலுமினியப் பாத்திரங்களின் கைப்பிடிகள் ஏன் மரத்தினால் செய்யப்படுகின்றது?
6. மின்சாரக் கம்பிகளில் வேலை செய்பவர்கள் இறப்பரால் செய்த கையுறை அணிவது ஏன்?

அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.

கண்டுபிடியுங்கள்



இங்கு எத்தனை அம்புக்குறிகள் உள்ளன? முயன்றுபாருங்கள்! முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

கடந்தவார விடை:
ACB, BAC, BCA, CAB, CBA, CBA.

விளையாட்டு முற்றம்

வார்த்தைக்குள் வார்த்தைகள்

பிள்ளைகளே!

இந்த 'வார்த்தைக்குள் வார்த்தைகள்' என்ற விளையாட்டை நீங்களும் விளையாடிப் பாருங்கள். இந்த விளையாட்டில் எத்தனைபேர் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம்.

எழுதுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு பேனாவும், காகிதமும் தேவைப்படும். முதலில் ஒரு தமிழ் வார்த்தையை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு 'கடைப்பிடித்தல்' இந்த வார்த்தையிலிருந்து எழுத்துக்களை எடுத்து ஒவ்வொருவரும் வார்த்தைகளை எழுதவேண்டும். ஒரு நிமிடம் அல்லது இரண்டு நிமிட கால அவகாசம் வைத்துக்கொள்ளலாம். இதோ 'கடைப்பிடித்தல்' என்ற வார்த்தையிலிருந்து கடை, பிடி, கடி, கடித்தல், கல் எனப் பல வார்த்தைகளை எழுதமுடியும். இந்த விளையாட்டுக்கு ஒரு நடுவரை வைத்து அவர் குறிப்பிட்ட நேரம் முடிந்ததும், வார்த்தைகளைக் கண்டுபிடிப்பதை நிறுத்தும்படி சொல்லலாம். அந்தக் குறிப்பிட்ட நேரத்துக்குள் யார் அதிக வார்த்தைகளை எழுதியுள்ளாரோ அவரே வெற்றிபெற்றவராவார்.

– சுட்டி.

பறையனாலம்குளம் 21ம் கட்டை மினிமுகாம் முற்றாக அழிப்பு

(23.10.00)

வவுனியா - மன்னார் வீதியில் பறையனாலங்குளத்தில் 21ம் கட்டையில் அமைந்திருந்த சிறீலங்கா படையினரின் மினி முகாம் ஒன்று விடுதலைப் புலிகள் தாக்கி அழித்துள்ளனர், கடந்த 18ம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணியளவில் மினிமுகாம் மீதும் போராளிகளின் அணியொன்று தாக்குதலை ஆரம்பித்தது. இதே வேளை இன்னொரு அணியினர் ரோந்து வந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதலை தொடுத்தனர். மினிமுகாமை முற்றாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த போராளிகள் அங்கிருந்த ஆயுத தளவாடங்களை கைப்பற்றிய பின்னர் முகாமை முற்றாக அழித்தனர்.

இராணுவ மினிமுகாம் புலிகளின் கைகளில் முற்றுகைக்குள் வந்ததையடுத்து அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினருடனான தொலைத்தொடர்புகளை இழந்த படைத்தரப்பு, உடனடியாக அப்பகுதிக்கு மேலதிக துருப்புக்களை அனுப்பியுள்ளது. இதே வேளை, இராணுவத்திற்கு உதவியாக வவுனியா, பம்பைமடு, பத்தினியார் மகிழங்குளம் போன்ற இராணுவ நிலைகளில் இம் மினி முகாமைச் சுற்றியுள்ள பகுதிகள் மீது கடுமையான எறிகணைத் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன. எனினும் அத் தாக்குதல்களை முறியடித்த போராளிகள் முகாமைத் தமது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். இத் தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டதுடன் ஏராளமான படையினர் காயங்களுடன் அருகிலுள்ள முகாம்களுக்கு தப்பியோடினர்.

விடுதலைப் புலிகளால் ஆறு ரி-56-2 ரக துப்பாக்கிகள், ஒரு ரி-56 பட்மொடல் துப்பாக்கி, 4000 நடுத்தர ரவைகள், 650 பி.கே ரவைகள், 36 எம்- 4 ரக குண்டுகள், மற்றும் ஒன்பது ஏ.கே ரவைக்கூடுகள், மூன்று ஏ.கே ரவைக்கூடு தாங்கிகள் என்பன உட்பட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ் வெற்றிகரமான தாக்குதலில் லெப். மாரீசன் (இம்மனுவேல் வின்சன் - மன்னார்), லெப். பிரியவதனன் (சிவலோகநாதன் ஜெயகாந்தன் - திருமலை), 2ம் லெப். சங்கீதன் (இராசரட்ணம் சுதாகரன் - திருமலை) ஆகிய போராளிகள் உட்பட நான்கு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

யாழ். குடா மீட்பு ஓயாத அலைகள்-4ல் வீரச்சாவைத் தழுவிக்கொண்டோர்

(23.10.00)

சிறீலங்காப் படையினர் மீதான தாக்குதல்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் கிடைக்கப் பெற்ற பெயர் விபரங்கள்.

07.10.2000 அன்று வவுனியா பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது 2ம் லெப். ரவி (கந்தசாமி ரவிச்சந்திரன் - அனுராதபுரம்) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

10.10.2000 அன்று வண்ணாத்திப்பாலம் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலின் போது வீரவேங்கை சகாயன் (முனியாண்டி தவராஜா - மன்னார்) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

13.10.2000 அன்று வவுனியா செட்டிகுளம் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது வீரவேங்கை மெய்யப்பன் (ஏகாம்பரநாதன் செந்தில்நாதன் - யாழ்.), வீரவேங்கை அரித்தேவன் (செல்லத்துரை ஜெயராதா - யாழ்.) ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

15.10.2000 ஞாயிறன்று மட்டுவில் பகுதியில் இராணுவத்துடனான மோதலின் போது சிறப்பு எல்லைப்படையைச் சேர்ந்த அமலநேசன் (சிறில் அமலநேசன் - இரணைதீவு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

16.10.2000 திங்களன்று மணலாற்றுப் பகுதியில் இராணுவத்துடனான எதிர்பாராத மோதலின்போது கப்டன் ஜெயபாஸ்கரன் (வெள்ளைச்சாமி விஜயசங்கர் - மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

17.10.2000 அன்று நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்ற இராணுவத்துடனான மோதலில் எல்லைப்படையைச் சேர்ந்த ராசேந்திரம் (பொன்னையா ராசேந்திரம் - விசுவமடு) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

18.10.2000 அன்று யாழ். மட்டுவில் பகுதியில் இராணுவத்துடனான மோதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் இராணுவத்தினரிடம் அகப்பட்டுகொள்ளக் கூடாதெனக் கருதி தனக்குத் தானே குண்டை வெடிக்க வைத்து லெப். எழுச்சிக்கதிர் (ஏகாம்பரம் தட்சணாமூர்த்தி - மன்னார்) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்

பாகம் - 17

களமுனையில் இருந்து

கடலால் சூழப்பட்டுள்ள பகுதியில் சுற்றிலும் மண்மூட்டைகள் அடுக்கப்பட்டு காணப்பட்டது. இரு பகுதிகளாகவுள்ள உல்லாச விடுதிகளுக்கும் முன்னால் பட்டிப்பூக்கள் காணப்படுகின்றன. எருக்கலையை பெரிய மரமாக வளர்த்துள்ளனர். அழகுக்காக எருக்கலையை வளர்ப்பதை நான் இங்கேதான் முதன் முதல் காண்கின்றேன். பொதுவாகச் சுடலைகளிலேயே காணப்படும் எருக்கலைக்கு வந்த வாழ்வு இப்படியாக இருக்கின்றது.

கடற்கரையோரம் பீப்பாய்களில் மண்ணடைத்து எல்லைகளாக அடுக்கப்பட்டுள்ளது. சீமெந்தினால் அமைக்கப்பட்ட பலமான பதுங்குகுழிகளும் உண்டு. ஆனால், அது தண்ணீரால் நிறை-ந்து காணப்படுகின்றது. பலகையால் செய்யப்பட்ட மாடிப்படிகளில் ஏறிச் சென்றோம். சற்று வெளியே நிற்பதற்காக, காற்று வாங்குவதற்கென்றே [ஓய்வுக்காக] சிறு பகுதியுண்டு. அதில் கதிரைகள் அழகாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து கடலுக்கு இறங்கிச் செல்வதற்கு கம்பிகளால் செய்யப்பட்ட படிகளும் உண்டு. மாடிகளில் உள்ள அறைகளில் நிலைக்கண்ணாடிகள், ஆடம்பரமாகச் செய்யப்பட்ட கதிரைகள், பிரம்பின் நடுவே கண்ணாடி வைத்த ரீப்போக்கள், குசன் கதிரைகள் மற்றும் அலமாரிகள் என்பன காணப்பட்டன.

படுக்கைக்கு மெத்தைகள், மின்விசிறிகள், நுளம்பு வலைகள், அழகுசாதனப் பொருட்கள், குளிர்சாதனப்பெட்டிகள் அவற்றில் இறைச்சி, மீன், மரக்கறி வகைகள், நவீன மலசல கூடங்கள் என்று ஆடம்பரத்திற்கு என்னென்ன தேவையோ அவ்வளவும் காணப்பட்டன.

இந்த முகாமில் உள்ள இராணுவக் கட்டமைப்பு எவ்வாறு உள்ளதென்பதைக் காட்டும் வரைபடம் ஒன்று இருந்தது. 54 வது படைப்பிரிவின் 6வது பிரிகேட், 10வது கஜபா, சிங்கறெஜிமென்ற் மேலும் பல பிரிவுகள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன.

கடலுக்கு நடுவே பகலோ இரவோ அருமையான காற்று இயற்கையாகவே கிடைக்கும். இந்த இடத்தில் குளிர்மை போதாதென்று குளிரூட்டுவதற்கென்று குளிரூட்டி வேறு. சமையலறை, களஞ்சியம் என்று போய்ப் பார்த்தபோது மூடை மூடையாக பொருட்கள் காணப்பட்டன. பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் அங்கு காணப்பட்டன.

இங்கு அவதானித்த விடயங்களை குறிப்பாக கொடியேற்ற வைபவத்தை செய்தியாகவும் கட்டுரையாகவும் தருவதற்கு விரைந்த பின் மறுநாள் [24.04.00] மீண்டும் வந்து மிகுதியை பார்வையிட்டோம்.

உயரதிகாரிகளின் பாவனைக்கென மதுபான வகைகள், சோடாக்கள் வழங்கப்பட்டிருந்ததைக் கரணக்கூடியதாக இருந்தது. கடலுக்குள் வரிசையாக மரங்கள் நடப்பட்டு தேடொலி [போக்கஸ்], மற்றும் தடிகளால் ஆன குத்தீட்டிகள் நடப்பட்டு இன்னும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. செயற்கையாகப் பிளாஸ்ரிக்கால் செய்யப்பட்ட மரம் இலங்கை போன்று எமக்குத் தோற்றமளித்தது. அடுத்தநிலை அதிகாரிகளுக்கான கட்டடத் தொகுதிகள், இவர்களுக்கான ஏற்பாடுகள் போன்றவற்றை அவதானித்தோம். தொலைத்தொடர்புக் கோபுரத்துடன் அதற்குரிய கருவிகள், மின் பிறப்பாக்கிகள் என்பன காணப்பட்டன. இவை வெடிக்க வைக்கக்கூடியதாக வெடிபொருட்களுடன் பொருத்தப்பட்டு இருந்தது, அவை விடுதலைப் புலிகளால் துண்டிக்கப்பட்டிருந்தன. அத்துடன் வெடித்துச் சிதறிய ஆயுதக் களஞ்சியத்தையும் பார்வையிட்டோம்.

அடுத்து இயக்கச்சிக்கு மீண்டும் பயணமானோம். போகும் வழியிலேயே ஆனையிறவு முகாமுக்குள்ளேயே தபால் நிலையமும் இருந்தது. சற்றுத் தள்ளி எரிபொருள் நிலையமும் இருந்தது. இதுவும் தீக்கிரையாகி இருந்தது.

நீளத்திற்கும் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டுக் கொண்டே இயக்கச்சிச் சந்தியை நெருங்கியதும், ஸ்ரூடியோவொன்று அமைக்கப்பட்டிருந்ததை காணமுடிந்தது. இராணுவத்திற்கென்றே அமைக்கப்பட்டிருந்த இந்த ஸ்ரூடியோ நகரத்திலிருந்தால் எப்படியிருக்குமோ அதுபோன்று சகல ஏற்பாடுகளுடனும் இருந்தது. அதற்கு அடுத்து எதிரியின் தையல் கடையும் இருந்தது. சந்தியில் பாடசாலை இருந்த இடத்தில் தபாலகம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இராணுவத் தளபதி சிறிலால் வீரசூரியா இப்பகுதிக்கு விஜயம் செய்ததை நினைவு கூருமுகமாக திறக்கப்பட்டிருந்த இத் தபால் நிலையத்தைப் பார்த்துவிட்டு சிற்றுண்டிச்சாலை இருந்ததையும் அவதானித்தோம். வட்டக் கொட்டில் போன்ற அமைப்புகளுடன் கொத்துறொட்டி போன்றவற்றை வழங்கக் கூடியதாக இருந்தது. பொதுமக்கள் தான் இல்லையே தவிர எல்லாமே சிறிய நகர் போலத் தான் இருந்தது.

சந்தியில் ஏற்கனவே குறிப்பிட்ட ஆனையிறவுத் தாக்குதல் நினைவு மண்டபத்தை போன்ற அமைப்பை பார்க்கச் சென்றோம். அது சிங்கள பாரம்பரிய முறையிலான ஒரு வணக்கத்தலம். வெளியே சந்திர வட்டக்கல் போன்ற அமைப்பும், வாசலில் இரு நாகங்கள் போன்ற அமைப்பும் உள்ளே விகாரையுடன் இந்துத் தெய்வங்களும் இருந்தன. அதில் பிள்ளையாரிடம் படம் கடைசியாக இருந்தது. சரஸ்வதி, முருகன், அம்மன் போன்ற இந்துமத தெய்வங்களுடன் மணியொன்றும் [குட்டிமணி] இருந்தது. கீழே மூன்று வைரவ சூலங்கள் இருந்தன. இந்த வைரவ சூலத்தில் நேர்த்திக்கான துண்டுகளில் காசு முடித்து ஏராளமாக கட்டப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

[தொடரும்]

பெண்கள் நலன் காக்கும் 'வந்தனா, வைஷ்ணவி'

பொதுவாகவே இளவயதென்றால் ஆண்பிள்ளைகளோ, அல்லது பெண்பிள்ளைகளோ தாம் விரும்பியபடி நினைத்தவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்து, அனுபவித்து உல்லாசமாக வாழவே விரும்புவர். ஆனால், 'பான்யன்' என்ற ஆதரவற்ற பெண்களிற்கான இல்லம் ஒன்றை உருவாக்கி, அதை வெற்றியுடன் நடாத்திவரும் வந்தனாவும், வைஷ்ணவியும் சற்று வித்தியாசமான பெண்கள். ஆம்! இன்று இருபது வயது கூட நிரம்பாத இந்த இளம் யுவதிகள் எத்தனையோ பெண்களின் இருண்ட வாழ்க்கைக்கு வெளிச்சம் கொடுத்தவர்கள் என்றால் அதை நம்புவது சற்றுக்கடினம் தான். ஆனாலும் அவர்களின் சேவையின் பலனாய் இன்று நல்லபடி வாழும் பெண்களே இதற்கு ஏராளமான சாட்சியரக உள்ளார்கள். எப்படி இந்த ஆதரவற்ற பெண்களிற்கான இல்லத்தை தொடங்கும் எண்ணம் உங்களிற்கு வந்ததெ-ன்று இவர்களைக் கேட்டால்

அதற்கு அவர்கள் கூறும் பதில் மிகவும் மதிப்புக்குரியதாக உள்ளது. அதாவது, எம்மைச் சூழவுள்ள இச் சமூகத்தில் பெண்கள் "மற்றவர்களின் தேவைகளை நல்லபடி கவனிக்கப்பட வேண்டியவளாக மட்டும்" பார்க்கப்படுகிறார்களே ஒழிய, அவர்களிற்காக மற்றோர் உழைப்பது குறைவு. இதனால் இப்பெண்கள் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது மனநிலை பாதிப்புற்றாலோ அவர்களை பெரும்பாலான உறவினர்கள் கவனிக்காது கைவிட்டு விடுகிறார்கள். இதனால்தான் எமக்கு இப்பெண்களை நிச்சயம் காப்பாற்ற ஏதேனும் வழிதேட வேண்டுமென்ற கட்டாயம் பிறந்தது. இந்தக் கட்டாயத்தால் இன்று பிறந்தது தான் இந்த 'பான்யன்' என்னும் ஆதரவற்ற பெண்களிற்கான இல்லம் ஆகும். "தற்போது இதில் எண்பது பெண்கள் சிகி-ச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன் சிகிச்சை பெற்று உடல், மனநிலை தேறி இதுவரை 210 ற்கும் மேலானவர்கள் தம் சொந்த உறவுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். இதிலும் சிலர் நோய் குணமாகியும், போக்கிடமின்றி எம்மோடே இருக்கவிரும்பின் அவர்களிற்குச் சொந்தமாக் சிறு கைத்தொழில்களைத் தொடங்க உதவியும் புரிகிறோம். இதனால் பலர் இன்று தம் சொந்த உழை-ப்பில் மகிழ்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பணம் எவ்வாறு கிடைக்கிறதென்றால் எல்லாமே நன்கொடை மூலம் தான்" என்கிறார்கள் இவர்கள். தற்போது தம்மைப்போலவே சேவை உள்ளம்கொண்ட தொண்டர்கள் இன்னும் பலரையும் இவ் இல்லத்தில் இணைத்தும் வருகிறார்கள். இப்போது 70ற்கும் மேற்பட்ட ஊழியர்கள் முழுநேரமாக இங்கு தொண்டாற்றுகிறார்கள். இந்த மனித நேயம் மிக்க யுவதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த 'பான்யன்' இல்லம் இருப்பதால் வீதிகளிலும், தேடுவாரற்ற இடங்களிலும் அல்லல்பட்ட பல பெண்கள் மகிழ்வுடன் இன்று வாழ்கிறார்களே, இதுதான் தம் வாழ்வின் மிகப்பெரிய இலட்சியம் என்னும் இப்பெண்கள் போற்றுதற்குரியவர்களே தான் என்றால் அது மிகையல்ல.

ஆழமில்லாக் காதலால் அநியாயமாகப் பலியான பெண்

உள்ளமும் உள்ளமும் நெருங்கி அன்பு செலுத்தினால்தான் அங்கு உண்மையான காதல் தோன்றும். அதைவிடுத்து உடலின் சுகத்திற்காக மட்டுமே காதல் கொண்டால், அல்லது காதலிக்கப்பட்டால் அதன் முடிவு எத்தகைய கொடூரமாக இருக்கும் என்பதற்கு கீழே சொல்லப்படும் மீனாட்சி என்ற பெண்ணின் கதை உதாரணமாகும். அதாவது மீனாட்சி என்னும் ஒரு அப்பாவிப்பெண் இந்தியாவிலுள்ள பெருமுளை என்னும் சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர். ஒரு நாள் இந்த அப்பாவிப் பெண் அலங்கோலமாக, அங்குள்ள காட்டுப்புறப்பகுதியில் இறந்து கிடந்துள்ளார். இதைக் கண்ட கேட்ட பலரும் ஒவ்வொரு கதை பேசினர். ஆனால் அப்பெண் இறந்த 20ம் நாளில் காவல்துறை, கலியன் என்ற அப்பெண்ணின் காதலனைக் கைது செய்த போதுதான் அந்த திடுக்கிடும் உண்மை தெரியவந்தது. அதாவது அப்பெண் இந்த கலியன் என்பவனை உண்மையாக நேசித்துள்ளாள். ஒருமுறை இரவு படம் பார்ப்பதற்காக இந்தக் கலியனுடன் சென்று விட்டு வீட்டிற்கு திரும்பி வந்த போது தான் இந்தக் கொடூரம் நடந்துள்ளது. அதாவது கலியன் தன்னோடு உறவு கொள்ளும்படி அப்பெண்ணை வற்புறுத்தியுள்ளான். முடியாதென்றவளை பலவந்தப்படுத்தி உறவு கொண்டுள்ளான். ஆனாலும் அவனுக்கு அந்த ஒருமுறை கொண்ட உறவு போதவில்லை. மீண்டும் பலவந்தப்படுத்தத் தொடங்கவே அப்பெண் இவனுடன் கொண்ட போராட்டத்தில் இறந்துவிட்டாள். தன் காதலி இறந்தும் கூட காம வெறி தணியாத கலியன் மீண்டும் இறந்த அப்பெண்ணை கற்பழித்துவிட்டு அங்குள்ள புதரில் வீசிவிட்டுச் சென்றுவிட்டான். இந்த உண்மையை தற்போது இவன் ஒப்புக்கொண்டுவிட்டான். இதற்காகத் தண்டனையும் அனுபவிக்கிறான். ஆனாலும், அந்த அப்பாவிப் பெண் அன்பு செலுத்தியவனாலே அநியாயமாகக் கொல்லப்பட்டது, அங்குள்ள யாரராலுமே தாங்கிக் கொள்ளமுடியவில்லை. ஆம்! இந்த மீனாட்சியின் வாழ்க்கை, அவசர புத்தியுடன் ஒருவரை அறியாமல் தீர காதலிக்கும் பல பெண்களிற்கும் பெரியதொரு பாடமாக அமைந்துவிட்டது.

அப்பாவின் அரசியலைத் தொடரும் மகள்!

அமெரிக்காவை இதுவரை ஆட்டிப் படைத்த பல சர்ச்சைகளோடு இப்போது புதிதாகச் சேர்ந்திருப்பது கிளிண்டனின் மகள் செல்ஸியா அரசியலில் நுழையப் போகிறாரா என்பதுதான். தற்போது அமெரிக்கா எங்

கும் பரவிவரும் இச்செய்தி அங்குள்ள பல அரசியல்வாதிகளையும் தலையைப் பிய்த்துக்கொள்ள வைத்துள்ளதாம். அதாவது அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டனின் ஆட்சிக்காலம் அடுத்தஆண்டு ஜனவரி மாதத்தோடு முடியப்போகிறது. இந்த நிலையில் தம் மகளை அவர் அரசியலில் நுழைக்க முயல்கிறார் என்கின்றனர், அங்கு சில அரசியல் பிரமுகர்கள். அதாவது தாம் தற்போது போகும் நாடெல்லாம் தம் மகளையும் உடன் அழைத்துச் செல்கிறாராம் அமெரிக்க அதிபர். இதைவிட அங்குவரும் பிற அரசியல் தலைவர்கள் வருகையின்போதும் அவர்களை வரவேற்பதில் தம்மகளையும் ஈடுபடவைக்கிறாராம் கிளிண்டன். 'இதற்குக் காரணம் வேறென்ன?' என்பது அவர்கள் கேள்வி. ஆனால், வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் இதை மறுக்கிறார். அதாவது, செல்ஸியாவிற்குத் தான் மருத்துவராக வரவேண்டுமென்பதே ஆசை. அவர் அரசியலிற்குள் நுழையமாட்டார் என்கிறார். ஆனாலும், அடுத்த ஆண்டு ''ஒக்ஸ்போர்ட்'' பல்கலைக்கழகத்தில் செல்ஸியா அரசியல் விஞ்ஞானம், சரித்திரம் போன்ற பாடங்களைக் கற்க உள்ளார் என்பதையும் அங்கு யாரும் மறுக்கவில்லையாம். காலந்தான் இதற்குப் பதில் சொல்லும் என்பதுதான் இப்போதைய முடிவு அங்கு.

பெண்களுக்கு ஏற்படும் தோள் வலியைப் போக்க இதோ சில உடற்பயிற்சிகள்



கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு இப்பெண்கள் பகுதியில் இடம்பெற்ற ''பெண்களிற்கான தோள்வலியை போக்கும் உடற் பயிற்சிகளின்'' மிகுதி இதோ:-

4. உடலை நன்றாக நிமிர்த்திய நிலையில் கால்கள் இரண்டையும் சற்று அகல வைத்துக்கொண்டு படத்தில் காட்டியபடி கைகள் இரண்டையும் மடித்தவண்ணம் விரல்களை மார்புப்பகுதியை நோக்கி மடக்கிப் பிடித்திருக்கவேண்டும். இவ்வாறு நிற்கும் போது உடலை நன்கு விறைப்பாக வைத்திருக்கவேண்டும் என்பதும் இங்கு முக்கியம். இதன்பின்பு மூடிய விரல்களை அதே நிலையிலிருந்து விலக்கி, உடலின் இறுக்கத்தை தளர்த்தாது கைகள் இரண்டையும் மெல்ல மெல்ல கீழ் நோக்கி [4a படத்தைப் பார்க்கவும்] கொண்டு வரவேண்டும். இறுதியாக தற்போது கீழ்நோக்கியுள்ள கைகளை மீண்டும் தோள்பட்டையை நோக்கி மேலே உயர்த்தி [4b படத்தைப் போல] வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்தால் தோளுக்கும், நெஞ்சுக்கும் வலிமை உண்டாகும். தேவையில்லாத வலிகளை தவிர்க்கலாம்.

2001ம் ஆண்டு கிருஷ்ணா பஞ்சாங்கக் கலண்டர்
(ஐரோப்பிய நேரத்திற்கு ஜோதிடர். யா. பத்மநாதன் அவர்களால் கணிக்கப்பெற்றது)
கலண்டர்கள் தேவையான வர்த்தகர்கள் காலக்கிரமத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.
கிருஷ்ணா அச்சகம்
Imprimerie KRISHNA 73, Rue Doudeauville, 75018 Paris. Tél. 01 42 51 29 92 Fax. 01 42 51 35 25
M°: Marcadet Poissonniers / Château Rouge

பட்டுப்புடவைகள்,
ஆண், பெண்களிற்கான சகல புடவை வகைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், பதப்படுத்திய மீன் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

சிகரம்

மேலும் விபரங்களிற்கு

Schoenegg Str-15
8004.Z.H

எங்களிற்கு வேறு கிளை ஸ்தாபனங்கள் கிடையாது.

Singapore Conduct N°:
0065 - 96171175
Tel&Fax:
0065 7430644

Sikaram

(இலங்கை) கொழும்பு வவுனியா — திருகோணமலை — மட்டக்களப்பு — மன்னார் — கனடா — சகல ஐரோப்பிய நாடுகள் — சிங்கப்பூர் தாய்லாந்து — ஹொங்கொங் — அவுஸ்திரேலியா — இந்தியாவின் அனைத்துப் பாகங்களுக்கும் 1 மணித்தியாலத்தில் கொடுப்பதற்கான புதிய சேவை ஒன்று எமது பணமாற்றுச் சேவையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் விபரங்களிற்கு:

T.P:	01 2912862
	01 2913951
Rest:	01 2422718
H.P:	079-3008759
	079-6225077
Fax:	01 2913534

உரிமையாளர்- சேகர்

Pub. Sw

எமது வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்கள்

VIDEO WORLD

மலிவு விற்பனை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பிரமிட் ஒரிஜினல் CD க்கள்

0.99 P இல் இருந்து

இன்னும் பல...

430 Alexandra Ave
Rayners Lane, Harrow Haz 9 SE.
Tel: 0208 8680083 / Fax: 0208 8680083

சிறீலங்காவின் புதிய அரசால் கடும் போர் நடவடிக்கைகளே விரியப்போகின்றன

(மட்டக்களப்பிலிருந்து எஸ். ஜெயானந்தமூர்த்தி)

சிறீலங்காவின் புதிய அரசாங்கத்தின் கீழ் வடக்கு - கிழக்கில் போர் நிறுத்தம் செய்யப்பட்டு இனப்பிரச்சினை தீர்க்கப்படுமா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. ஆனால் இது சாத்தியப்படாது என்றே நான் கூறுவேன். சிறீலங்காவின் பதினோராவது பொதுத்தேர்தல் நடந்து முடிந்து விட்டது. இதில் எந்தவொரு பேரினவாதக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாத நிலையில், தொங்கு அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் எடுத்த முயற்சியில், தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி கண்டுள்ளது. இக்கட்சிக்குப் புதிய அரசாங்கம் அமைப்பதற்கு சிறுபான்மைக் கட்சியான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் - தமிழ் கட்சியான ஈ.பி.டி.பியும் பல கோரிக்கைகளுடன் கைகொடுத்துள்ளன.

இப்புதிய பாராளுமன்றத்தின் மந்திரிசபை, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. ரட்ணசிறி விக்கிரமநாயக்க இனவாதம் கக்கும் கடும்போக்காளர். இவருக்கு தமிழர் என்றாலே ஒரு ஒவ்வாமை. பொதுத்தேர்தலின் பிரச்சார மேடைகளில் இனவாதம் கக்கிய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா பாணியில் உரையாற்றியவர். இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு போரினால் மாத்திரமே தீர்வு காணமுடியுமென்றும், நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் தேவைப்படாது என்றும் உரத்துக் கூறியவர். இனவாதப் போக்குக் கொண்ட இவரைப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் பிரதமராக ஜனாதிபதி சந்திரிகா நியமித்ததற்கும் இவரின் இத்தகையப் போக்கே காரணமாகும். இனவாதச் சக்திகளைச் சமாளித்து தேர்தலில் வெற்றி பெறும் வகையில் இவர் நியமிக்கப்பட்டு, பிரச்சார வேலைகளுக்காக நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டார். அத்துடன் இவரின் தலைமையிலுள்ள மந்திரி சபையில் அங்கம் வகிப்பவர்களும், இனவாதப் போக்குடையவர்களாக இருப்பதாலும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவுள்ள சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி என்பன புலிகளுக்கு எதிரான கொள்கையுடையதாலும், பதவிகளுக்காக அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாலும் அரசாங்கத்தின் எந்தவொரு கடும் போக்குக்கும் இவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை.

எனவே, விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்து நடாத்தவுள்ள போருக்கு மந்திரிசபையும், அரசுக்கு முண்டு கொடுக்கும் கட்சிகளும் நிச்சயம் ஆதரவு வழங்கியே தீரும். அல்லது நிபந்தனையுடனான ஒரு போர் நிறுத்தத்திற்கு அரசு முன்வரலாம். இவ்வாறான ஒரு போர் நிறுத்தத்தினை விடுதலைப் புலிகள் கடைசிவரை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எனவே வடக்குக் கிழக்கில் போர் தொடர்ந்து வெடிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. 1995ம் ஆண்டில் வெண்புறாவுடன் வலம் வந்து, தமிழ் மக்களின் பூரண ஆதரவுடன் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா, விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதாகக் கூறிக்கொண்டு காலம் கடத்தியதையும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான சதி முயற்சிகளை திரைமறைவில் மேற்கொண்டதையும் இந்தக் கட்டத்தில் நினைவு படுத்த விரும்புகின்றேன்.

இந்தவேளையில், இன்னுமொன்றையும் நான் கூறவேண்டும். கிழக்கு மாகாணத்தில் இந்த பொதுத்தேர்தலின் மூலம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் தமிழ் பிரதிநிதித்துவம் முற்றாக பறிக்கப்பட்டு தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். கடந்த பொதுத்தேர்தலில் இந்த மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு பிரதிநிதித்துவம் காக்கப்பட்டிருந்தது. அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த தேர்தலில் இக்கட்சிக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்திருந்தபோதிலும் இம்முறை அது இரண்டாகக் குறைந்துள்ளது. இதற்குச் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கை ஒரு காரணமாகவுள்ள போதிலும், சில வாக்குறுதிகளுக்காக பேரினவாதக் கட்சிகளுக்கும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற இனவாதக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதும் மற்றொரு காரணமாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் இரு உறுப்பினர்களும், பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளிலிருந்து தலா ஒரு உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர். இம்மாவட்டத்திலிருந்து தமிழர்களின் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒரு உறுப்பினர் தெரிவாகியுள்ளது, தனது போர் நடவடிக்கைக்கு மக்கள் அங்கீகாரம் கிடைத்தது போன்றதொரு நிலையைச் சிறீலங்கா அரசுக்குத் தோற்றுவித்துள்ளது. எனவே சிறீலங்கா அரசு தனக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் கிடைத்த மக்கள் ஆதரவைக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கையை வெளிநாடுகளில் நியாயப்படுத்தும் வகையில் பிரச்சாரம் செய்யும் நிலையும் தோன்றியுள்ளது. இவ்வாறானதொரு நிலை தோன்றுமாயின் அரசிற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளால் முடியாத நிலையே தோன்றும். அல்லது அவர்களின் கருத்துக்கள் செல்லாக் காசாகவே மாறும். எனவே தான் சிறீலங்காவில் அமைந்துள்ள புதிய அரசால் ஒரு போர் நிறுத்தமோ சமாதானப் பேச்சு வார்த்தையோ இடம் பெறாது. மாறாக கடுமையான போர் நடவடிக்கைகளே விரியப்போகின்றன. இதனால் பாதிக்கப்படப்போவது வழக்கம்போல் அப்பாவிப் பொதுமக்களே!

> இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு போரினால் மாத்திரமே தீர்வு காண முடியுமென்றும், நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் தேவைப்படாது என்றும் உரத்துக் கூறியவர்.

4ம் ஆண்டு நினைவு வணக்கம்

லெப்.கேணல் நாதன்
(கந்தையா பேரின்பநாதன்)

வீரச்சாவு: 26.10.96

எங்கள் வீட்டின் செல்வங்களே!
எங்கள் நாட்டின் தீபங்களே!
எங்கள் சுதந்திரக் குயில்களே...!
வீட்டை விட்டுப் பறந்தீர்—ஆனாலும்
எங்கள் வீடெல்லாம் நிறைந்தீர்
நாட்டை விட்டுப் பறந்தீர்—ஆனாலும்
எங்கள் நாடெல்லாம் நிறைந்தீர்
நாதனே! கஜனே!
காலையைத்தேடிக் கூவிய குயில்களே!
உங்கள் சிறகினை ஒடித்த
அந்த யாரோ ஏமாந்தார்...
வேற்றுருவில், இன்னும் வீச்சுடனே
எங்களோடு நீங்கள்!!

கப்டன் கஜன்
(கந்தையா கஜேந்திரன்)

- குடும்பத்தினர்

Pub.

அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்தும் சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பாரதி

சிட்டுக்குருவிபோல் விட்டு விடுதலையாகி விண்ணில் பறக்கவேண்டும். சமூகத்தில் சாதி, மத வேற்றுமைகள் களைந்தெறியப்பட்டு, ஆணுக்கு பெண் சமமாக வாழ வேண்டும் என்று பாரதி கனவு மட்டுமே கண்டான். அந்தக் கவிஞனின் கனவு நனவாகிக்கொண்டிருக்கிறது ஈழத்திலே! அவனது கனவை நனவாக்கிய பெருமை தமிழீழ தேசியத் தலைவருக்கு உண்டு.

உலகே போற்றும் அந்தக் புரட்சிக் கவிஞனின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களோ பதின்நான்கு பேர் மட்டுமே. இது ஏன் என்ற கேள்வியுடன் ஞானராஜசேகரனின் 'பாரதி'படம் அக் கவிஞனின் இளமைக்கால வாழ்க்கைக்குள் நுழைகிறது...

சூரியன் பூமியைச் சுற்றவில்லை, பூமிதான் சூரியனைச் சுற்றுகின்றது என்று கலிலியோ கூறியபோது, அது கடவுளுக்கு எதிரானது, மதக்கோட்பாடுகளையே மீறுகிறது எனவே பூமி சூரியனை சுற்றவில்லை என கலிலியோ அறிவிக்க வேண்டும் அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படுவார் என ரோம் திருச்சபை கட்டளையிட்டபோது, வேறு வழியின்றி தான் கூறிய உண்மையை இல்லையென்று பொய்யாக சொல்ல வேண்டிய நிலை கலிலியோவிற்கு ஏற்பட்டது. அப்படிச் சொன்னபடியால் தான் பின்னர் அவர் திருச்சபையால் மதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டார். ஆனால் பாரதியின் நிலை அப்படியில்லையே...



மூடத்தனமான மதக்கட்டுப்பாடுகளும், சாதி ஒடுக்குமுறைகளும் மனிதனை மனிதன் அடக்குமுறைக்கு உள்ளாக்கிக் கொண்டிருப்பதை பார்க்க முடியாமல் புதியதொரு சமூகப் பார்வையுடன் - தன்னைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் பூணூலை கழற்றி எறிந்து விட்டு சமூகப் பிரக்ஞையின் விசாலமான பார்வையுடன் வெளியேறி வருகிறார். சமூகத்தில் எல்லோருமே சமம். யாரும் யாருக்கும் கீழே இல்லை, அனைவரும் சமமானவர்களே என்ற அவனது உறுதியான நிலைப்பாடு, எங்கே தாங்கள் ஆண்டாண்டு காலமாக கட்டிக்காப்பற்றி வரும் கட்டுப்பாடுகளை தகர்த்துவிடுமோ என எண்ணும் அவனது சமூகம், அவனை தங்களிடம் இருந்து அந்நியப்படுத்தி விடுகின்றது.

ஆணுக்கு பெண் எதிலுமே சளைத்தவர்கள் அல்ல, 'மண்ணிற்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்... பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடும் பாரீர்' என்று பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராக குரல்கொடுத்து, அவற்றை உடைத்தெறிய நினைத்தால் அவனை அன்று அவன் வாழ்ந்த சமூகம் எப்படி அங்கீகரித்து அதனை ஏற்றுக்கொள்ளும்? அவனது புதிய சிந்தனைகளுக்கு அவர்கள் கூறிய காரணம் 'பாரதி ஒரு கிறுக்கன், அவனொரு முட்டாள்' என்பதுதான்.

இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு, அவர்களின் கட்டுப்பாடுகளோடும், கோட்பாடுகளோடும் ஒத்துக்கொண்டு வெறும் கவிஞனாக மட்டும் வாழ்ந்துவிட்டு போயிருந்தால், அவனது இறுதிச் சடங்கில், இவனொரு பெரும் கவிஞன் என்று கூறி ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருப்பார்கள். ஆனால் இறுதிவரை அவன் அவர்களோடு முரண்பட்டல்லவா நின்றான். சமூக மாற்றத்திற்காக மட்டுமல்ல தேசத்தின் விடுதலைக்காகவும் குரல் எழுப்பிய அந்தக் கவிஞனின் கனவுகள் அவன் வாழ்ந்த காலத்தில் அரங்கேறவே முடியவில்லை. இன்று அக் புரட்சிக் கவிஞன் இல்லை. ஆனால் அந்தக் கவிஞனை; வாழ்ந்த வாழ்வை எம்முன் அழகாக காட்சிப்படுத்தியுள்ளார் ஞானராஜசேகரன்.

வரலாற்றில் பதிவாகிப்போனவர்கள் பற்றிய கதைகளை திரைப்படமாக்குவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், அவர்களைப் பற்றிய தெளிவான தகவல்கள் பலருக்கும் தெரிந்திருக்கும். எனவே, ஒரு சில கருத்துக்களையோ அல்லது சம்பவங்களையோ திரிபுபடுத்தி விட்டால் அதனால் ஏற்படும் விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் அத் திரைப்படமும் அதனை இயக்கியவரும் முகம்கொடுத்தே ஆகவேண்டும். ஆனால் அவ்வாறானதொரு எந்த விதமான விமர்சனங்களோ, கண்டனங்களோ இல்லாது, அனைவராலும் பெரும் பாராட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளது ஞானராஜகேரன் இயக்கியுள்ள 'பாரதி' எனும் போது, அதனை பாராட்டி வரவேற்காமல் இருக்கமுடியாது.

நடிகர்களுக்காக கதையை மாற்றும் இன்றைய தென்னிந்திய திரைப்படத்துறை, வியாபார நோக்கில் மட்டும் சென்று கொண்டிருக்கையில், வணிக நோக்கமற்று, உண்மையான ஒரு கதைக்காக நடிகரைத்தேடி, மராத்திய நடிகரான ஷியாஜி ஷிண்டே என்பவரை பாரதியாக வாழ வைத்திருக்கிறார் ஞானராஜசேகரன். நடிப்பென்று சொல்லமுடியாதபடி பாரதியைப்பற்றி நாம் அறிந்து வைத்திருந்த குணங்களான மிடுக்கு, கம்பீரம், துணிவு, அஞ்சாமை, கோபம் போன்ற அத்தனை குணங்களையும் அப்படியே உள்வாங்கி அருமையாக தனது நடிப்பின் மூலம் வெளிக்காட்டி பாரதியாகவே வாழ்ந்திருக்கிறார் ஷியாஜி ஷிண்டே. செல்லம்மாவாக தேவயானியும் தனது திறமையை வெளிக்காட்டியிருக்கிறார். தனது குடும்பத்தைப் பற்றிய கவலையின்றி, சமூகத்தைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கும் பாரதிக்கும், தனது இரண்டு குழந்தைகளுக்கும் நடுவே, கணவரைப்போல் ஆச்சாரங்களை விட்டும் ஒதுங்கவும் முடியாது, வறுமையில் அவர்கள்படும் வேதனைகளை வெளிக்காட்டுவதிலும் தத்ரூபமாக நடித்துள்ளார். வீட்டில் உணவின்றி பிள்ளைகளுடன் கஷ்டப்படும்போது, பல்லாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள பிஜித் தீவின் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யும் மக்கள் படும் அவலநிலைகண்டு கண்ணீர் விட்டு கவிதைவடிக்கும் பாரதியிடம், 'இங்கு நாம்படும் கஷ்டத்தை விடவா அவர்கள் அங்கு பெரும் கஷ்டப்படுகிறார்கள்?' என்று கேட்டு தனது உணர்ச்சிகளை கொட்டும்போதும் தேவயானி நடிப்பில் உயர்ந்து நிற்கின்றார்.

இசைக்கு தான்தான் ஞானி என்பதை மீண்டும் இளையராஜா பாடல்களில் மட்டுமல்ல, பின்னணியிலும் பதியவைத்திருக்கிறார். பாடல்களை கேட்டால் இவற்றை பாரதியார் தான் இயற்றியிருப்பாரோ என்று தோன்றும் அளவிற்கு காட்சிகளோடு பொருந்தி வருவதோடு, ஆழமான கருத்துக்களைக் கொண்ட பாடல்வரிகளை புதுமைப்பித்தனும், மு.மேத்தாவும் அருமையாகப் படைத்துள்ளார்கள். தங்கர்பச்சானின் ஒளிப்பதிவு பாரதி வாழ்ந்த காலத்தை கண்முன் கொண்டுவந்து விரியவைக்கின்றது.

பாரதி, எங்கள் வளரும் சமுதாயம் நிச்சயமாக 'பல தடவை' பார்த்து, படிக்க வேண்டிய ப(ா)டம்!

— செந்தூரன்

கிடைக்கப் பெற்றோம்



தேடல்
(கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: ரமேஷ் வவுனியன்

இன்னொரு காத்திருப்பு
(கவிதைத்தொகுப்பு)
ஆசிரியர்:
சாந்தி ரமேஷ் வவுனியன்

இவ்விரு நூல்களுக்குமான தொடர்புகளுக்கு:

RAMESH VAVUNIYAN,
BAHNHOF STR- 4,
55743 1 DAR OBERSTEIN, GERMANY.
E.MAIL-vavuniyan@web.de

விற்பனைக்கு

தமிழ் மூலம் WORD 2000

கணினியில் பயன்பாட்டில் உள்ள 'WORD 2000 என்ற Programme இன் செயற்பாடுகளை தமிழில் விளக்கி எழுதப்பட்ட ஒரே நூல் இது.
கொழும்பில் உள்ள Quick Tec Academy நிறுவனர் S.A. ஞானேஸ்வரன் அவர்களால் எழுதப்பட்டுள்ள இந் நூல், கணினிப் பாவனையாளர்களுக்கு மிகவும் பயனுள்ளது.
இந் நூலைப் பெறவிரும்புபவர்கள் ஈழமுரசு தலைமைக் காரியாலத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழீழத் தமிழர்களுக்கு மலிவு விலையில் சிகை அலங்காரம்

Coiffure Krivo

Feldberg Str-38-Basel
Tel: 6926748
Natel: 0765731923

சிகை அலங்காரம்:
19-சுவிஸ் பிராங்குகள் மட்டுமே!

முக்கிய அறிவித்தல்

அன்பான தமிழீழ நண்பர்களுக்கு!

நான் ஒரு குர்திஸ்தான் நாட்டவன். எனக்குத் தெரியும் உங்கள் நாட்டுப் பிரச்சினை. நீங்கள் தரும் 19 பிராங் பணத்தில் 4 SFr களை உங்கள் நாட்டில் நடக்கும் சண்டையினால் பாதிக்கப்பட்டு துன்பப்படும் குழந்தைகளுக்கு கொடுக்கவுள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன்.

Pub. Sw.

தீபத்தில் தீபாவளி

தீபம்
www.deepamtv.com

23ம் திகதி முதல் 29ம் திகதி வரை
தீபத்தில் தீபாவளி வாரம்
Eutelsat Hot Bird 4 உள்ளவர்கள்
தீபாவளி வார நிகழ்ச்சிகளை
இலவசமாகக் கண்டு களிக்கலாம்.
(சந்தா அட்டை இல்லாது)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
ஒக்டோபர் 23ம் திகதி முதல் 29ம் திகதி வரை
சிறப்பு நிகழ்ச்சிகள் தீபம் தொலைக்காட்சியில்

★ நேரடித் தொலைபேசி நிகழ்ச்சிகள்
★ கவிதை நிகழ்வுகள் ★ சிறுவர் நிகழ்ச்சிகள்
★ இசைப் பாடல் நிகழ்ச்சிகள்
★ நடன நிகழ்ச்சிகள் ★ நாடகங்கள்

ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் நேயர்கள்
பங்குகொண்ட விஷேட நிகழ்ச்சிகள்

தீபாவளி சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள
சிறப்புத் தொலைபேசி இலக்கம்: 0208 8146555
தொலைநகல் 0208 8146575



வெகுவிரைவில்

ஐரோப்பிய மேடைகளில்
சிம்மக்குரலோன்
B.H. அப்துல் ஹமீத்தின்

பாட்டுக்குப் பாட்டு

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், பிரித்தானியா
ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள
'பாட்டுக்குப் பாட்டு' போட்டிகளில்
கலந்துகொள்பவர்கள் 30.10.2000 இற்கு முன்
எமது முகவர்களிடம் பதிவுசெய்துகொள்ளுங்கள்

உங்கள் தொடர்புகளுக்கு

தலைமைப் பணியகம்

பிரித்தானியா: **Tele Europe Ltd.**
1,Martindale Road. Hounslow West,
TW4 7EW, London, U.K.
Tél: 0044-2088146565
Fax: 0044-2088141144
E-mail: info@deepamtv.com

தீபம் ஒளிபரப்பாகும் செய்மதி:

Eutelsat Hot Bird 4, at 13 ° East
Down link Frequency: 10722 MHZ
Symbol: 29900

சந்தா விபரங்களுக்கும்
இணைப்பிற்கும் உங்கள் நாட்டு
முகவர்களுடன்
தொடர்புகொள்ளுங்கள்.

பிரான்ஸ்: MR. SAKTHI - Tél: 01 42 09 03 04
Fax: 01 42 09 78 24

ஜேர்மனி: MR.BALA - Tél: 0049- 421429389
H.P: 0172 87 60 038

சுவிஸ்: MR.S.K. NATHAN - Tél: 0041-2724336
Fax: 0041-2732377

புகலிட நிகழ்வுகள்

பன்னிருவேங்கைகளின் 13வது ஞாபகார்த்த எழுச்சிவிழா

இந்திய—இலங்கை கூட்டுச் சதியால் பலாலியில் பலியாகி, தீருவில் வெளியில் தீயில் சங்கமமாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவு எழுச்சி விழா கடந்த 08.10.2000 ஞாயிறு சுவிஸ் லவுசானில் நடைபெற்றது.

உள்ளங்கள் ஒன்றுபட்டு மண்டபம் நிறைந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கூடிநிற்க வன்னி மண்ணில்

காவியமான மாவீரன் இளங்குயிலனின் தந்தை தமிழீழ தேசியக்கொடியினை ஏற்றிவைக்க, அமைதிவணக்கம் ஈகைச்சுடரேற்றல், மக்களின் மலர் வணக்கத்தோடு கூடி, தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழக சுவிஸ் கிளையினரின் எழுச்சிக் கானங்களோடு, பேர்ண் திருக்கோணேஸ்வர நடனாலய ஆசிரியையின் - லவுசாண் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள்

இடம்பெற்று, தொடர்ந்து கடந்த 01.10.2000 அன்று உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கல்விச்சேவை சுவிஸ் கிளையினரால் மாணவர்களிற்கிடையே நடாத்தப்பட்ட ஓவியப் போட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களிற்கான பரிசளிப்பும் நடைபெற்றது.

எழுச்சி உரையில் திரு. அல்பேட் அவர்கள் தற்போதைய, கடந்தகால கள நிலவரங்களை விளக்கி புலம்பெயர்வாழ் தமிழீழ மக்களிடம் எமது தேசம் வேண்டிநிற்பவை பற்றியும் விபரித்தார்.

இடைவேளையுடன் மீண்டும் ஆரம்பமான நிகழ்வில் வோ (VO) மாநில தமிழர் இல்லக் கலைஞர்கள் வழங்கிய மண்ணின் நிகழ்வைச் சித்தரிக்கும் 'எங்களின் யுகம்' என்னும் நாடகம் அல்ல நிகழ்வு மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றதை மண்டபத்தினுள் குழுமியிருந்த மக்கள் கூட்டமும், அவர்களின் நிசப்தமும் காட்டியது. இதை எழுதி இயக்கிய திரு. சிறீஸ்கந்தராசாவும் நாடகக்கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்களே. தொடர்ந்து 'தீருவில் தீ', 'புதுயுகம்', 'ஈழம் மலர்கின்ற நேரம்' போன்ற தலைப்புக்களோடு கூடிய கவியரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. கவியரங்க நடுவராக இருந்த கிருஷ்ணா அம்பலவாணரும் தனது பணியை தனது பாணியில் செவ்வனே வழங்கினார். இறுதி நிகழ்வாக தமிழீழ தேசியக்கொடி இறக்கல் வைபவத்தோடு தமிழீழ மக்களின் தாரக மந்திரமான 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற பாடலுடன் நிகழ்வுகள் நிறைவெய்தின.

விடுதலை நாதம் 2000

(டென்மார்க்)

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வருடா வருடம் விடுதலை நாதம் எனும் நிகழ்ச்சியை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிதிக்காக நடத்துவது வழமை. அந்த வகையில் இம்முறை விடுதலை நாதம் நிகழ்வை சிறந்த பாடகர் தேர்வுப் போட்டி எனும் வகையில் நடாத்தி சிறப்பித்திருந்தார்கள்.

கீழ்ப்பிரிவு

இந் நிகழ்வானது 02.09.2000 சனிக்கிழமை அன்று டென்மார்க் ஈகாஸ்ற் (IKAST) நகரில் மாலை 5 மணியளவில் கொடிவணக்கப் பாடலுடன் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் போட்டிகள் ஆரம்பமாகின.

தொடக்க உரையை திருவாளர் தி.அருளானந்தராசா அவர்கள் வழங்கி இருந்தார். அவர் தமது உரையில் 'தமிழர்களுடைய காலத்தில் இது சூரியக் காலம் என்றும், இந்த விடுதலை நாதம் நிகழ்வை உண்மையின் ராகம் என்று குறிப்பிடுவது சாலப் பொருந்தும். ஏனெனில் உண்மையின் உள்ளிருந்துகொண்டு எங்கள் போராளிகளாலும் மக்களாலும் பிறப்பாக்கம் பெற்ற இப் பாடல்கள் உண்மையாகவே உண்மையின் ராகங்கள்தான்' என்று முன்மொழிந்தார்.

மேற்கொண்டு சிறந்த பாடகர் போட்டித் தேர்வு நிகழ்வுக்குள் அரங்கு பிரவேசித்துக்கொண்டது. போட்டி நிகழ்வில் பங்கேற்ற பாடகர்கள் வயது அடிப்படையில் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு

மத்தியபிரிவு

என நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சிறந்த பாடகர் தேர்வுக்கான நீதிபதிகளாக V.S. செல்வராஜா (இசை ஆசிரியர் ஏழிசை வேந்தன், ஏழிசை வித்தியாலய அதிபர் டோட்முன்ற் ஜேர்மனி) S.பிரணவநாதன் (இலங்கை வானொலி கலைஞர், ஜேர்மன் கலைபண்பாட்டுக்கழக அங்கத்தவர்) இவர்கள் இருவரும் பங்கேற்றுக் கொண்டிருந்தார்கள்.

போட்டித் தேர்வு நிகழ்வில் 40ற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து சிறப்பித்துக்கொண்டார்கள். தொடர்ந்து, 'தமிழீழ இசைக்குழு டென்மார்க்' இசைக்குழுவின் பாடகர்களும் இருபாடல்களைத் தந்து சிறப்பித்துக் கொண்டார்கள். இவ் இசை நிகழ்ச்சியின் இசை அமைப்பாளர்களும் 'தமிழீழ இசைக் குழு டென்மார்க்' என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டி நிகழ்வை சிறப்புறத் தொகுத்து வழங்கி இருந்தார் திரு. முரளி சர்மா அவர்கள். விடுதலை நாதம் நிகழ்வு இறுதி நிலைக்குள் நுழைந்துகொண்டது. போட்டியில் தேர்வாகியவர்களின் விபரங்களை அழைப்பதற்கு மேடையில் தோன்றினார் திரு. செல்வராஜா. தொடர்ந்து வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிச் சின்னங்களை விடுதலை நாதம்

மேற்பிரிவு

நிகழ்ச்சிக்கு ஆதரவுக்கரம் நல்கிய NÆRKØB ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு.மேரியர் அன்ரன்ராஜ் அவர்கள் வழங்கினார். இந் நிகழ்வுகளுக்கிடையே விடுதலை நாதம் நுழைவுச்சீட்டுக்களின் அதிர்ஸ்டம் பார்க்கப்பட்டுத் தேர்வாகிய ஒருவருக்கான இலண்டன் 'பயணத்திற்கு விமானச்சீட்டும் NÆRKØB ஸ்தாபனத்தாரால் வழங்கப்பட்டிருந்தது.

வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிச் சின்னங்கள் கீழ்ப்பிரிவில் இருந்து வழங்கப்பட்டிருந்தன.

கீழ்ப்பிரிவில்

1வது-ஸ்ரெபின் இராமச்சந்திரன் 'ஓடுதய்யா தமிழீழத்தில்....'
2வது-அமரேஸ் குணரட்ணம் 'ஆண்டாண்டு காலமதாய்...'
3வது-பிரியங்கா கோபாலசிங்கம் 'வேங்கையாக போகும் ஒரு...'

மத்தியபிரிவில்

1வது-டிலக்சன் ஜெயரட்ணம் 'கோயில்மணி ஓசை...'
2வது-தர்சிகா கருணாகரன் 'அன்னை தந்தை தங்கையோடு...'
3வது-செல்விகள் வாணி ஜெயலிங்கம், வேணி ஜெயலிங்கம் ஆகிய இருவரும் முறையே 'ஓடுதய்யா தமிழீழத்தில்...', 'விடுதலை வானத்தில்...'

மேற்பிரிவில்

1வது-செல்வன் மயூரன் ஆனந்த கடாட்சரம் 'அம்மா உன் பிள்ளை உயிரோடு இல்லை...'
2வது-செல்வி கிருபாஜினி வேலுப்பிள்ளை 'ஊர் திரும்பும் சைபீரிய வாத்தே நில்லு...'
3வது-செல்வன் சியால்ராஜ் அன்ரன் தோமஸ், 'போடா தமிழா போடா...'

அதிமேற்பிரிவு

அதிமேற்பிரிவில்

1வது-திரு. இரத்தினேஸ்வரன் கதிரவேல் 'அம்மா உன் மகள் காவல் அரண்...'
2வது-திரு. ரமேஸ்பேபி சின்னராஜா 'எங்கள் தமிழீழ மண்ணில்...'
3வது-திரு. ஜெயக்குமார், டெனில் கருஷ்ரி, 'அம்மா உன் மகள்...', 'வல்வெட்டித்துறை எங்கள்...'

செ. ஆனந்தன்

வீனஸ் கிண்ணம் 2000 துடுப்பெடுத்தாட்டப் போட்டி - பேர்லின்

பேர்லின் விஸ்ரபெல்ட் வீனஸ் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் 15வது வருட நிறைவைக் கொண்டாடுமுகமாக வீனஸ் விளையாட்டுக் கழகத்தினரால் வீனஸ் கிண்ணம் 2000 இற்கான 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டி சென்றமாதம் (Sep) 9ம், 10ம் திகதிகளில் பேர்லின் விஸ்ரபெல்ட் மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இச் சுற்றுப்போட்டியில் பேர்லினில் உள்ள பலவிளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிச் சிறப்பித்தன. போட்டிகள் காலை 10 மணியில் இருந்து மாலை 6 மணி வரை இடம்பெற்றது. இச் சுற்றுப்போட்டியை மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி பிரதம விருந்தினரான திரு. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இப்போட்டிகளுக்கு நடுவர்களாக மேற்கு இந்தியத் தீவுகளைச் சேர்ந்த (West indies) திரு.ரூபேட் (Rubert) அவர்களும், திரு.யோ JOF) அவர்களும் கடமையாற்றினார்கள். அனைத்து கழகங்களும் சிறப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இருப்பினும் இறுதிப் போட்டிக்கு விஸ்ரபெல்ட் வீனஸ் கழகமும், விஸ்ரபெல்ட் தமிழர் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின. முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் விளையாட்டுக் கழகத்தினர் 14.5 பந்து மாற்றங்களில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றனர். பின்னர் துடுப்பெடுத்தாடிய விஸ்ரபெல்ட் தமிழர் விளையாட்டுக் கழகத்தினர் 15 பந்து மாற்றங்களுக்கு 6 விக்கட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். இதன்மூலம் விஸ்ரபெல்ட் வீனஸ் விளையாட்டுக் கழகத்தினர் வீனஸ் கிண்ணம் 2000 த்தை தமதாக்கிக் கொண்டனர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் Cylon haus அணியினருக்கும் Kreutxbury தமிழர் விளையாட்டு அணியினருக்குமிடையில் கடும்போட்டி நடைபெற்று சொற்ப ஓட்டங்கள் வித்தியாசத்தில் Cylonhaus அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

வெற்றிபெற்ற விளையாட்டுக் கழகத்தினருக்கும், வீரர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்களையும், பதக்கங்களையும் பிரதம விருந்தினர் திரு. திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா வழங்கிக் கௌரவித்தனர்.

- எஸ்.சிவகுமார்

வாரம் ஒரு விடயம்

பாலஸ்தீனமும் அதன் விடுதலை இயக்கங்களும்

- 3

1947ம் ஆண்டு ஐ.நா. சபை, பாலஸ்தீனத்தை யூதர்களுக்கும், அராபியர்களுக்குமிடையே பிரித்துக்கொடுப்பதென முடிவெடுத்து, எருசலேமினை மட்டும் அதன் கட்டுப்பாட்டில் சர்வதேசப் பகுதியாக வைத்திருப்பதென்றும் முடிவுசெய்தது. ஐ.நா.வின் இந்த அறிவிப்பினையடுத்து இங்கிலாந்து அரசு 1948ம் ஆண்டில் பாலஸ்தீனத்திலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்த அதே யாண்டு மே மாதம் 14ம் திகதி இஸ்ரேல் சுதந்திரம் பெற்றதாகவும் அறிவித்தது. இந்த அறிவிப்பு அரேபிய உலகில் ஒரு அதிர்ச்சியை அளித்தது. இதன் காரணமாக இஸ்ரேலின் சுதந்திர அறிவிப்பு வெளியாகிய மறுநாளே சிரியா, லெபனான், எகிப்து, ஜோர்தான், ஈராக் ஆகியவை இப்பகுதியிலிருந்த அராபியர்களுடன் சேர்ந்து இஸ்ரேலினை எதிர்த்தனர். ஆனால், அராபியர்களின் பல தாக்குதல்களையும் இஸ்ரேல் முறியடித்தது. இதனால், எல்லைப் பகுதியில் வாழ்ந்த 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட அராபியர்கள் ஜோர்தானுக்கும், ஏனைய அரேபிய நாடுகளுக்கும் சென்று குடியேறினர். இஸ்ரேல், அரபு யுத்தத்தின்போது, இஸ்ரேல் கைப்பற்றிய வடக்கு ஜோர்தான் பள்ளத்தாக்கு, கலீலி, எஸ்ரரலான் சமவெளிப் பிரதேசம், நெகேவின் பெரும்பகுதி ஆகியவற்றை அந்நாடு தனதாக்கிக் கொண்டது. அராபியருக்கும், அவர்கள் கைப்பற்றியிருந்த ஜோர்தான், சமாரியா, யூதேயா ஆகியவை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஜெருசலேம் இருதரப்பினருக்கும் பிரித்துக்கொடுக்கப்பட்டது. தெல்-அவிவை தலைநகரமாகக்கொண்டு இஸ்ரேல் ஒரு வலிமைமிக்க அரசாக மாறியது. இதன்பின்னரும் மத்தியகிழக்கில் இஸ்ரேலுக்கும் எகிப்திற்குமிடையே போர்கள் நடைபெற்றுள்ளன. 1956ம் ஆண்டு நவம்பர் மாதம் இஸ்ரேல் காசாப் பகுதியை கைப்பற்றி அதன் அருகிலுள்ள ஆகாபா வளைகுடாவையும் கைப்பற்றிக்கொண்டது. இப்பகுதிக்கு 1957ம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. படைகள் வந்தபின்னர், இஸ்ரேல் வெளியேறியது. எனினும் 1967ம் ஆண்டு யூன் மாதம் எகிப்து ஆகாபா வளைகுடாவை முற்றுகையிட்டபொழுது மீண்டும் போர் வெடித்தது. இஸ்ரேலியப்படைகள் எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகளுக்குள் புகுந்து பல பகுதிகளையும், ஜோர்தானுக்குரியதான ஜெருசலேத்தையும் கைப்பற்றிக்கொண்டன. ஆயினும் போர் ஓயவில்லை. 1973ம் ஆண்டும் வெடித்தது. இப்போரினால் பல்லாயிரக் கணக்கான பாலஸ்தீன மக்கள் அகதிமுகாமில் அடைக்கலம் புகுந்தனர். இவ்வேளைதான் பாலஸ்தீனத்தை விடுவிக்க பாலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட சில இயக்கங்கள் தோன்றின. இந்நிலையில் இஸ்ரேலுக்கும் எகிப்திற்குமிடையே 1979ல் அமைதி உடன்படிக்கையொன்று அமெரிக்காவால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி இஸ்ரேல் சினாய்ப் பகுதியிலிருந்தும், படையை விலக்கிக் கொள்வதெனவும், எகிப்தும், இஸ்ரேலும் பேச்சுக்களின் மூலம் தமக்கிடையிலான தகராறுகளையும் தீர்த்துக்கொள்ளவும் இணங்கிக் கொண்டன.

இந்த நிகழ்வுகளுக்கிடையே உலகின் பல பகுதிகளிலிருந்த யூதர்கள் 1957ம் ஆண்டு இஸ்ரேலில் மீண்டும் குடியேறத் தொடங்கியதால், இன்று பாலஸ்தீனத்தில் 3 மில்லியனுக்கு மேற்பட்ட யூதர்கள் இருக்கின்றனர். எனினும், அரபு உலகம் இஸ்ரேலை ஒரு தனி நாடு என்பதை ஏற்றுக்கொள்ளாது இன்றும் இப் பகுதியைப் பாலஸ்தீனமென்று குறிப்பிட்டு வந்தாலும், பாலஸ்தீனமென்னும் ஒரு பெயரில் உலப்படத்தில் இன்னும் தோன்றவில்லை. அம்மண்ணின் மைந்தர்களை தமது நாட்டின் பெயரை உலகப் படத்தில் காணமுடியாத நிலை ஒரு வரலாற்றுக் கொடுமைதான்.

(மறுமுறை பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் பற்றி)

– வேம்பு

(தொடரும்)

உலகம் சந்தித்த போர்கள்

சிலுவைப் போர்கள்

இந்த உலகத்தில் நடந்த போர்களில் சிலுவைப்போர்களும் முக்கியமானவை. காலத்திற்குக் காலமாக 8 சிலுவைப்போர்கள் நடந்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. 8வது சிலுவைப்போரே இறுதியான சிலுவைப் போராகவும் கருதப்படுகின்றது. இப்பத்தியில் இதற்கு முன்னர் 7 சிலுவைப் போர்களைச் சுருக்கமாகப் பார்த்தோம். இம்முறை 8ம் சிலுவைப் போர்பற்றியும், சிலுவைப்போர் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் சுருக்கமாகப் பார்க்கலாம்.

9ம் லூயி மன்னனால் 8ம் சிலுவைப் போர் நடாத்தப்பட்டது. தனது படைகளை நடாத்திய லூயி, துனீசியா நாட்டின் கார்த்தேஸ் எனும் இடத்தில் தனது படைகளுடன் பாசறை அமைத்துத் தூங்கினார். அவ்வேளை, அப்பாசறைகளில் இனந்தெரியாத தொற்றுநோயொன்று வேகமாகப் பரவி எண்ணற்ற போர் வீரர்களைப் பலிகொண்டது. வேகமாகப் பரவிய நோய்க்கு மன்னனும் ஒன்றுதான், போர் வீரனும் ஒன்றுதான். இதனால்,இந்தத் தொற்றுநோயினால் லூயியும் மரணமடைந்தார். இந்நோய் ஏற்படுத்திய தாக்கம் 8ம் சிலுவைப்போரின் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. லூயி மரணமடைந்ததால் போர் நின்றுவிடுமெனப் பலரும் எதிர்பார்த்தாலும் லூயியின் மரணச் செய்தியை அடுத்து இங்கிலாந்தின் இளவரசர் எட்வேட் துனீசியாவிற்குச் சென்று சிலுவைப் போரைப் பொறுப்பேற்று நடாத்தினார். இப்போரில் ஏக்கர் பிரதேசம் எட்வேட்டின் கைகளுக்கு வந்தது. அங்குசென்ற அவர், சில நாட்கள் அங்கு தங்கியிருந்துவிட்டு மீண்டும் இங்கிலாந்து திரும்பினார். இஸ்லாமியப் படைகளுக்கும், தொடர்ச்சியான போர்கள் சலிப்பைக் கொடுத்ததோ என்னவோ ஏக்கர் பிரதேசத்தை மீட்க போர் ஒன்றினை அவர்கள் மீண்டும் நடாத்த முன்வரவில்லை. இதனால், 8ம் சிலுவைப் போர் முடிவுக்கு வந்தது.

இச் சிலுவைப்போர்கள் பற்றிப் பலவிதமான கருத்துக்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்போர்களில் கிறீஸ்தவர்களுக்குத் தோல்விகள் ஏற்பட்டதாகவே பொதுவாகக் கூறப்படுகின்றது. கிறீஸ்தவர்களுடைய தோல்விகளுக்குப் பல காரணங்களை வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். முதலாவதாக அவர்கள் சுட்டிக் காட்டுவது கிறீஸ்தவர்களிடம் ஏற்பட்ட ஒற்றுமையின்மையைத்தான். போர்களை நடாத்திச் செல்லக்கூடிய திறமையான தலைவர்கள் அவர்களிடம் இருக்கவில்லையெனவும், அவ்வாறு இருந்த ஒரு சிலர்கூட தங்களுடைய தனிப்பட்ட வீரத்தைக் காட்டி, பேரும் புகழும் அடைய விரும்பியதால், அவர்கள் போர்களில் தோல்வியை தழுவ நேரிட்டது. அத்துடன், சிலுவைப் போர்களை இவர்கள் நடாத்தவேண்டி இடங்கள் மத்திய கிழக்குப் பகுதியில் இருந்ததால், இந்தப் புனித இடங்களை அடைய கிறீஸ்தவப் படையினர் நெடுந்தூரம் பயணம் செய்யவேண்டியதாகவிருந்தது. இவ்வாறான பயண வழியில் அவர்கள் சந்தித்த இடையூறுகள் போரில் அவர்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின. இக் காரணங்களைவிட சிலுவைப் போர் காலத்திலிருந்த அரசர்களுக்கும், பாப்பரசர்களுக்குமிடையே அடிக்கடி கருத்துவேறுபாடுகளும், முறுகல் நிலையுமிருந்ததால் மக்கள் சமயத்தை முன்னிலைப்படுத்திப் போரினை நடாத்தத் தயங்கினர். இதைவிட போர்களில் வெற்றி கொள்ளப்பட்ட புனித இடங்களைக்கூட பாதுகாப்பதில் கிறீஸ்தவ அரசுகள் தங்களுக்கிடையில் அடிக்கடி சச்சரவுகளை மேற்கொண்டதால், அந்த இடங்களும் பறிபோயின. மேற்கூறிய எல்லாக் காரணங்களையும்விட, இஸ்லாமியப் படைகளில் பங்கெடுத்த துருக்கிய போர்வீரர்களின் வீரமே குறிப்பிட்டுப் பேசப்படுகின்றது. துருக்கிய போர் வீரர்களிடமிருந்த ஆழமான சமய உணர்வும், சலாவுதீன் போன்ற சிறந்த தலைவர்களின் தலைமைத்துவமும் அவர்களுக்கே வெற்றியைத் தேடித்தந்தன.

வழமைபோலவே, உலகின் மற்றைய போர்களைப்போல சிலுவைப் போர்களிலும் எண்ணற்றோர் உயிரிழந்தனர். குறிப்பாக ஐரோப்பியர்களே உயிரிழப்புக்களை அதிகளவில் சந்தித்தனர். அத்துடன் கோடிக்கணக்கான பணம் போரில் விரயமானதால் ஐரோப்பாவின் அரசியல், சமூகப் பொருளாதார நிலைகள் பாதிப்படைந்தன. இந்த நிலையால், அரசர்களுடைய அதிகாரங்கள் பெருகின. அரசர்களுக்குப் பெரும் தடையாகவிருந்த நிலமானியத்திட்டமும் இப்போரினால் அழிந்தது. அத்திட்டத்தில் முக்கியமானவர்களாகவிருந்த பிரபுக்கள் பலரும் இப்போர்களில் உயிரிழந்தனர். போர்க் காலத்தில் இருந்து திரும்பிய பிரபுக்கள் கூட ஏழைகளாகவே திரும்பினர். இவ்வாறான தாக்கங்கள் ஒருபுறமிருந்தாலும் மறுபுறத்தே போரில் ஈடுபட்ட விவசாய அடிமைகள் விடுதலை பெற்றமை, போருக்குத் தேவையான பணத்தை பிரபுக்களிடத்தில் கொடுத்துவிட்டு நகரங்கள் சுதந்திரமடைந்தமை, ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்குமிடையிலான வணிகத் தொடர்புகள் அதிகரித்துடன், அத்தொடர்புகள் மூலமாக ஐரோப்பியர்கள் சர்க்கரை, நறுமணப்பொருட்களைப் போன்ற புதிய பொருட்களையும் முதன் முதலாக அறிந்தனர். புதிய நகரங்கள் தோன்றின நடுத்தர வகுப்புச் சமூகமும் தோன்றியது. இப்போர்கள் காரணமாக அரேபிய நாகரிகமும் ஐரோப்பாவில் பரவத் தொடங்கியது. அரேபியர்களின் மருத்துவ முறை, வேதியல், கட்டடக்கலை ஆகியவை ஐரோப்பியரின் மனங்களைக் கவர்ந்துகொண்டதால், ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சிக்கு இந்தப் போர்களும் ஒரு காரணமாக இருந்ததென்னவோ உண்மைதான். ஆயினும், மனிதனின் மதவெறிகள் சிலுவைப் போர்கள் முடிந்து எவ்வளவு நூற்றாண்டுகளின் பின்னரும் இன்றும்கூட தொடர்வதால், சிலுவைப் போர்கள் தோன்றியதன் காரணங்கள் இன்றும் தொடர்ந்தும் இருப்பதாகவே கருதமுடியும்.

[சிலுவைப் போர்கள் முற்றும்.]

- சி.பி.

ExcellencE சர்வதேச தொலைபேசி அட்டை

	№ Local	-	№ Vert
இலங்கை	50	-	35
இந்தியா	43	-	32

இன்னும் பல நாடுகளுக்கு அதிக நிமிடங்கள்

CALLnet

59, Rue d'Avron
75020 Paris
Tel: 0146594024

வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – [டிகோல் தொடர் - 18]

தோற்றமும் வளர்ச்சியும்

09.05.40 இல், ரேனோ பதவி விலகல் நாடகம் ஆடினார். குடியரசுத் தலைவர் அவரையே மீண்டும் அமைச்சரவை அமைக்கும்படி கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பிரதமர், தலாதியெவைப் பாதுகப்பு அமைச்சர் பதவியில் இருந்து நீக்கினார்.

10.05.40 இல், இட்லரின் படைகள், ஒரே சமயத்தில், ஒல்லாந்து, பெல்ஜியம், லக்சம்பேர்க் ஆகிய நாடுளை ஆக்கிரமித்தன.

அடுத்தடுத்த நாட்களில், நல்ல செய்திகளும், கெட்ட செய்திகளும் மாறி, மாறி டிகோலுக்குக் கிடைத்தன. இங்கிலாந்தில், அஞ்சாத சிங்கம் என்று பெயர் பெற்ற சர்ச்சில் பிரதமர் ஆனார். நல்ல செய்தி! பிரான்சில், ரேனோ அமைச்சரவையில், மார்ஷல் துணைப்பிரதமர். கெட்ட செய்தி. தள்ளாத வயதிலும், தணியாத பதவி ஆசை பிடித்த இந்தக் கிழவர் ஏன்? இவர் அமைச்சரவையில் இருந்தால் அதிகம் தொல்லை தரமாட்டார் என்று பிரதமர் நம்பினார். மார்ஷல் எங்கிருந்தாலும் தொல்லை தருவார் என்று டிகோல் நினைத்தார்.

15.05.1940 இல், ஒல்லாந்து தோல்வியை ஒப்புக் கொண்டது.

பின்னர், ஜெர்மன் படைகள் பிரான்சை ஆக்கிரமித்தன. எந்த ARDENNES மலைப் பகுதியில் காடுகள் உள்ளதால், எதிரி வாலாட்ட முடியாது என்று பிரஞ்சு இராணுவத்தின் மூத்தத் தளபதிகள் நம்பி இருந்தனரோ, அந்த மலைப் பகுதியில் தான் இட்லர் தாக்கி, பிரான்சுக்குள் நுழைந்தான். இப்படி நுழைந்த நாஜிக்கள் முதலில் வடமேற்கை நோக்கி விரைந்தனர். அதன் நோக்கம், பிரஞ்சுப் படைகளும், இங்கிலாந்து நாட்டுப் படைகளும் வடகடல் மூலம் தப்பி ஓடுவதைத் தடுப்பதுதான்.

ஜெர்மன் படைகள் வேகமாக முன்னேறின. தடுப்பதற்கு, பிரஞ்சு இராணுவத்தால் முடியவில்லை. நாட்டின் சாலைகளில், பிரஞ்சு மக்கள், எதிரியிடமிருந்து தப்பிக்க, அகதிகளாக தெற்கு நோக்கி நகர்ந்தனர். தோல்வியுற்ற இராணுவ வீரர்களும் பைத்தியக்காரர்கள் போல அலைந்தனர். இட்லர் படையினர் பிரான்சை ஆக்கிரமிப்பதில் காட்டிய அக்கறையை பிரஞ்சு வீரர்களைக் கைதிகளாக்குவதில் காட்டவில்லை.

கேர்னல் டிகோல் படைப் பிரிவுக்கு, வடக்கு நோக்கிச் செல்லும் ஜெர்மன் படைகளை, ஒரு குறிப்பிட்ட பகுதியில் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற கட்டளை இடப்பட்டது. எங்கு பார்க்கினும் பிரஞ்சுப் படைகள் தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்த வேளையில், டிகோல் மட்டும் எதிரியைத் தோற்கடித்தார். MONTCORNET பகுதியில், ஜெர்மனின் டாங்கிகள் முன், டிகோலின் பிரஞ்சுக் கவச வண்டிகள் தாக்குப் பிடித்தது மட்டும் இன்றி, எதிர்த்து முறியடிக்கவும் செய்தன. எல்லை முழுதும் இப்படி, பிரான்சு டாங்கிகளை நிறுத்தி இருந்தால், தனது கருத்துக்களை மதித்து இருந்தால், இன்று பிரஞ்சு இராணுவம் தோற்கும் நிலை ஏற்பட்டிருக்குமா?

டிகோல், தனது வெற்றியை நம்பி, தொடர்ந்து தாக்க விரும்பினார். எதிரிப்படைக்கு மேலும் பல தோல்விகளை அளிக்கும் நிலையில் அவரும், அவரது படைப் பிரிவினரும் இருந்தனர். ஆனால், அவரது மேலதிகாரிகள் அவரை அங்கிருந்து பின்வாங்குமாறு கட்டளை இட்டனர்.

டிகோல் ஒரே ஒரு பகுதியில் வெற்றி ஈட்டினாலும், மொத்தத்தில் பிரஞ்சுப் படைகள் தோற்றன. இதனால், பிரஞ்சு இராணுவத்தின் தலைமைத் தளபதியாக இருந்த ஜெனரல் GAMELIN பதவி இழந்தார். இது ஒரு நல்ல செய்தி. ஆனால், அவரது இடத்தில், மார்ஷல் பெட்டெய்னின் சீடர், ஜெனரல் வெய்கான் [WEYGAND] தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இது கெட்ட செய்தி. புதிய தலைமைத் தளபதி, டிகோல் படைப் பிரிவை ஒரு புதிய தாக்குதலில் ஈடுபடுமாறு பணித்தார். அந்தத் தாக்குதலுக்கு சார்ல்ஸ் தயாராகிக் கொண்டிருந்த சமயத்தில் தான் அந்த இனிப்பான செய்தி அவருக்குக் கிடைத்தது. 23.05.40 தில், அடுத்த 01.06.40 முதல் அவர், தற்காலிகமாக, இரண்டு நட்சத்திர ஜெனரலாக பதவி உயர்வு பெறும் செய்திதான் அது. இது MONTCORNET யில் பெற்ற வெற்றிக்கான பரிசு. அன்றைய பிரஞ்சு இராணுவத்தில், ஜெனரல் தகுதியுடன் சிறிய வயதினர் மூவர் இருந்தனர். அவர்களில் ஒருவராக, டிகோல் ஜொலித்தார். இனிமேல், அவரது பெயருடன் இந்த ஜெனரல் பதவி, ஒருபோதும் நீங்காமல் ஒட்டிக்கொள்ளும்.

அடுத்தடுத்த நாட்களில், மீண்டும் ஒருமுறை, அவரது படைப்பிரிவு, வடகிழக்கில் மேலும் ஒரு பகுதியில் இட்லரின் படைகளைத் தோற்கடித்தது. 1940தில், ஜெர்மன் வீரர்கள் ஒரே ஒரு பிரஞ்சு ஜெனரல் பெயரைத்தான் நினைவில் நிறுத்தினர். அந்த ஜெனரல் டிகோல் தான் என்று நமது வாசகர்களுக்குக் கூறவேண்டிய அவசியமில்லை.

சார்ல்ஸ் மீண்டும் ஒருமுறை மேலும் பல வெற்றிகளைப் பெறும் நிலையில் இருந்தார். மீண்டும் ஒருமுறை, அங்கிருந்து பின் வாங்குமாறு அவருக்குக் கட்டளை இடப்பட்டது. அவர் பாரிசுக்கு அழைக்கப்பட்டார். இன்றைய நிலையிலும், பிரஞ்சுப் படைகள் எப்படி வெற்றி பெறுவது என்பது பற்றி ஓயாமல் சிந்தித்தார். அவரது கருத்தின்படி, நாட்டை வடக்குத் தெற்காகப் பிரிக்கும் லுவார் [LOIRE] நதி எல்லையில், எதிரியைத் தடுத்து நிறுத்தவேண்டும். இங்கிலாந்து நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி, புதிய டாங்கிகளைப் பெற வேண்டும். அவற்றின் பலத்தால், எதிரி லுவார் நதியைக் கடந்து தெற்கு நோக்கி முன்னேற முடியாமல் தடுத்து நிறுத்த வேண்டும்.

டிகோல் வெற்றிபெறுவது குறித்து ஓயாமல் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், பெட்டெய்னும், அவரது சீடர் வெய்கானும் ஜெர்மனியிடம் சரணாகதி அடைவது பற்றிப் பேச ஆரம்பித்தார்.

பிரதமர் ரேனோ போரைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று நம்பினார். ஆனால், அதற்கான ஆட்களை அவர் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளவில்லை.

அன்று பிரான்சிடம் 1200 டாங்கிகள் இருந்தன. ஆனால், அவை அங்கு சிலவும், இங்கு சிலவுமாகப் பிரிந்து கிடந்தன. அவற்றை ஒன்று சேர்த்து, ஒரே படைப் பிரிவை உருவாக்கி எதிரியைத் தாக்க வேண்டும் என்று டிகோல் நம்பினார்.

பாரிசில், அவர், நாட்டின் முதல் தளபதியைச் சந்தித்தார். இரு வேறு வயதினர், இருவேறு மனோ பாவத்தினர், இரு வேறு சிந்தனை ஓட்டமுள்ளவர்கள். ஒருவர் பேசிய மொழி அடுத்தவருக்குப் புரியவில்லை.

தலைமைத் தளபதிதான் முதலில் பேசினார்.

'நாம் வெற்றி பெறவேண்டும் என்றால், அது வேண்டும், இது வேண்டும், அது இல்லை, இது இல்லை' என்று இல்லாதவற்றையும், இயலாதவற்றையும் அடுக்கி, வளர்த்தினார்.

இளையவர் பதில் அளித்தார்.

(தொடரும்)

கவிக்களம்

சேர்த்திடு..!

நடந்தேன்..
களைத்தேன்..
தேடினேன்.

சாலையின் ஓரத்தில்
வெறுமையாய்..
தனிமையாய்..
எதற்காகவே...
காத்திருப்பது போல்
ஒரு கல்.

உட்கார்ந்தேன்...
கண்களை மூடினேன்...
தேடினேன்.

வயல்களும் பரப்புகளும்
வானளாவிய பனைகளும்
ஒரு கணம்...
வந்து போயிற்று.

எழுந்தேன்..
நடந்தேன்..
தேடினேன்.

பாதையின் பாதியில்
பச்சிளங் குழந்தையாய்...
திருகத் திருக,
விழித்தபடி விம்மியது
ஒரு கல்.

அருகில் சென்று,
கைகளில் எடுத்து
கலைந்தது கணமொன்று.

பக்கம் பக்கம்
பார்வையை வீசி,
விழித்தேன்.
ஒரு கணம்

மேற் சட்டைப் பைக்குள்
பக்குவம் செய்து.
தடவிக் கொடுத்தேன்...

இதயமருகே
விம்மிய கல்லின்
உருகல் கேட்டேன்..

எனது நாடு
எனது மக்கள்
எனது இனம்
சேர்த்திடு..
அவ்விடம்.

- நீலன், டென்மார்க்

எங்கள் இரட்சகர்கள் வருகையிலே...!

விலங்கிலும் கீழாய்
வீதிவீதியாய் அலைய
வைத்தது சிங்களம்
வேலியமைத்தெமை
வேட்டையாடினர்;
தாலியறுத்தனர்;
தலைகளைக் கொய்தனர்;
எங்கள் தங்கையரை...;
குழந்தையின் உடலினைக்
கீறிக் கிழித்தனர்
தப்பிப் பிழைத்திடும்
தமிழ்(?)க் குழுக்களும்
வெட்கம் கெட்டவர்
வாக்குக் கேட்டனர்!
வாக்கு வேண்டி
வதைத்தது போதும்
பச்சையோ, நீலமோ
எது வந்தபோதும்
தம் கையுயர்த்தி...
சிங்களத்தின் எடுபிடியாய்... எனினும்
உங்களது வேலை முடிகிறது...!
எங்கள் வேங்கைகள்
கொடி உயர்கிறது...
வெட்ட வெட்டத்
தழைக்கும் வாழைபோல்
அதோ அதோ எங்கள்
இரட்சகர்களாய் புலிவீரர்...

மா.பாஸ்கரன் – ஜேர்மனி



ரதி ஜுவலர்ஸ்

28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL

'எப்பொழுதுமே மலிவு விலை'

Tel: 0181-9033063-Fax: 0181-9039711

OPEN: 7 Days a Week

Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Pub

உலக வரலாற்றில் பதிவானவர்கள்

உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்திபெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெறச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசை முறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப்பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.

குக்லியெல்மோ மார்க்கோனி

வானொலியைக் கண்டுபிடித்த குக்லியெல்மோ மார்க்கோனி. இத்தாலியிலுள்ள பொலோஞாவில் 1874இல் பிறந்தார். அவருடைய குடும்பம் செல்வ நிலையிலிருந்தது. தனி ஆசிரியர்கள் அவருக்குக் கல்வி கற்பித்தனர். 1894இல் மார்கோனி 20 வயதாக இருக்கும்போது, சில ஆண்டுகளுக்கு முன் ஹைன்ரிக் ஹெர்ட்ஸ் செய்த பரிசோதனைகள் பற்றிப் படித்தார். அப்பரிசோதனைகள் ஒளியின் வேகத்தில் காற்றினூடே செல்லும் கண்ணுக்குப் புலனாகாத மின்காந்த அலைகளிருப்பதைத் தெளிவாக எண்பித்தன.

கம்பிகளின்றி நெடுந்தூரம் செய்திக் குறிப்புகளை அனுப்புவதற்கு இந்த அலைகளைப் பயன்படுத்தலாமெனும் எண்ணம் மார்க்கோனியின் உள்ளத்தில் உடனே உதித்தது. தந்தியினால் முடியாத செய்தித் தொடர்புச் சாதனைகளை இதனால் செய்யமுடியுமென்பது புலனாயிற்று. எடுத்துக்காட்டாக, இம்முறையினால் கடலிலுள்ள கப்பல்களுக்குச் செய்தி அனுப்ப முடியும்.

1895 இல் மார்க்கோனி ஓராண்டு உழைப்பின் பயனாக எளிதில் இயங்கும் கருவியைச் செய்துமுடித்தார். 1896 இல் இங்கிலாந்தில் அவர் தம் கருவி இயங்கும் வகையை விளக்கிக் காட்டினார். அவர் கண்டுபிடித்த அக் கருவிக்கு முதல் காப்புரிமை வழங்கப்பெற்றது. விரைவில் மார்க்கோனி ஒரு வணிக நிறுவனத்தை நிறுவினார். 1898இல் முதல் 'மார்க்கோனி செய்திகள்' அனுப்பப்பெற்றன. அடுத்த ஆண்டில் ஆங்கிலேயக் கால்வாயைக் கடந்து கம்பியின்றிச் செய்திகளை அனுப்ப முடிந்தது. 1900 இல் அவர் முக்கியமான காப்புரிமையைப் பெற்றபோதிலும், தாம் கண்டுபிடித்த கருவியை இன்னும் சீர்படுத்தி காப்புரிமைகளைத் தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்தார். 1901இல் அட்லாண்டிக் பெருங்கடலின் குறுக்கே இங்கிலாந்தில் நியூஃபவுண்ட்லாந்திற்கு வானொலிச் செய்தியை அனுப்புவதில் அவர் வெற்றிகண்டார்.

1909இல் 'ரிபப்ளிக்' எனும் கப்பல் கடலில் மோதி உடைந்து மூழ்கியபோது இப்புதிய கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் தெளிவாகப் புலப்பட்டது. அப்போது வானொலிச் செய்தியை அனுப்பியதால் உதவி கிடைத்தது. அறுவரைத் தவிர ஏனையோர் காப்பாற்றப்பட்டனர். அதே ஆண்டில் மார்க்கோனி தமது கண்டுபிடிப்புக்காக நோபல் பரிசு பெற்றார். அடுத்த ஆண்டு அவர் அயர்லாந்திலிருந்து அர்ஜென்டினாவிற்கு 6,000 மைலுக் கப்பால் வானொலிச் செய்தியை அனுப்பினார்.

இச்செய்திகள் எல்லாம் மோர்ஸ் குறியீடுகளான புள்ளி, கோடு முறையிலே அனுப்பப் பெற்றன. குரலையும் வானொலி வாயிலாக அனுப்ப முடியுமெனத் தெரிந்திருந்தபோதிலும் 1916 வரை அவர் அதைச் செய்யவில்லை. வணிக அளவில் வானொலி ஒலிபரப்பு 1920களின் தொடக்கத்தில்தான் தொடங்கியது. ஆனால், விரைவில் அது பரவியது. அதன் முக்கியத்துவம் வளர்ந்தது.

இத்தகைய கண்டுபிடிப்புக்குக் காப்புரிமைகள் முக்கியமானதால் அதைப் பற்றி வழக்குகளும் தொடரப்பட்டன. ஆயினும் 1914 இல் நீதி மன்றங்கள் மார்க்கோனியின் முன்னுரிமையைத் தெளிவாக ஏற்றுக்கொண்டதால் அதன் பிறகு அவரை எதிர்த்து யாரும் வழக்காடவில்லை. மார்க்கோனி தம் வாழ்வின் பிற்காலத்தில் சிற்றலை, நுண்ணலைச் செய்திப் பரப்புகளில் முக்கிய ஆய்வுகள் செய்தார். 1937 இல் அவர் ரோமில் இறந்தார்.

வானொலியைக் கண்டுபிடித்தவர் எனும் வகையில் மார்க்கோனி புகழ் பெற்றுள்ளதால், வானொலியின் முக்கியத்துவத்தையும் அதன் பயனையும் பொறுத்தே அவரது சிறப்பும் அமைந்துள்ளது. (மார்க்கோனி) தொலைக்காட்சியைக் கண்டு பிடிக்கவில்லை. ஆயினும், வானொலி, தொலைக்காட்சியின் முக்கிய முன்னோடியாக இருந்தது. ஆகவே தொலைக் காட்சியைக் கண்டுபிடித்த புகழில் அவருக்கும் ஓரளவு பங்குண்டு என்பது பொருந்தும். இன்றைய உலகில் வானொலித் தொடர்பு மிகவும் முக்கியமானது என்பதில் ஐயமில்லை. அது செய்தியை அனுப்புவதற்கும், இன்பப் பொழுதுபோக்கிற்கும், படைத்துறைப் பணிக்கும், அறிவியல் ஆய்வுக்கும், காவலர் பணிக்கும் பிறவற்றிற்கும் பயன்படுகின்றது. இவற்றுள் சிலவற்றிற்கு (அரை நூற்றாண்டுக்கு முன்னே கண்டு பிடிக்கப்பட்ட) தந்தி பயன்படுமெனினும் பல்வேறு பயன்களுக்கு வானொலி இன்றியமையாததாக இருக்கின்றது. இது உந்து வண்டிகளுடனும், கடலிலுள்ள கப்பல்களுடனும், பறக்கும் வானவூர்திகளுடனும், விண்வெளிக் கலங்களுடனுங் கூட தொடர்புகொள்ளும். அது தொலைபேசியைவிட முக்கியமான கண்டுபிடிப்பாகும். தொலைபேசியில் அனுப்பும் செய்திகளை வானொலியிலும் அனுப்பலாம். ஆனால் தொலைபேசியினால், தொடர்பு கொள்ள முடியாத இடங்களுக்கும் வானொலியின் வாயிலாகச் செய்தி அனுப்பமுடியும்.

அலெக்சாண்டர் கிரஹாம் பெல்லைவிட உயர்ந்த இடம் மார்க்கோனிக்கு இங்கு அளிக்கப் பெற்றுள்ளது. ஏனெனில் தொலைபேசியைவிட வானொலி மிகவும் முக்கியமானது. மார்க்கோனியைவிட எடிசனுக்குக் கொஞ்சம் உயர்ந்த இடம். ஏனெனில் எடிசனுடைய கண்டுபிடிப்புகளுள் எதுவும் வானொலியைப் போல் முக்கியத்துவம் பெறவில்லையெனினும் அவர் மிகப் பலவற்றைக் கண்டுபிடித்தார். வானொலியும், தொலைக் காட்சியும் மைக்கேல் ஃபாரடே, ஜேம்ஸ் கிளார்க், மாக்ஸ்வெல் ஆகிய இருவரும் வகுத்த கொள்கைகளின் நடைமுறைப்பயனின் ஒரு சிறு பகுதியேயாதலால், இவ்விருவரையும் விட தாழ்ந்த இடமே மார்க்கோனிக்கு அளித்தல் பொருந்தும்.

4ம் ஆண்டு நினைவு வணக்கம்

லெப். கேணல் நாதன்

கப்டன் கஜன்

நாதண்ணை!

உங்கள் கனவு இன்று நனவாகிக்கொண்டு இருக்கின்றது. அன்று எம் தேசியத் தலைவரின் வழிநடத்தலில் ஓயாத அலைகள் ஒன்றின் மூலம் முல்லை மாவட்டம் மீட்கப்பட்டதும் விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டில் ஒரு மாவட்டம் வந்துவிட்டதாக எம்மிடம் கூறி மகிழ்ந்தீர்கள். இன்று தேசியத் தலைவரின் வழிநடத்தலில், வரிசையான ஓயாத அலைகளால் பல மாவட்டங்கள் முழுமையான கட்டுப்பாட்டில் வந்துகொண்டிருக்கின்றன. மாவீரர்களான உங்கள் கனவுகள் நனவாகிக்கொண்டிருக்கின்றன. எங்களுடன் சேர்ந்து இம் மகிழ்ச்சியை கொண்டாட இன்று நீங்கள் இல்லை....

நாதண்ணை நாம் உங்களை நேசித்தோம்
நீங்கள் நாட்டை நேசித்ததால்!
நீங்கள் எங்களை நேசித்தீர்கள்
உங்கள் சுமையில் பங்கெடுத்ததற்காய்!
கஜன் அண்ணை! நீங்கள் ஒரு கலையின் வடிவம்
எம் தேசத்தின் விடியலை – நீங்கள்
கலையில் சித்தரித்தீர்கள் – உங்கள்
கலையை நாம் நேசித்தோம்.

- அன்புத் தம்பிகள்

இவ்வருட கார் ஓட்டப் பந்தயம் ஃபறாறியின் ஆண்டாக முடிவு

இவ்வருடத்தின் 17 ஆவதும் இறுதியுமான கார் ஓட்டப் பந்தயம் (FORMULA-1) 22.10.2000 அன்று மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் மிக விமர்சையாக முடிவுற்றது. கடந்த ஜப்பான் போட்டியில் ஓட்டுநர் சம்பியனாக மிகைல் சூமாக்கர் தெரிவுசெய்யப்பட்ட நிலையில் காரின் சம்பியன் ஃபேறாறியா? மக்லேறனா? என்பதை முடிவுசெய்யவேண்டிய போட்டியாக இப்போட்டி அமைந்தது. 310.408 கிலோ மீற்றர்கள் கொண்ட 56 சுற்றுவட்டப் போட்டியின் முதல் 17 சுற்றுக்களிலும் மக்லேறன் ஓட்டுநர்கள் ஹக்கினன், குல்தாட் மாறிமாறி முன்னின்றனர். ஆனால், 18வது சுற்றில் நிலமையை மாற்றிய ஃபேறாறி ஓட்டுநர்கள் சூமாக்கர், பார்ச்சிலோ இறுதிவரை மக்லேறன் ஓட்டுநர்களுக்கு இடமளிக்காது தமது நிலையை தக்கவைத்துக் கொண்டனர். இறுதியில் மூன்றாவது தடவை சம்பியனாகிய 31

வயதான சூமாக்கர் தனது 144 ஆவது போட்டியில் 44 ஆவது வெற்றியைப் பெற்றுக்கொண்டார். இவரின் நேர்த்தியான இவ் வெற்றிமூலம் இவ்வருடக் கார்கள் நிலையிலும் ஃபேறாறி சம்பியனாக வலம் வரப்போகின்றது. இறுதி நேரத்தில் சூமாக்கரின் வெற்றிவாய்ப்பை முறியடிப்பதுபோல் கடும் முயற்சிசெய்த குல்தாட் 0.732 செக்கன்களால் வெற்றி வாய்ப்பை நழுவவிட்டு இரண்டாம் இடத்தைப்பெற்றுக்கொண்டார். மூன்றாம் இடம் ஃபேறாறி ஓட்டுநர் பார்ச்சிலோவுக்கு கிடைத்தது. ஹக்கினனால் நான்காம் இடத்தையே பெறமுடிந்தது.

இவ்வருடக் கார் ஓட்டங்கள் முடிவுற்ற நிலையில் ஓட்டுநர்கள், கார்களின் நிலை பின்வருமாறு:

ஓட்டுநர்	புள்ளிகள்	கார்	புள்ளிகள்
1. மைக்கல் சூமாக்கர்	108	1) ஃபறாறி	170
2. ஹக்கினன்	89	2) மக்லேறன்	152
3 குல்தாட்	73	3) வில்லியம்ஸ்	36
4. பார்ச்சிலோ	62	4) பெனட்டன்	20
5) றோல்ப் சூமாக்கர்	24	5) கொண்டா	20

தொகுப்பு: பொன். தாமோதரம்

சார்ஜாவில் முத்தரப்புக் கிரிக்கட் போட்டி

பாலைவன தேசமாக இருந்தாலும் கிரிக்கட் போட்டிகளுக்காகப் பணத்தைக் கொட்டி கிரிக்கட் சோலைவன மாக்கிக் கொண்டிருப்பது சார்ஜா. பல நாடுகளை வரவழைத்துப் போட்டிபோடவைக்கும் இந்தத் தேசத்தில் தற்போது முத்தரப்பு ஒருநாள் பந்தயங்கள் நடைபெறுகின்றன. இந்தியா, சிறீலங்கா, சிம்பாவே அணிகள் இம்முறை முத்தரப்பு மோதலில் குதித்திருக்கின்றன.

20.10.2000 அன்று தொடங்கிய முதலாவது போட்டியில் இந்தியாவும், சிறீலங்காவும் மோதின. முதலில் துடுப்பாடிய இந்தியா தனது துடுப்பாளர்களை விரைவில் இழந்துகொண்டாலும், உலக சாதனையாளர் டெண்டுல்கர் அற்புதமாக மட்டை பிடித்துத் தனது 26-வது சதமாக 101-ஐ பெற்றார். ஆனாலும், அணியின் நிலை அவ்வளவு பெரிதாக ஏறவில்லை. 224-ஐ மட்டுமே பெற்றபோது பதிலுக்காடிய சிறீலங்கா அர்நொல்டின் 59 உடன் 5 விக்கட் இழப்பில் வெற்றியை அண்மித்தது.

21.10.2000 நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சிறீலங்கா சிம்பாவேயை எதிர்கொண்டது. முதலில் துடுப்பாடிய சிம்பாவே அன்ரி புளோவரின் ஆட்டமிழக்காத 120 உடன் 50 ஒவர்கள் முடிவில் 4 விக்கட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்காடிய சிறீலங்கா இப்போட்டியிலும் வெற்றிபெற்றது. ஜெயசூரியா 78, அதபத்து 90 பெற்று 3 விக்கட் இழப்புடன் மட்டும் இலக்கு பூர்த்தியானது.

22.10.2000 நடைபெற்ற மூன்றாவது போட்டி மிகவும் விறுவிறுப்பாகி சிம்பாவேயை இந்தியா வென்றது. முதலில் துடுப்பாடிய இந்தியா மந்தமாக ஆடியபோதும் இறுதி 5 ஓவர்களில் காட்டிய அதிரடி அணியை 265க்கு உயர்த்தியது. ராவிட் கூடிய ஓட்டமாக 85ஐ பெற்றார் பதிலுக்காடிய சிம்பாவேசார்பில் அன்ரிபுளோவர் 63, கார்லிஸ்ல் 60 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தினர். ஆனாலும் பின் வந்த வீரர்கள் சரியாகப் பிரகாசிக்காது போக 252 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுகளுடன் இரு போட்டிகளில் எதிர்கொண்டு புள்ளியடிப்படையில் முதல் இரு இடங்களையும் பெறுபவர்கள் 29.10.2000 இறுதியாட்டத்தில் மோதவுள்ளனர்.

தோல்வியை தழுவிக்கொண்டார் வீனூஸ் வில்லியம்ஸ்

அண்மைக்காலமாக பலமுக்கிய வெற்றிகளுடன், சிட்னி ஒலிம்பிக்கிலும் தனியாட்டம் இரட்டையர் ஆட்டம் இரண்டிலும் தங்கம் வென்ற வீராங்கனை வீனூஸ் வில்லியம்ஸ் அஸ்திரியா லின்ஸ் நகரில் நடைபெற்ற டெனிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் தோல்வியைத் தழுவியுள்ளார். 20 வயதில் கொடிகட்டிப் பறக்கும் வீனூஸ் உலகத்தரத்தில் மூன்றாம் இடத்திலுள்ளார். வீனூஸ்சின் கடந்தகால தொடர் வெற்றியை மற்றொரு அமெரிக்கரும் 2ம் இடத்தை வைத்திருப்பவருமான டவன்பேட் 22.10.2000 அன்று தகர்த்துள்ளார். இறுதியாட்டத்தில் மோதிய இவர்களில் இருவருமே சளைக்காது ஆடி ஆளுக்கொரு செட்டை தமதாக்கினர் இந்தவேளை மூன்றாவது செட்டில் வீனூஸ் சோர்ந்துவிட டவன்போட் வெற்றியை தனதாக்கினார். 6:4, 3:6, 6:2 என்ற டவன்போட்டின் வெற்றியால் 5,35,000 அமெரிக்க டொலர்கள் பரிசாகவும் கிடைத்தது.

வீடுகள் விற்பனைக்கு

பாண்டிச்சேரி வெங்கட்நகரில் வீடு வாங்க விருப்பமா?

நகரின் மத்தியில் இருந்து, ஐந்து நிமிட நடை தூரத்தில் உங்கள் வசதிகளுக்கு ஏற்றபடி வீடுகள் விற்பனைக்குண்டு.

இரு அறை கொண்ட வீடுகள், மூன்று அறைகள் கொண்டவை, இரண்டு அல்லது மூன்று மாடிகள் கொண்ட தனி வீடுகள் அனைத்து வசதிகளுடனும் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:

திரு.திருமதி. SIVA VIZEANE SIVARAMANE
0091 413 338737
அல்லது திரு. BASILE JOSEPH
0091 413 337764

Pub.Fr.

ANNONCE

INVESTISSEMENT SÛR NE CHERCHEZ PLUS DEVENEZ PROPRIETAIRE

Vous êtes homme/ femme d' affaires, investisseur ou retraité heureux, désirant vivre dans votre appartement de type F2 ou F3, proche de toutes commodités, avec ascenseur dans un petit immeuble de deux ou trois étages VENKATANAGAR, Pondichéry, à cinq minutes à pieds du centre ville.

Contactez rapidement.

Mme et Mr SIVA VIZEANE SIVARAMANE, Architecte Ingénieur et promoteur au 00 91 413 33 87 37 ou bien Mr. BASILE Joseph, I'Ingénieur et haut fonctionnaire et d'Etat en retraite au 00 91 413 33 77 64.

Extrait du TRAIT- D'UNION (organe de l'amitié franco-indienne) septembre 2000.

நேயர்களுக்கு எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பொங்கல் நாள் முதல் ஒரு புதிய உலகம்

IBC - TRT நிறுவனங்கள்

இணைந்த புதிய தொலைக்காட்சி

தைத்திருநாளில் தமிழர் இல்லம் வருகிறது

- தரமானதொரு தொலைக்காட்சியைத் தரும் நோக்குடன் IBC, TRT கைகோர்த்துக் கொண்டமை நீங்கள் அறிந்த செய்தி
- இந்த இணைவை விரும்பாத பணியாளர்களின் திடீர் வெளியேற்றமும் அதனால் ஏற்பட்ட தடங்கலும் அசௌகரியங்களும் நீங்கள் உணர்ந்த விடயங்கள்
- தொடர்ந்தும் TRT-தமிழ் ஒளி நிகழ்ச்சிகள் சீரமைக்கப்பட்டு ஒளிபரப்பப்படுவதும் நீங்கள் அறிந்ததே
- ஆனால் தற்போது நீங்கள் பார்ப்பது, ரசிப்பதுதான் எமது புதிய தொலைக்காட்சி என நீங்கள் எண்ணினால் அது தவறு.
- IBC, TRT இணைந்த புதிய பெயருடனான தொலைக்காட்சி இதே அலைவரிசையில் அறிமுகப்படுத்தப்படும்

இவ் வாரம்...

26.10.2000 தீபாவளி சிறப்பு நிகழ்ச்சி

★★★

கவிஞர் வைரமுத்துவின்

கவிதை நேரம் தொடர்

பிரதி சனி / ஞாயிறுகளில் மாலை 7.30 மணி

REUTERS

ராய்டர் (Reuters) சர்வதேச செய்தி நிறுவனத்திடமிருந்து செய்திக்கான ஒளிப்படங்கள் பெறப்படுகிறது

செய்தி நேரம் சீரமைக்கப்படுகின்றது

இன்னும் பல புதிய தொடர்களும் நிகழ்ச்சிகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன

இந்த முயற்சிக்காய்

- புதிய நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.
- மேன்மையான தொழில்நுட்பம் திரட்டப்படுகின்றது.
- அனுபவமும் முதிர்ச்சியும் மிக்க பணியாளர்கள் இணைக்கப்படுகின்றனர்.
- பயிற்சிப் பட்டறைகள் பல நடாத்தப்படுகின்றன.
- ஒவ்வொரு நாடுகளிலும் தயாரிப்பு நிறுவனங்கள் நிறுவப்படுகின்றன.

★★★

உங்கள் வாசல் தேடி ஒரு புதிய உலகம் உங்கள் உணர்வுகளுக்கு உயிர் கொடுக்க வருகின்றது.

அதுவரை தமிழ் ஒளி மெருகூட்டப்பட்ட புதிய புதிய நிகழ்ச்சிகள் மூலம் உங்களை மகிழ்விக்கும்.

கடந்த சில மாதங்களாக சந்தாவைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் நவம்பர் 1ம் திகதிக்குள் எமது தொடர்பாளர்களிடம் பெயர்களைப் பதிவு செய்து 2001ம் ஆண்டிற்கான முழுச் சந்தாவை மட்டும் செலுத்தி இப்போதிருந்தே எமது தொலைக்காட்சியை பார்ப்பதை உறுதிப்படுத்துங்கள்.

(2001-ற்கான வருட சந்தாவை நவம்பர் 15ம் திகதிக்குள் செலுத்தினால் இதுவரையான நிலுவை செலுத்தவேண்டியதில்லை)

எமது தொடர்பாளர்கள்

FRANCE
LUNE INTERNATIONAL - 01 42 09 21 43
KUMAR SHOP - 01 42 59 35 10

SWITZERLAND
MOORTHY Master - 0618131552

SWISS
NEW MILLENIEM COMPUTERS AND ELECTRONICS.
Tellstr.31, 8004 Zurich
TEL.01/240 25 08
FAX.01/240 30 85

LONDON
IBC - 00442077878000

SWISS
ASIAN ENTERPRISE
Hohlstr.535, 8004 Zurich
TEL.01/431 99 67 / FAX.01/431 99 69

SWISS
THAMILARSI JEWELLERY
Neugasse 58, 8005 Zurich
TEL.01/440 60 50 / FAX.01/440 60 52

GERMANY
LEEMA மக்கள் கடை (Neuss) - 02131546311

மேலதிக முகவர்கள் பற்றிய விபரம் அடுத்த இதழில் தரப்படும்

திருமலை இராணுவத் தளங்கள் மீதும் தாக்குதல்

திருமலை கடற்படை இறங்கு துறை மீது தாக்குதல் நடாத்தப் பட்ட அதேவேளை திருமலையில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இறங்கு துறை மீதான தாக்குதலில் கடற்படையினருக்கு உதவியாக இவ் இராணுவ முகாம்களில் இருந்து துருப்பினர் வருவதை தடுக்கும் முகமாகவே விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், இறங்குதுறை மீதான தாக்குதலையடுத்து கொக்கிளாய் கடல்நீரேரியில் கடற்புலிகளுக்கும் சிறீலங்கா கடற்படையினருக்கும் பிறிதானதொரு கடற்சமர் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது.

ஐ.தே.க – பொ.ஐ.மு ஒப்பந்தம்

(23.10.00)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தீர்மானித்துள்ள ஐக்கிய தேசியக்கட்சி அம் முயற்சிகள் கைகூடப்பட வேண்டுமானால் சில நிபந்தனைகள் நிறைவேற்றப் பட வேண்டும் எனவும் அதற்காக இவ் அரசிற்கு 69 நாட்கள் காலக்கெடுவும் விதித்துள்ளது. இவ் ஒப்பந்தத்தின்படி எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கும் அரசைக் கவிழ்க்க ஐ.தே.க. முயற்சிக்காது எனவும் அதற்கு கைமாறாக ஐ.தே.கவின் சில நிப்ந்தனைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் எனவும் ஐ.தேக. தரப்பில் கோரப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு முஸ்லீம் காங்கிரசும், ஈ.பி.டி.பியும் அழுத்தங்களை கொடுப்பதை தடுப்பதற்காகவே இவ் ஒப்பந்தம் மேற்கொள்ளப் படுவதாக தெரியவருகிறது.

5 ஆண்டுகளில் 84 விமானங்கள் இழப்பு

இந்தியாவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 84 விமானங்களை விமானப் படை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் சுமார் 866 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான விமானங்களில் மிக்-21 ரகத்தை சேர்ந்த 60 விமானங்களும், மற்றும் மிராஜ்-2000, மிக்-29, எம்-17 விமானங்களும் எம். ஐ-18 உலங்குவானூர்திகளும் அடங்கியுள்ளன. இவ் விபத்துக்களில் 34 விமானிகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்தை....

தப்பட்டது விடுதலைப் புலிகளின் துறைமுகம் நோக்கிய நகர்வினை எடுத்துக் காட்டுவ்தாகவும் தெரிவித்த அவ் ஆய்வாளர்கள், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் இக்கலம் வீழ்ந்துள்ளதால் அதில் சென்ற விமானப் படையினர் பற்றிய நிலையை சிறீலங்கா விமானப் படையினர் அறிய முடியாது உள்ளதாகவும், முற்றாக சேதமடையாத நிலையில் இவ்வானூர்தி வீழ்ந்திருக்குமேயானால் இக்கலம் விடுதலைப் புலிகளுக்கு பெரும் இலாபமாக அமையும் என்பதில் ஐயமில்லை எனவும் தெரிவித்துள்ளனர். ஆயினும் வான்பரப்பிலேயே இக்கலம் வெடித்துச் சிதறியதாகவும் பிறிதான செய்திகள் தெரிவிக்கின்றன. திருமலைத் துறைமுகத்திற்கு அருகே விமான எதிரப்பு ஏவுகணை கொண்டு இக்கலம் சுட்டுவீழ்த்தப்பட்டமை விமானப்படை வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்ரன்...

the Rights and Liberation of People) என்ற அமைப்பின் செயலாளர் வெரேனா கிறாவ், இந்த நூலின் தேவையையும் வெளியுலகத்திற்கு தெரியாத பல விடயங்கள் இந் நூலின் மூலம் வெளிச்சத்திற்கு வருகிறது என தெரிவித்ததுடன் நூலில் உள்ள பல விடயங்களையும் சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய இன்ரர் பெத் (Interfaith International) அமைப்பைச் சேர்ந்த திரு. சார்-ள்ஸ் கிறேள்ஸ் அவர்கள், சிறீ லங்காவின் அரசியல் போக்கானது பௌத்த மதம் சார்ந்தே காணப்படுகிறது என்பதை இந் நூலாசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளார் எனக் குறிப்பிட்டார்.

இவர்களின் உரையைத் தொடர்ந்து அருட்திரு இமானுவேல் அவர்கள் நூல் பற்றிய தனது மதிப்பீட்டினை முன் வைத்தார். இந்த நூலாசிரியரான திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்களை மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதற்கு சிறீ லங்கா அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை. இதனால் துரதிஷ்டவசமாக இந்நூலிலுள்ள கடிதங்களை ஆசிரியர் பிரசுரிப்பதில் காலதாமதமாகியது. எனினும் இந் நூலிலுள்ள கடிதங்களை ஆசிரியர் துல்லியமாகவும் ஆணித் தரமாகவும் வெளியிட்டுள்ளார். இதற்கு பக்கபலமாக நின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற் போக்குவரத்துச் சேவைக்கும், மனிதாபிமான முறையில் அவருக்குச் சிகிச்சையளித்த நோர்வே நாட்டரசுக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

அதனை தொடர்ந்து நூலின் முதல் பிரதியை அருட்திரு இமானுவேல் அவர்கள் வெளியிட்டு வைக்க, Fachstelle Migration, Ref.church Bern-Jura என்ற அமைப்பைச் சேர்ந்த திருமதி பிறிக்கிற் மோர்கன்தாலர் சுப்பிரமணியம் அவர்கள் பெற்றுக் கொண்டார். நூலைப் பெற்றுக் கொண்டு அவர் உரையாற்றுகையில், அண்மையில் சாவகச்சேரிப் பகுதியில் நடந்த பேரழிவுகளையும் மக்கள் படுகின்ற துன்பங்களையும் எடுத்துக் கூறியதுடன் நூலாசிரியரை சில ஆண்டுகளுக்கு முன்னர் பேர்ண் நகரில் தாம் சந்தித்துப் பேசிய நிகழ்வினையும் குறிப்பிட்டார்.

இந் நூல் வெளியீட்டு விழாவில் ஐநா. மனித உரிமை ஆணைக்குழுவுடன் தொடர்புடைய பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகர்கோவில்....

மட்டுவாள் - கிளாலி - நாகர்கோவில் ஆகிய இராணுவ முகாம்களுக்கு இடையிலான தொடர்புகள் விடுதலைப் புலிகளால் முற்றாக துண்டாடப்பட்டுள்ளன. கடைசியாக நாகர்கோவில் தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தளத்தின் ஆயுததளவாடக் களஞ்சியங்கள் மீதும் விடுதலைப் புலிகள் கடுமையான எறிகணை வீச்சுக்களை நடாத்தி களஞ்சியங்களுக்கு கடுமையான சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடை அருகில்)

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

திங்கள் முதல் - சனி வரை 09.00 - 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris _ Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

Pub

www.Jaffnaboys.com
www.kathalan/com

புதிய இணைத்தளங்கள்
- இணைய வானொலி
- கவிதைகள்
- புதிய-பழைய திரைப்படப் பாடல்கள்
- வாழ்த்து மடல்கள் – நேரடி உரையாடல்கள்

இன்னும் பல பல......

இணையம் ஊடாக விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
Kamalan2000@Yahoo.com
Tkamalamuthan@Hotmail.com
Yoges33@ hotmail.com.

31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அந்தோனிப்பிள்ளை மேரி யோசவ்
(தங்கமணிமாலை – சில்லாலை)

நாட்கள் உதிர்ந்து 31 நாட்கள் ஆகின்றன. அன்றும் இன்றும் உம் அன்பு பொங்கி பொங்கி வழிகின்றதே. அன்பும் பண்பும் ஊட்டி வளர்த்த தந்தையே! எல்லோர் நெஞ்சம் நிறைந்தவரே! வல்லோன் மஞ்சம் உறைந்தவரே! உம்மை சந்திக்கும் நாள் வரை சிந்திக்க மறவோம் சாந்தி! சாந்தி!

எமது தந்தையின் மரணச் செய்தி கேட்டு, நேரில் வந்தும், தொலைபேசி மூலமும், தந்தி, கடிதமூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர்வரும் 28.10.00 சனிக்கிழமை 3 மணிக்கு (சப்பல் கொன்சியான்சிலேஸ், 57, Bd. Belleville, Paris 75011) தேவாலயத்தில் அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலிப் பூசையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
Tel: 02 32 55 90 42

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும் காலை 10.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்

மங்கையர்க்கொரு மாளிகை தங்க மாளிகை

Thanga Maligai Jewellers

Amalia House

ஜுவல்லர்ஸ்

276, Lewisham High Street,
London,
SE13 6JZ.

Tel: 020 8690 3686
Fax: 020 8690 4157

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

நாகர்கோவிலில் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள்

மினிமுகாம் அழிப்பு - 200 படையினருக்கு மேல் பலி

(23.10.00)

யாழ்குடாவிலுள்ள சிறீலங்கா இராணுவ தளங்களுள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் நாகர்கோவில் தளத்தின் மீது விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் நான்கு படையணிகள் மேற்கொண்ட தொடர்ச்சியான அதிரடித் தாக்குதல்களால் பிரதான தளத்தின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்ட மினி முகாம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதுடன் அங்கிருந்த ஆயுத தளவாடங்களும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. கிளாலித்தளம் மீதான தாக்குதலை எதிர்பார்த்திருந்த இராணுவத் தரப்பிற்கு சற்றுமே எதிர்பார்க்காத வகையில் நாகர்கோவிலில் ஓயாத அலைகள் படையணி தமது அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. தொடர்ச்சியான இவ் அதிரடித் தாக்குதல்களின் மூலமாக 200 படையினருக்கு மேல் கொல்லப்பட்டு 400 படையினருக்கு மேல் காயமடைந்துள்ளனர். அத்துடன் சில கிலோ மீற்றர் நிலப்பரப்பும் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையே நாகர்கோவில் மீதான தாக்குதல்கள் புலிகளினால் கடுமையாக மேற்கொள்ளப்பட்டு மினிமுகாம் கைப்பற்றப்பட்டுள்ளது. இம் மினி முகாமில் கொல்லப்பட்டவர்கள் போக மிகுதியானோர் பிரதான தளத்துக்கு ஓடித்தப்பியுள்ளனர். இம்முகாமில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளவாடங்களின் பெறுமதி பல மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்தவை என புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது. வெள்ளிக்கிழமையின் தாக்குதலின் பின்னர் மீண்டும் ஞாயிறன்று விடுதலைப் புலிகளின் இன்னொரு பாரிய அதிரடித் தாக்குதல் நாகர்கோவில் பிரதான விநியோகப் பாதையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தாக்குதலின் விளைவாக பிரதான விநியோகப் பாதையில் அம்பன் — தரவைப் பகுதிக்கு இடையே விடுதலைப் புலிகள் ஊடறுப்பு துண்டாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகர்கோவில் தாக்குதலில் எம்.ஐ-24 ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரின் ஏவுகணைத் தாக்குதலில் வீழ்த்தப்பட்ட ரஷ்ய தயாரிப்பான எம்.ஐ—24 உலங்குவானூர்தி வகையை சார்ந்தது.

நாகர்கோவில் இராணுவத்தள விநியோகப்பாதை துண்டிப்பு

இராணுவக் களஞ்சியம் மீதும் தாக்குதல்

(23.10.00)

சிறீலங்கா இராணுவத்தின் நாகர்கோவில் இராணுவத்தளம் மீது விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் படையணி தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் தாக்குதலின் விளைவாக இத் தளத்திற்கான பிரதான விநியோகப்பாதை துண்டாடப்பட்டுள்ளதுடன் அப்பிரதேசங்கள் யாவும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. தற்பொழுதுள்ள கள நிலவரப்படி எழுது

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

துறைமுகத்தை புலிகள் நெருங்கிவிட்டனர்

(23.10.00)

இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட திருமலை கடற்படை இறங்குதுறை மீதான தாக்குதலுடன் விடுதலைப் புலிகள் திருமலைத் துறைமுகப்பகுதியை மிக நெருங்கியிருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கடற்படைத் தளத்திற்கு அருகே எம்.ஐ-24 உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

அன்ரன் பாலசிங்கம் அவர்களின் நூல் ஜெனீவாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது

(23.10.00)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் த பொலிற்றிக்ஸ் ஒப் டுப்பிளிசிற்றி (The Politics of Duplicity - நயவஞ்சக அரசியல்) என்ற சிறீலங்கா அரசிற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1995ம் ஆண்டு ஆறு மாத காலமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது பரிமாறப்பட்ட கடிதங்களின் விபரங்களை உள்ளடக்கிய நூல் ஜெனீவாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கடந்த 17ம் திகதி ஜெனீவாவில் அமைந்துள்ள சர்வதேச மையக் கட்டடத்தில் அருட்திரு இமானுவேல் அவர்களின் தலைமையில் அமைதி வணக்கத்துடன் நடைபெற்றது.

இவ் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய லிப்லிப் (International League for

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 02084236321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub